சுதே

த்தி

டம்பர் 30,1956 விலை 4 அணா



5
பம்பாய் மெயில்
பாலாமணி
பம்பாய் மெயில் நாடகத்தன்
எட்டு மணியிலிருந்தே டிக்கட்
விற்பனையாக ஆரம்பித்
தன.
டிக்கட் விற்குமிடம்
இரவு, நாடகம் ஆரம்பிப்பதற்கு வெகு நேரம் முன்னதாகவே, கொட்டகை ஜனசமுத்திரத்தால் நிரம்பி விட்டது.
நாடகம் ஆரம்பிப்பதை நிமிஷத்திற்கு நிமிஷம் ஆவலோடு எதிர்பார்த்து உட்கார்ந்திருந்தனர் ரஸிக மஹா ஜனங்கள்.
இப்போ மணி என்னாங்க இருக்கும்?
எட்டரை மணி ஆகிறது. இன்னும் அரை மணியில் ஆரம்பமாயிடும்.
மணியும் ஒன்பது ஆயிற்று. ஆனால் திரை தூக்கப் படவில்லை.
நேரம் ஓடிக்கொண்டிருந்தது. மணி பத்து ஆகி, பதினொன்றும் அடித்து விட்டது. ஜனங்களின் பொறுமை எல்லை கடந்து விட்டது.
டேய்! எங்கேடா வாடா வெளியே!
உய்....ய்
ஹோ! ஹோ!
ஏய்! உடனே ஆர பிக்கிறயா? மண்டை பிஞ்சு பறக்கும் ஜாக்கிரதை!
ஜனங்கள் ஆர்ப்பாட்டம் செய்வதைக்கண்ட பாலாமணி மேடையில் தோன்றினாள்.
பொது ஜனங்களே! பம்பாய் மெயிலாக நடிக்கும் ராஜப்பா, ஏதோ காரணத்தால் இன்னும் இவ்விடம் வந்து சேரவில்லை. அவர் இன்னும் சிறிது நேரத்திற்குள் வந்து விடுவார் என்று எதிர்பார்க்கிறோம். ஆகையால் தயவு செய்து பொறுத்துக் கொள்ளுங்கள்.
முடியாது! இனி பொறுக்க முடியாது. நாடகத்தை உடனே ஆரம்பிக்கிறயா? அல்லது பணத்தை வாபஸ் செய்கிறயா?
சரி! நாடகத்தை ஆரம்பித்து விடுவோம். தாமதித்தால் மக்களின் கோபத்துக்கு ஆளாக நேரிடும். ராஜப்பா தோன்றும் கட்டம் நான்கு சீன்களுக்கு அப்புறம் தானே வருகிறது?

பொருளடக்கம்

Vol. XXVII] துன்முகி ஹூ புரட்டாசி ௴ 15௨ செப். 30 1956. [No. 35

யாருக்கு பாதுகாப்பு?		3
காற்றுவாக்கிலே	—அரட்டை	4
பிரமுகர் வரிசை		5
வைரக்கல்	—ஸி. ஆர். ராஜம்மா	6
தபால்கள்		10
நடந்த விஷயம்	—என். பி. ஹரிஹரன்	12
கண்மணியின் மறு வாழ்வு	—வி. நடராஜன்	13
படித்திருக்கிறீர்களா?	—க. நா. சுப்ரமண்யம்	17
மதுரங்கிளியாள்	—அருள் செல்வநாயகம்	19
சந்திப்பு	—விஜயஸ்ரீ	23
திரைக்குப்பின்	—ஆர்வி	27
நவ நாகரிகக் குறிப்புகள்	—காசினி	32
வைத்தியரைக் கேளுங்கள்	—குச்சாமாமா	33
விக்கிரமாதித்தன் கதைகள்	—சாலிவாஹனன்	35
நாகலோகம்	—அஸ்வத்தாமா	36
என் தங்கம்	—என்னெஸ்வீ	40
மோகமுள்	—தி. ஜானகிராமன்	43
ஹாஸ்யமே உலகம்		49
சாரணர் உலகம்	—சித்தார்த்தன்	50
கலாமண்டபம்		51
நகர அரங்கம்	—ஸஞ்சாரி	54
துட்சிதர் கீர்த்தனை		55

"மித்திரன்" வாரப்பதிப்பில் வெளிவரும் கதைகளில் பெயர்கள், சம்பவங்கள் எல்லாம் கற்பனையே: அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல

...தேசமித்திரன்' விளம்பர மானே... பதவியேற்குமுன் ஸ்ரீ கே. ராம... திரனை பம்பாய் 'வெளியூர் பத்... கைப் பிரதிநிதிகள் சங்கம்' குல் ஹோலில் நடந்த பாராட்டு விழாவில் ...தவாகப் போற்றியது. சங்கத்தின் ...யதரிசியாக இருந்து ஸ்ரீ ராமபத்திரன் ஆற்றிய அரிய சேவைக்குப் பாராட்டாக ஒரு வெள்ளிப் பேழையும் வழங்கப்பட்டது. விழாவுக்கு ஜே. வால்டர் தாம்ப்ஸன் ஸ்தாபனத்தின் ஸீனியர் நிர்வாக அதிகாரியான ஸ்ரீ அஜாஜ் எஸ். பீர்பாய் தலைமை வகித்தார். சங்கத் தலைவர் ஸ்ரீ பால் எம். ஜான், ஸ்ரீ ஹரிஷ் ஸி. ஜெயின், ஸ்ரீ எஸ். பி. எஸ் தலேயர்கான், ஸ்ரீ ரே சௌத்ரி, ஸ்ரீ ஓ. என். வர்மா ஆகியோர் ஸ்ரீ ராமபத்திரனின் சலிப்பற்ற சேவையையும், திறமையையும் வெகுவாக சிலாகித்துப் பேசினர். கூட்டுக் காரியதரிசி ஸ்ரீ வி. எச். ராம்நாத் நன்றி கூறினர்.

காலச் சக்கரம்
சீனர் பற்றிய பீதி
இது இவ்வளவு நாளாக
இங்கேயேதான் இருந்ததா!
ஸூயெஸ் விஷயத்தில் முரட்டுப் பிடிவாதம்
பிரிட்டன்
பிரான்ஸ்
போஷாக்குக்கு பேர்போனது இந்தமாட்டின் பால்
இந்திய கலாசாரம்
இந்திய எருமைகளை சீனா தருவிக்கப் போகிறதாம்
— செய்தி
O.OMMEN
இறங்கி வாரும்; அங்கேயே தங்கி விடமுடியுமா?
அமெரிக்கா

வாழிய செந்தமிழ்
சுதேசமித்திரன்
வாழ்க நற்றமிழர்
வாரப்பதிப்பு

★

யாருக்குப் பாதுகாப்பு?

சென்னை அஸெம்பிளியில் நிறைவேறிய சாகுபடியாளர் பாதுகாப்புச் சட்டத்தால் விவசாயிகளில் எந்தத் தரப்புக்காவது உண்மையில் அனுகூலம் ஏற்படுமா என்பது சந்தேகம். அதற்கு மாறாக, நிலச்சொந்தக்காரர், சாகுபடியாளர் இவர்களிடையே பூசல்கள் பெருகி, வியாஜ்யங்கள் செழிக்கத்தான் இது உதவுமென்று எண்ணுகிறோம். இரண்டு வேலி அதாவது (நன்செய்) 13-2/3 ஏகருக்கு மேற்படாத நிலமுள்ளவர்கள் அதை வாரத்திற்கு விட்டிருந்தால் அந்த நிலத்தில் ஒரு பகுதியை சொந்த சாகுபடிக்குத் திரும்பப் பெறலாம் என்பது இதில் இடம் பெற்றுள்ள ஒரு ஷரத்து. ஆனால் இவ்வாறு திரும்பப் பெறும் நிலத்தின் அளவு ஏற்கெனவே அந்த நிலச்சுவானிடம் சொந்த சாகுபடியிலுள்ள நிலத்துடன் சேர்ந்து ஐந்து ஏகருக்கு மேல் போகக்கூடாது. அதாவது ஏற்கெனவே மூன்று ஏகரா அவரிடம் சொந்தச் சாகுபடியிலிருந்தால், இரண்டு ஏகரா தான் சாகுபடியாளரிடமிருந்து திரும்பப் பெறலாம்.

மேலும், ஒரு நிலச்சுவான்தாருக்குப் பல இடங்களில் சிறு சிறு துண்டு நிலங்கள் நன்செய்யாகவும், புன்செய்யாகவும், தோட்ட நிலமாகவும் இருக்கக்கூடும். இவற்றை நன்செய்க் கணக்கில் மாற்றிப் பாதியைக் கணக்கிடுவதிலுள்ள சிக்கல்களை விவரிக்கத் தேவையில்லை. மேற்குறித்த சிறு நிலச்சுவான்கள் வாரத்திற்கு விட்ட நிலத்தில் பாதியை, ஆனால் ஐந்து ஏகராவுக்கு மேற்படாமல், சொந்த சாகுபடிக்குத் திரும்பப் பெறலாம் என்று இச்சட்டம் விதிக்கிறது. இதன்படி பத்து ஏகரா உள்ளவர்கள் உயர்ந்தபட்சமான அனுகூலம் பெற முடியும். ஆனால் நான்கு ஏகரா உள்ளவர்கள் இரண்டு ஏகராவை அல்லது இரண்டு ஏகரா உள்ளவர்கள் ஒரு ஏகராவை சொந்த சாகுபடிக்குத் திரும்பப் பெறுவதால் அவர்களுக்கு என்ன நலமேற்படக்கூடும் என்பதை சர்க்கார் சிந்தித்திருக்க வேண்டும். தற்போதைய ஏற்பாட்டுக்கு மாறாக, ஒரு வேலிக்குக் குறைந்த நிலமுள்ளவர்கள் அவ்வளவையும் சொந்த சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று விதித்திருந்தால் அது சிறு நிலச்சுவான்களுக்கு உண்மையில் அனுகூலம் செய்வதாகும்.

ஆனால், தற்போதைய சட்டத்தில் ஒரு பகுதி சிறு நிலச்சுவான்களுக்கு அளிக்கக்கூடிய சொற்ப அனுகூலத்தையும் இன்னொரு பகுதி பறித்து விடுகிறது. இத்தகைய ஒரு நிலச்சுவான்தார் தமது நிலத்தில் பாதியை சொந்த சாகுபடிக்கு எடுத்துக்கொள்ள விரும்புகையில், அதை சாகுபடி செய்து வருபவர் 1955-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந் தேதிக்கு முன்னிருந்த விகிதப்படி வாரம் அல்லது குத்தகை கொடுப்பதாகச் சொன்னால், அந்த நிலத்தை சொந்தக்காரர் திரும்பப் பெற முடியாது; அந்த சாகுபடியாளரிடமே மேலும் விட்டுவைக்க வேண்டும். இதன் மூலம் சிறு நிலச்சுவான்தார்களுக்கு ஏதோ நன்மை செய்வதென்ற நோக்கம் அநேகமாக முற்றிலும் பாழாகிவிட்டதென்பதை எடுத்துக் காட்டத் தேவையில்லை. மேலும் சென்ற வருஷம் செப்டம்பர் மாதத்திற்கு முன்பு கொடுக்கப்பட்டுவந்த வாரம் அல்லது குத்தகையை நிர்ணயிப்பதில் தகராறுகள் ஏற்படக்கூடும். எனவே இத்தகைய இனங்களில் நிலச்சுவானும், சாகுபடியாளரும் மகசூலைத் தலைக்குப் பாதியாகப் பங்கிட்டுக் கொள்ளலாமென்று அஸெம்பிளியில் சில அங்கத்தினர்கள் யோசனை கூறினர். இது சிக்கலற்றதொரு ஏற்பாடு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதை சர்க்கார் ஏற்க மறுத்துவிட்டனர். மேலும் இச்சட்டத்தில் 'சொந்த சாகுபடி'யை விளக்கி வைத்துள்ள முறை மேற்கொண்டு தகராறுகளுக்கு இடங்கொடுப்பதாகும். ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறைவான நிலமுள்ளவர்களுக்கு இச்சட்டத்தினின்றும் விலக்களிப்பதென்ற யோசனையை சர்க்கார் ஏற்றுக்கொண்டிருந்தால் இவ்வளவு தொந்தரவுகளையும் தவிர்த்திருக்கக்கூடும். ஆனால் வரும் தேர்தலை முன்னிட்டுத்தான் சர்க்கார் இச்சட்டத்தை தற்போதைய உருவத்தில் நிறைவேற்றி வைத்திருப்பதாக கம்யூனிஸ்டுகள் குறை கூறினர். தேர்தலைப்பற்றித் தங்களுக்குச் சிறிதும் கவலையில்லை—நியாயம் ஒன்றுதான் தங்கள் குறி என்ற முறையில் கம்யூனிஸ்டுகள் பேசுவது நகைப்புக்கிடமானது. உண்மையில் தேர்தல் நோக்குடன் செயல் புரிவதாக இக்கட்சிகள் ஒன்றையொன்று ஏசுவது சத்திரத்தில் சாப்பிடப் போனவர்கள் ஒருவரையொருவர் பழிக்கும் கதையை நினைவூட்டுகிறது.

காற்று வாக்கிலே..

காதல் புதிர்!

காதலைப் பாடாத கவிஞனில்லை. உறவினத்திலும் காதலன், காதலி உறவு ஒப்பற்றதாம். அன்பிலேயே எப்படியோ நீண்ட நாள் நிலைக்கக்கூடியதாய் காதலன்பைத் தமிழகம், பாரதநாடு, செய்துவிட்டது. "சுட்டுஞ்சுடர் விழிதான் கண்ணம்மா" என்னும் போதினிலே ஒரு சொக்கு சொக்கிவிடுகின்றனர் நம் மக்கள். அகத்துறையிலிருந்து அறவே விலகினால் மக்கள் உள்ளத்தை ஆண்டவன்பால் திருப்ப முடியாதெனக் கண்டுதானோ என்னவோ, அகத்திலிருந்து விடுபட்டவரும் அகத்துறைப் பாடல்களை அதிகமாகப் பாடினர். நம்மாழ்வார், மாணிக்கவாசகர், வள்ளலார் முதலிய மகான்கள் சிற்றின்பத் துறைகளை வைத்துப் பேரின்பப் பொருளை விளக்கினர். திருக்குறளில் காமத்துப்பால் காதற்கலையின் பைஞ்சோலை. "காதலை வேண்டிக்கரைகின்றேன், இல்லையெனில் சாதலை வேண்டித் தவிக்கிறேன்" என்று பாடினர் நம் அமரகவி. பேடைக் குயிலைக் கண்ணுற்ற ஆணினங்கள் "மேனி புளகமுற, ஆற்றல் அழிவு பெற, உள்ளத் தனல் பெருக, சித்தந் தனதின்றி நாளொன்று போவதற்கு நான்பட்ட பாடனைத்தும் தாளம் படுமோ தறி படுமோ" என்றபடி இன்ப வேதனைப்படும் காதல் உலக முழுவதும் பரவிய நிலை.

மெய்க்காதல் நிறைவேறாததால் காதலர்கள் தற்கொலை புரிந்து கொள்வது பத்திரிகைகளில் அன்றாடம் காணும் கதை. உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பல புதுவகைக் காதல் கதைகளும் கடந்த சில நாட்களில் வெளி வந்திருக்கின்றன.

மும்முறை மணவாழ்க்கையின்பம் நுகர்ந்த ஆங்கிலேயப் பிரபு—93 வயது 'இளைஞர்'—தமது இல்லக்கிழத்தியும், செல்வச் சீமாட்டியுமான இந்திய மாதரசியிடமிருந்து விவாகரத்து கோரியிருக்கிறார். அவர் பிரிய விழையும் 'மடமங்கை'யின் வயதோ 53 தான். இப்புது உலக தம்பதி மணவினை முடித்து நான்கு ஆண்டுகளாகின்றன. ஊடலையும், பிணக்கையும் கண்டேனேயல்லால் கூடலின்பத்தை அனுபவிக்கவில்லையே யென்று ரொம்ப எச்சரிக்கையாகத் தொலை தூரத்திலிருந்துகொண்டு கதறுகிறார், இன்னமும் இளமை முறுக்குத் தளராத முது கிழவர். "வஞ்சித்து விட்டான் என் தலைவன்" என்று சினந்தெழும் சீமாட்டியோ தன் கணவர் இன்னொருவளின் மோக வலையில் சிக்கியிருப்பதாகப் புகார் செய்கிறார். 72 வயது மூதாட்டியொருத்தியின் காதற் சுவையில் தன் மணாளன் மனதைப் பறிகொடுத்ததே இந்த விபரீதப் போக்கின் காரணமென விம்முகிறார். புத்திரச் செல்வத்தைப் பெரிதும் விரும்பிய கோமகன் தன்னிடம் "ஆராக் கலப்பினமுத சுகந்தனையும்" அடைந்ததுண்டு என்று வெட்கத்தையும் மறந்து கூறுகிறார். உதறித் தள்ளியும்விட மனமில்லை. ஆசை வெட்கமறியாது. காதலுக்குக் கண்ணில்லை.

"நின்னையவன் நோக்கினன், நீயவனை நோக்கினாய், அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்து விட்டீர்" என்று கவி பாடலாம். "கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனுமில" எனலாம். ஆனால் காதல் கடிமணம் புரிந்துகொண்ட அமெரிக்க டென்னிஸ் விளையாட்டழகி ஐந்து வாரங்களாகியும் மணவினை பூர்த்தியாகவில்லையென்று பொருமி, பணக்காரக் கணவனிடமிருந்து விவாக ரத்து கோருகிறார். மங்கையர் மொழிவதை மறுப்பது மதிப்பு வாய்ந்த கணவானுக்குப் பண்பல்ல என்று எதிர்வழக்காட விருப்பமின்மையைத் தெரிவித்திருக்கிறார் கணவர்.

மேலைக் கோடியிலிருந்து பழம்பெரும் பாரதநாட்டிற்கு வருவோம். இளங்காதலர் திருவிளையாடல் ஹைகோர்ட் ஏறியது. நடுத்தெருவிலும் ஒரு பெண்ணுக்குப் பகிரங்கமாக முத்தம் கொடுக்கலாமா? கொடுக்கலாம்; அது குற்றமல்ல—பம்பாய் ஹைகோர்ட் தீர்ப்பு கூற நேர்ந்தது. ஆமதாபாத்தில் இந்து மதத்தைச் சேர்ந்த இளம் பெண்ணை முஸ்லிம் யுவரொருவர் கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டதாக இருவர் மீது வழக்கு. தென்னை மரத்தில் தேள் கொட்டியது, பனை மரத்தில் விஷமேறியது என்பதுபோல், எங்கேயோ, யாரோ, எப்பொழுதோ எழுதிய புத்தகத்தின் பேரால் இன்று இந்நாட்டில் வீண் சண்டை, கலவரம் மூண்டாலும் இக்காதல் விவகாரத்தில் மட்டும் ஜாதி, மத, நிற பேதமில்லை. பொதுமக்கள் புழங்கும் பூங்காவனத்தில் முத்தமிட்டுக்கொண்டது ஆபாசமானது, அருவருப்பானது என்று அந்த இளங்காதலர் மீது குற்றச்சாட்டு. கீழ்க்கோர்ட் மாஜிஸ்டிரேட் இளைஞருக்கு இருநூறு ரூபாய் அபராதம்விதித்தார். கன்னியைக் கண்டித்துவிட்டு விடுவித்தார். அப்பீல் எழுந்தது. பம்பாய் ஹைகோர்ட்டில் பிரசித்தி பெற்ற நீதிபதி தீர்ப்பளித்தார். நடுத்தெருவிலோ, அல்லது பூங்காவனத்திலோ முத்தமிடுவதற்குச் சட்டப்படி தடையெதுவும் கிடையாது. அம்மாதிரி முத்தமிடுவதால் பொதுமக்களுக்கு அருவருப்பு ஏற்படுகிறதா என்பதையே கவனிக்க வேண்டும். பருவப் பெண்ணுக்கு இளங்காளை முத்தம் கொடுப்பது ஆபாசமானது என்று மாஜிஸ்டிரேட் எண்ணியது தவறு என்று நேர்மையை நிலை நாட்டிய நீதிபதி வாலிபரை விடுதலை செய்தார். கருத்தொருமித்த காதலர் விளையாட்டு; விவகாரம் சுமுகமாக முடிந்தது.

சென்னை நகரிலோ தெருவில் சென்று கொண்டிருந்த நாட்டியக்காரியைக் கட்டித்தொட்டு மேலிதழ் கனியமுதம் கொடுத்த காளை, நடுக்கோர்ட்டில் மன்றாடி, மன்னிப்புக் கோரி, ஒரு முத்தத்துக்கு 75 ரூபாய் நஷ்டஈடையும் கொடுத்து, தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென ஓட நேர்ந்தது. அடாது செய்பவர் படாது படுவர்.

பெண்ணினுள் விளங்கும் சக்தியை உணர்ந்து, பெண்மைக்கு ஏற்றங்காட்டி, வாழ்கவெனக் கூத்தாடி, உய்ந்திட வழி தேடுகிறது காங்கிரஸ். வருகிற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டிபோட அதிகப் பெண்களுக்கு 'டிக்கட்' கொடுப்பதென்று தலைவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். இதுவரை தேர்தல்களில் பட்ட பாட்டின் படிப்பினையோ?

—அரட்டை

ஜெனிவா "மாண்ட்ரே எட்பிஜோ" காட்சியில் புதிய ஸ்விஸ் கடிகார மோஸ்தர்கள்

வரும் பருவத்தில் உலகத்தில் சிறந்த நாகரிகப்பிரியர்களின் அணிகலங்களில் ஒன்றாகப் போகும் புதிய ஸ்விஸ் ஆடம்பர கடிகாரங்களை, செப்டம்பரில் ஜெனிவாவில் குழுமியுள்ள ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் முதன் முதலாகப் பார்வையிட்டனர். இவ்வாண்டு, "மாண்ட்ரே எட்பிஜோ" வருடாந்திரக் கண் காட்சி, ஜெனிவாவின் ஆடம்பர ஹோட்டலான, ஹோட்டல் பியா ரிவேஜில் நடத்தப்பட்டது. துல்யமான ஸ்விஸ் கடிகார வேலைப்பாட்டுடன், ஜெனிவாவின் ஆபரண வேலைப்பாடு செய்வோரின் நளினமான கைத்திறனும் கலந்து உருவான கடிகாரங்களைக் காட்சியில் வைக்க ஏற்றதோர் இடமிது.

009649—இந்த 18வது நூற்றாண்டு சூரிய ஒளி கடிகாரத்தையும், வரும் பருவத்தில் நிச்சயம் பிரபல மோஸ்தராக விளங்கப் போகும் இந்த ஸ்விஸ் கடிகாரத்தையும், இரண்டு நூற்றாண்டுகளில், கடிகாரத் தொழில் அடைந்த முன்னேற்றம் பிரித்து வைக்கிறது. இந்த துல்யமான—சரியான மணி காட்டும் 17—ஜ்வெல் வட்ட ஓட்ட யந்திரம், நன்கு மெருகிடப்பட்ட 18—காரட் தங்கத்தால் ஆன பிரமிக்கத்தக்கதோர் "பிக்சர் பிரேமி"ல் பொறுத்தப்பட்டுள்ளது; இலகுவில் மாற்றியமைக்கக் கூடிய வெள்ளை நிற பகனிடா தோல் ஸ்ட்ராப், அடியில் இறுக பிடித்துக்கொள்ளும்.

பிரமுகர் வரிசை:

எச்.எஸ்.சுஹரவர்தி

பொய்க்கால் குதிரை போன்ற பாகிஸ்தான் பிரதமர் பதவியை இன்று அலங்கரிக்கும் ஹுசேன் ஷாஹீத் சுஹராவர்தி, வக்கீலாகத் தேர்ச்சி பெற்றவர்; ஆனால், நாட்டமெல்லாம் அரசியலில்தான்.

பிரிட்டிஷ் இந்தியாவில், ஜின்னாவின் வலது கரமாகப் பிரசித்தி பெற்ற இவரது அரசியல் வாழ்வு, சுதந்திரோதயத்துடன் அஸ்தமித்துவிட்டது. முஸ்லிம்களின் தாயகத்தில்—அதைச் சிருஷ்டிக்க வகுப்புக் கலவரங்களையும், பஞ்சத்தையும் தூண்டிய—சுஹராவர்தியின் வாழ்வு உதயமாக 9 ஆண்டுகள் பிடித்தன!

தேசப் பிரிவினையால், சுஹராவர்தியின் சொத்துக்கள் இந்தியாவில் முடங்கிவிட்டன. இந்திய தேசியத் தலைவர்களைப்பழித்து பொதுவாழ்வை அமர்க்களமாக்கி ஜின்னாவின் மனங்குளிரச் செய்த இவர், வங்கத்தை மட்டும் பிளக்கக்கூடாதென பகீரதப் பிரயத்தனம் செய்தார். முஸ்லிம் லீகில் செல்லாக் காசாகிவிட்டதால், ஜின்னா அவாமி லீக்கைத் தோற்றுவித்து இந்தியாவுடன் சுமுக உறவையும் வகுப்பு சௌஜன்யத்தையும் பிரசாரம் செய்தார்.

இப்படி குட்டிக்கரணங்கள் போட்ட சுஹராவர்தியின் அரசியல் ஆசான் என்னமோ, ஸி. ஆர். தாஸ். லண்டன் படிப்பு, லீக் ஜோதியில் கலக்கவே உதவியது.

63-வது வயதில், சுஹராவர்தி பழைய பந்தாவில்தான் பேசுகிறார். 'ஸத்தியமும் நியாயமும்' அவருடைய ஆட்சியின் லட்சியமாயிருக்குமாம்.

வைரக்கல்

ஸி. ஆர். ராஜம்மா

டாண், டாண்' என்று மணி பன்னிரண்டு அடித்தது. லட்சுமிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. பெரும் சோதனையாக இருந்தது. வாசலில் யாரோ ஒருவன் முன்னும் பின்னுமாக நடப்பதைக் காலையிலேயே கவனித்தாள் லட்சுமி. அவள் மனம் 'பக்'கென்றது. சாயங்காலம் குழந்தை மீனு பள்ளிக்கூடத்திலிருந்து வருகிறாளா என்று கவனிக்க வாசற் பக்கம் போனபோதுகூட, அந்த ஆள் எதிர் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து எதையோ படிப்பதுபோல பாவனை செய்து கொண்டிருந்தான். அவன் செய்வதெல்லாம் பாசாங்குதான்; போலீஸ் உடையில்லாமல் தன் வீட்டைக் கண் காணிக்க வந்திருக்கிறான் என்பது அவளுக்கா தெரியாது? அனுபவம் அவளுக்கு கற்றுக் கொடுத்த பாடம் எத்தனையோ! இந்த சமயத்தில் அவர் வாராமல் இருக்க வேண்டுமே என்று அவள் மனம் பிரார்த்தனை செய்தது.

கைதியின் நிலை, இதைவிடத் தேவலையே என்று எண்ணிக்கொண்டே உள்ளே சென்றாள் லட்சுமி. ஒருக்கால் கொல்லைப்புறம் இது மாதிரி யாராவது நின்று கொண்டிருக்கலாமோ என்று தோன்றியது. இன்று அவளுடைய கணவன் தங்கப்பன் வரும் நாள். வெளியே போலீசாரிடம் அவன் மாட்டிக்கொள்ளாமலிருந்தால், கண்டிப்பாக வருவான். இங்கே வந்து இவர்களிடம் அகப்பட்டுக் கொண்டால். .எண்ணவே முடியவில்லை அவளால். மறுபடியும் எத்தனை வருஷம் பிரிந்திருக்க வேண்டி வருமோ? கூடாது இவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது அவர்...அப்படியானால், எப்படி எச்சரிப்பது? இம்மாதிரி சிந்தனை வயப்பட்ட வண்ணம் கொல்லைக் கதவைத் திறந்தபோது, வீட்டையே கவனித்துக்கொண்டிருந்த ஒரு மனிதனைக் கண்டாள் அவள். லட்சுமியின் மனம் திடுக்கிட்டது; படபடத்தது. ஆபத்து நெருங்கி வந்துவிட்டது போலிருக்கிறதே என்று பீதியுற்றது. லட்சுமியைக் கண்டதும் எங்கேயோ பார்த்துக்கொண்டு பீடி பிடிப்பதுபோல பாவனை செய்தான் அவன். இடையிடையே வாயிலும் ஏதோ பாட்டை முணுமுணுத்தான். லட்சுமி அவனைக் கவனியாதவள்போல, கருவேப்பிலை மரத்திலிருந்து இரண்டு ஈர்க்குகளை ஒடிந்துவிட்டுக் கதவைச் சாத்தித் தாழிட்டுக்கொண்டு உள்ளே வந்தாள்.

மயங்கிவிட்டது மாலைப் போது. இரவு வந்தது. மீனுவுக்கு சாப்பாடு போட்டு விட்டுப் படுத்தாள். சிறுமி மீனு நிம்மதியாகத் தூங்கிவிட்டாள். நேரம் ஆக ஆக லட்சுமியின் மனம் குழம்பியது. எங்கேயாவது 'விஸில்' சப்தம் கேட்டால், அது போலீஸின் ஊதுகுழலோ என்று பிரமை தட்டியது.

நித்திராதேவி ஜீவன்களை உக்கிரமாக ஆட்கொள்ளும் வேளையது. யாருமே தன்னை மறந்து சற்றுக் கண்ணயரும் சமயம். லட்சுமி மட்டும் விலக்கா என்ன? யோசனை செய்து செய்து சலித்துப்போன அவள், சற்றே கண்ணயர்ந்தாள். அதிக நேரம் ஆகியிருக்காது. ஓட்டின்மேல் ஏதோ சத்தம் கேட்டது. மெள்ளத்தான் கேட்டது என்றாலும், நல்ல தூக்கமில்லாததனால் சட்டென்று விழித்துக்கொண்டாள். திருடன் வீட்டிலேயே திருடன் புகுவதா? இந்த அதிசயத்தை அவளால் தாங்க முடியவில்லை. ஒரு க்ஷண காலம் மின்னல் போல மூளையில் ஏதோ ஒரு எண்ணம் பளிச்சிட்டது. ஒருக்கால் அது அவள் கணவனாகவே இருந்தால்..இந்த எண்ணம் தோன்றிய மாத்திரத்தில் பரபரவென்று எழுந்தாள், லட்சுமி. கூடத்து ஓட்டுப் பக்கம் தான் சப்தம் வந்தது. அங்கே போய் அண்ணாந்து பார்த்தபோது சில ஓடுகள் பிரிக்கப்பட்டு வானம் தெரிந்தது. என்ன ஆச்சரியம்! ஓட்டுக்கடியில் போடப்பட்டிருக்கும் குறுக்கு மாச்சட்டம் அங்கே இல்லை. ஒரு கை மட்டும் வந்தது. பக்கத்து மாச் சட்டத்தில் ஒரு கயிற்றைக் கட்டித் தொங்கவிட்டது. ஒரு ஆள் அந்த துவாரத்தின் வழியாக மடமடவென்று இறங்கினான். கூடத்தில் சந்தடி செய்யாமல் இறங்கினான். மெல்லிய பெட்ரூம் விளக்கின் வெளிச்சத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டனர்.

"நீ தூங்கவில்லையா?" என்றானவன், மனைவியினருகில் போய். கட்டுமஸ்தான அவன் உடம்பில் கண்களை ஓடவிட்டாள் லட்சுமி.

"மெதுவாகப் பேசுங்கள். வாசலிலும், கொல்லையிலும் போலீஸ் காவல் இருக்கிறது" என்றாள் தொண்டை கரகரக்க. கண்களில் நீர் ததும்பிப் பளபளத்தது.

"தெருக்கோடியில் வரும்போதே சாயங்காலம் கவனித்துவிட்டேன். இங்கே இருந்தால் கொல்லைப் பக்கமும் கண்டிப்பாக இருப்பார்கள் யாராவது என்று தெரியும். அதனால்தான் இரவில் வரலாம் என்று நிச்சயித்தேன். இப்படி என்றைக்காவது உதவும் என்றுதான் ஓட்டின் கீழ் உள்ள குறுக்குச் சட்டத்தை ஒரு ஆள் நுழையுமளவு அகற்றிவிட்டிருந்தேன்! தெருக்கோடியிலேயே ஒரு வீட்டில் ஏறி, கூரை வழியாகவே நடந்து இங்கே வந்து சேர்ந்தேன்" என்றானவன்.

கணவனுடைய சாமர்த்தியத்தை எண்ணி அவள் உள்ளம் பெருமிதம் கொண்டாலும், பெருமூச்சும் எறியத்தான் செய்தது.

"அய்யோ, இத்தனை புத்தியையும் நல்ல வழியில் செலவு செய்திருந்தால் எத்தனை நல்லது? இப்படி எத்தனை நாட்கள் வாழ்வது? எங்கே போனாலும் போலீஸார் நம்மைப் பின்பற்றிவிடுகிறார்களே. நீங்களும் உங்கள் தொழிலை விடமாட்டேன் என்கிறீர்களே" என்றாள் லட்சுமி.

தங்கப்பன் சிரித்தான். தன் மகள் மீனுவிடம் போய் உட்கார்ந்து கொண்டு

அவள் அழகிய முகத்தை உற்றுப் பார்த்தான். கணவனும் மனைவியும் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு தங்கப்பன் வந்த வழியே போய்விட்டான். அப்புறம் லட்சுமிக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. மூன்று கட்டு வீட்டில் தன்னந் தனியே படுத்திருந்த அவள் மனம் தீயிலிடப் பட்ட ரொட்டிபோலக் கருகித் தீய்ந்தது.

தங்கப்பன் பட்டதாரியல்லவெனினும் ஏதோ படித்திருந்தான். லட்சுமி அவனைக் கலியாணம் செய்து கொண்ட போது என்னென்னமோ மனக்கோட்டைகள் கட்டியிருந்தாள். அவன் ஒரு கடையில் வேலையாக இருந்தான். முதலாளி கொடுக்கும் பற்றாக்குறை சம்பளத்தில் எப்படியோ காலம் தள்ளி வந்தான். மனிதனுடைய மனம் எத்தனை தங்கமானதாக இருந்தாலும், துர்ப்போதனை என்கிற தீயில் உருக்க உருக்க மாற்றுக் குறையத்தானே செய்கிறது? அப்படித்தான் அவனுக்கும் துர்குணமுள்ள சிநேகிதர்கள் சிலருடைய போதனையினால் மனம் மாற ஆரம்பித்தது. இதன் காரணமாக, முதலாளி ஏமாந்திருக்கும் சமயம் பார்த்து கல்லாப்பெட்டி பணத்துடன் வந்து விட்டான். அதை சிநேகிதர்களுடன் பங்கிட்டுக்கொண்டு மனைவியுடன் வெளியூர் போய்ச் சேர்ந்தான்.

அதற்குப்பின் அவன் அதேதொழிலைத் தொடர்ந்து நடத்தி வந்தான். லட்சுமிக்கு வெகு நாட்கள் வரை இந்த விஷயம் தெரியாது. அப்புறம் சிறுகச் சிறுகத் தெரிய ஆரம்பித்தபோது,அவள் உள்ளம் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. கணவனிடம் கெஞ்சினாள்; கண்ணீர் வடித்தாள். தங்கப்பன் அவளை சமாதானம் செய்து கொண்டு வந்தான். "திருடன் என்று பெயர் வந்தாகிவிட்டது, போலீசும் கண்காணிக்கிறது. இனிமேல் உழைத்துப் பிழைக்கிறேன் என்றால் கூட விட மாட்டார்கள். நம்பவும் மாட்டார்கள். நீ சும்மா இரு லட்சுமி; மொத்தமாக ஒரு பெரும் தொகை கிடைத்தவுடன் கிராமாந்திரத்துக்கு எங்கேயாவது ஓடிப் போய், நிலம்,நீச்சு வாங்கிப் பயிரிட்டுக் கொண்டு சுகமாக இருக்கலாம். அப்புறம் இந்தத் தொழிலுக்கே ஒரு முழுக்கு போட்டுவிடுகிறேன்" என்றான். லட்சுமிக்கு அவன் சொல்வதை ஆமோதிப்பதைத் தவிர வேறு வழியில்லைதான்.

தங்கப்பன் தன் மனைவியுடன் ஒரே இடம் என்று வசித்தது இல்லை. போலீஸாருக்கு எத்தனையோ முறை 'டிமிக்கி' கொடுத்துவிட்டு வெவ்வேறு ஊர்களில் போய் வசித்திருக்கிறான். இரண்டு தடவை அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டு மாதக் கணக்கில் தண்டனையும் அடைந்திருக்கிறான். இதனால் எல்லாம் அவன் மனம் உறுதிப்பட்டதே தவிர, தளரவில்லை. போலீஸாருக்கும் அவன் மேல் வைராக்யமே வளர்ந்து வந்தது. அவன் பக்காத் திருடன் என்று மட்டும் அவர்கள் கண்டு வைத்திருந்தார்களே தவிர, அதற்கான ருசு ஏதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. கையும் களவுமாக ஒருமுறைகூட அவன் அகப்பட்டுக்கொள்ளவில்லை. சந்தேகத்தின் பேரில் இருமுறை அவனைக் கைது செய்து விடுதலையளித்தார்கள். சந்தேகம் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. இரண்டுமுறை அவன் ஜெயிலுக்குப் போனதுகூட பெரும் திருட்டு எதற்காகவுமல்ல; சில்லறைக் குற்றங்களுக்காகத்தான். அதுவும்கூட அவனுடைய கூட்டாளிகள் காட்டிக் கொடுத்ததனால் வந்த வினையே.

பலபலவென்று பொழுது விடியும் வேளையில் லட்சுமி எழுந்து வீட்டு வேலைகளை கவனிக்க முயன்றாள். வாசற் கதவு தட்டப்படும் சப்தமும், பூட்ஸ் சப்தமும் கேட்டு கதவைத் திறந்தபோது, ஒரு போலீஸ் அதிகாரியும், சில

போலீஸ்காரர்களும் அங்கே நின்றார்கள். "உங்கள் கணவர் வரவே இல்லையா?" என்றார் அதிகாரி, மரியாதையாக.

"இல்லை, நேற்று போனவர். அவரை எதிர்பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்." என்றாள் லட்சுமி.

"சந்தேகத்தின் பேரில் நாங்கள் வீட்டை சோதனை போடப்போகிறோம்" என்றார் அதிகாரி.

தன் கணவனைத்தான் அவர்கள் தேடப் போகிறார்கள் என்று எண்ணினாள் லட்சுமி. ஆனால் அவர்களோ, பாட்டில், டப்பா, பெட்டி என்று இப்படியெல்லாம் சோதனை போட்டார்கள். எல்லோருடைய முகத்திலும் ஏமாற்றத்தின் சாயல் படிந்தது.

"ஒரு இடத்தில் கொள்ளைபோய் விட்டதம்மா. அந்தப் பொருள்களில் ஏதாவது இங்கே கிடைக்குமா என்று சோதனை போட வந்தோம். ஒன்றுமே கிடைக்கவில்லை. உங்கள் கணவர் அதில் சம்மந்தப்பட்டிருப்பதாகத் தெரிந்தால் சொல்லிவிடுங்கள். உண்மையை ஒப்புக் கொண்டால் அதிக தண்டனையில்லாமல் விட்டு விடுவோம்" என்றார் போலீஸ் அதிகாரி, வினயமாக.

"அவர் இதைப்பற்றி ஒன்றுமே என்னிடம் சொல்வது கிடையாது" என்றாள் லட்சுமி. அவர்கள் போய்விட்டார்கள்.

மத்தியானம் பன்னிரண்டு மணியிருக்கும். குழந்தை மீனாவின் அழுகைச் சத்தம் கேட்டு வாசலுக்கு ஓடோடியும் வந்த லட்சுமி, திகைத்துப் போனாள். தாடியும், மீசையுமாக வயதான கிழவர் ஒருவர் மீனாவைச் சுமந்து கொண்டிருந்தார். அவள் தலையில் ஒரு கட்டு; அதில் ரத்தம் தோய்ந்திருந்தது. லட்சுமி பதறிப்போனாள்.

"பள்ளிக்கூடம் விட்டு வரும் வழியில் குழந்தை விழுந்திடுச்சும்மா. நல்ல காயம். என் துணியைக் கிழிச்சு கட்டுப் போட்டேனுங்க" என்றார் அவர்.

"தாத்தா, உள்ளே வாருங்கள்" என்று அழைத்து நன்றி தெரிவித்தாள். நடித்தா வயதுதான் இருக்கும் என்றாலும், என்னமோ தாத்தா என்றே கூப்பிட்டு வைத்தாள். அவர் சொன்ன ஏதோ கை மருந்தைப் போட்டாள். அவருக்கும் வயிறு நிறையச் சாப்பாடு போட்டாள். குழந்தை மீனா அவரை விடமாட்டேன்

எதியோபிய கல்வி இலாகா அதிகாரி ஸ்ரீ டி. ஆர். மகாலிங்க ஐயரின் குமாரனும், இந்திய இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷனைச் சேர்ந்தவருமான சிரஞ்சீவி டி. எம். ராமச்சந்திரனுக்கும், மன்னார்குடி வக்கீல் ஸ்ரீ கே. சின்னஸ்வாமி ஐயரின் குமாரியும், 'மித்திரன்' உதவி ஆசிரியர் ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸனின் சகோதரியுமான சௌ. ஸரோஜாவுக்கும் மன்னார்குடியில 13உ சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

என்றாள். "கதை சொல்லு, தாத்தா" என்றாள். லட்சுமிக்கும் அவர் இருப்பது பெரிய ஆறுதலாகவே இருந்தது.

இரவு வந்தது. பெரியவர் தன்னுடைய கதைகளையெல்லாம் சொன்னார். கையிலிருந்த பணமெல்லாம் செலவாகிவிட்டதனால் பிள்ளை அடித்து விரட்டிவிட்டதையும், பெண் கவனியாமல் இருப்பதையும், அதனால் பிச்சை எடுக்க நேர்ந்ததையும் கூறிக் கண்ணீர் வடித்தார். லட்சுமியின் கண்களிலும்கூட நீர் துளித்துவிட்டது. இரவு வெகு நேரத்திற்குப் பின்தான் அவள் தூங்கினாள். சுற்றிலும் இரும்புக் கம்பிகள் போட்ட வாசல் திண்ணையில் அவர் படுத்துக்கொண்டார். உள்ளே அவள் படுத்துக்கொண்டாலும் தங்கப்பன் வரும் நேரத்தை எண்ணி அடிக்கடி விழித்துக்கொண்டாள். வாசலில் யாராவது நடந்து போனாலும் சரி, ஓட்டின் மேல் பூனை சப்தம் செய்தாலும் சரி அவள் விழித்துக்கொள்வாள்.

இரண்டு நாட்களுக்குப் பின்தான் தங்கப்பன் வந்தான். பட்டப்பகலில் தைரியமாக வாசற் பக்கமாகவே வந்தான். "நீ யாரப்பா?" என்றார் வாசலில் இருந்த பெரியவர். பேச்சு சப்தம் கேட்டு ஓடி வந்த லட்சுமி, "மீனாவின் அப்பா இவர்தான்" என்று கிழவருக்கு அறிமுகம் பண்ணி வைத்துக் கதவைத் திறந்தாள். தங்கப்பனும் பெரியவர் செய்த உதவியைக் கேட்டு மகிழ்ந்தான்.

"இப்படி ஒரு கிழக்கட்டை இருக்க வேண்டியதுதான் வீட்டில். கிராமத்துக்குப் போய் காடு கழனிகளை நான் கவனித்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டால், மீனாவுக்கும் உனக்கும் துணை வேண்டியதுதான்" என்றான் அவன். கணவனைப் பின் தொடர்ந்துகொண்டே உள்ளே வந்த லட்சுமி, "அப்படியும் ஒரு காலம் வந்துவிட்டதா என்ன?" என வியப்பு மேலிட்டு வினவினாள். பிறகு போலீஸ் வந்து சோதனை போட்டதைக் கூறினாள்.

தங்கப்பன் சிரித்தான். "அவர்கள் எத்தனை முறை சோதனை போட்டாலும் இங்கே ஒன்றையும் கண்டு பிடிக்க முடியாது. இத்தனைக்கும் அவர்கள் தேடி வந்த பொருள் இங்கேதான் இரு[illegible]கிறது. என்னையும் நேற்று முழுவது[illegible] பிடித்து வைத்து மடக்கி மடக்கிக் கேள்விகள் கேட்டார்கள். தங்கப்பனா சொல்கிறவன். நம் மீது சந்தேகம் இருக்கிறதே தவிர ருசுச் செய்ய வழியில்லை. விட்டுவிட்டார்கள்!" என்றான்.

லட்சுமி ஓவென்று அழுதாள். "இனிமேல் இந்தத்தொழிலே வேண்டாம்" என்றாள். அவள் கையில் அடித்து சத்தியம் செய்தான் தங்கப்பன். இத்தனை நாட்களும் அவன் இப்படி உறுதியளித்தது இல்லை. "இந்தத் தொழிலுக்கே ஒரு தலை முழுக்குப் போட்டாச்சு. அன்னைக்கு ராத்திரி ஓட்டு வழியே இறங்கி வந்த போது ஒரு விலை உயர்ந்த பொருள் கொண்டு வந்து வைத்திருக்கிறேன். உனக்குக்கூட அது தெரியாது. விற்றால் பத்தாயிரம் ரூபாய் கைக்கு வரும். விலை கூட பேசி வைத்திருக்கிறேன். சமயம் பார்த்துக் கொண்டு போய்க் கொடுத்து பணம் வாங்கிக்கொண்டு வர வேண்டியதுதான் பாக்கி" என்றான் தங்கப்பன்.

இதற்குள், "கொஞ்சம் வென்னீர் இருக்குமாம்மா?" என்று கேட்டுக் கொண்டு பெரியவர் வரவே, பேச்சு நின்றது.

மூன்று நாட்கள் ஆகிவிட்டன. தங்கப்பன் எங்கேயும் வெளியே போகவில்லை. சமயம் பார்த்துப் பொருளுடன்

வெளியேபோய் போத்தை முடித்து வர எண்ணியிருந்தான். பெரியவர் இருந்ததும் அவனுக்கு நல்லதாகவே இருந்தது. வீட்டுக்கு வேண்டிய தண்ணீரெல்லாம் அவர்தான் இறைத்தார். லட்சுமி சொன்ன சாமான்களை வாங்கி வந்தார் வெளியில் போய். மேஜை, நாற்காலி, பெஞ்சு இவைகளையெல்லாம் துடைத்து சுத்தமாக்குவார். கடிகாரத்துக்கு சாவி கொடுக்க முயலுவார். சிறுமி மீனுவைப் பள்ளிக்கூடத்துக்குக் கொண்டுபோய் விட்டு, கூட்டிக்கொண்டு வருவார். எல்லாம் போக நேரம் மீதியிருந்தால் தங்கப்பனுடன் சீட்டாடுவார்.

இன்றுடன் இந்த வாழ்க்கைக்குத் தலை முழுக்கு போட்டுவிட வேண்டியதுதான் என்ற சங்கல்பத்துடன் தங்கப்பன் கிராப்பை வாரி விட்டுக் கொண்டு ஷர்ட்டைப் போட்டுக் கொண்டான். "நான் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன். நீ மூட்டைகளைக் கட்டி வை. இன்றைக்கே புறப்பட்டுவிடலாம்" என்றான் மனைவியிடம்.

"கிராமத்துக்குப் போகப் போகிறோம் தாத்தா, நீங்களும் வருகிறீர்களா?" என்று கிழவரைக் கேட்டாள் லட்சுமி.

"இந்தக் கட்டைக்கு எங்கே இருந்தாலென்ன?" என்றார் அவர். வாசற் கதவு தட்டப்படும் சப்தமும், டக் டக்கென்ற பூட்சு ஒலியும் கேட்டன. லட்சுமிதான் கதவைத் திறந்தாள்.

வந்த போலீஸ் அதிகாரியைப் பார்த்து தங்கப்பன் அலக்ஷியமாகச் சிரித்தான். "சந்தேகத்தின் பேரில் என்னைக் கைது செய்யப் போகிறீர்களா? அல்லது வீட்டை சோதனை போடப் போகிறீர்களா?" என்று கேட்டான் அவன். உங்களுக்குத் தோல்விதான் ஏற்படப் போகிறது என்ற எக்காள ஒலி அவன் குரலில் தொனித்தது.

போலீஸ் அதிகாரி எங்கும் தேடவில்லை. ஏதோ வைத்த பொருளை எடுப்பதுபோல விடுவிடென்று கடிகாரம் வைத்திருக்கும் இடத்துக்குப் போனார். அந்த அலாரம் கடிகாரத்தை எடுத்துப் பின் பக்கம் திறந்தார். சிறு கொட்டைப் பாக்களவுக்கு, மினு மினுப்பான, விலை உயர்ந்த, வைரத்தை அதனுள்ளிருந்து எடுத்தார். மின்சாரத்தால் தாக்குண்டவன்போல ஒரு க்ஷண காலம் திகைத்தான் தங்கப்பன். போன தடவை அவர்கள் சோதனை போட வந்தபோதும் அங்கேயேதான் இருந்திருக்கிறது அது. கண்டு பிடிக்க முடியவில்லை. இத்தனை நாளும் பிடிக்க முடியாத ஒரு திருடனை, பெரிய தொகையுடன் கையும், களவுமாகப் பிடித்துவிட்டார்கள் அவர்கள்!

லட்சுமி கதறினாள். தாடிக்காரக் கிழவனார் பணிவுடன் லட்சுமியின் அருகில் வந்தார். "என்னை மன்னித்து விடுங்கள். கடமை என்னை இப்படி வேஷம் போடத் தூண்டியது. அதற்காக நான் வருந்துகிறேன். ஆனால் என்னால் இப்பொழுது ஒன்றும் செய்ய முடியாதம்மா. ஆசை தீர உன்னுடனும், குழந்தையுடனும் தங்கப்பன் ஒரு வாரம் தங்கிவிட்டான். துப்பு கண்டு பிடிக்கவே குழந்தை கீழே விழுந்த சாக்கை வைத்துக்கொண்டு இங்கே வந்து தங்கினேன். ஒவ்வொரு பேச்சிலும், செயலிலும் உன் கணவனைக் கவனித்தேன். வைரம் இருக்குமிடம் தெரிந்துவிட்டது. கடைக்கு சாமான் வாங்கிவர என்னை அனுப்பினீர்களல்லவா? அப்போது போலீஸுக்குத் தக்கபடி தகவல் கொடுத்துவிட்டு வந்தேன். நீங்கள் அவசியம் மன்னிக்க வேண்டும்" என்றார், பெரியவராக வந்த அந்த போலீஸ் அதிகாரி.

கை விலங்குகளுடன் தங்கப்பனை இழுத்துச் சென்றார்கள். சிறுமி மீனுவோ, தாத்தாவுடன் தானும் போக வேண்டுமென்று அழுதுகொண்டிருந்தாள்.

உங்கள்
வனப்பை எடுத்துக்காட்ட
கைத்தறி துணிகளை அணியுங்கள்.

மோஸ்தர்களில் நவீனமாயும், தரமேம்பாடில் சிறந்தாயும், பல்வகை டிசைன்களிலும், பரம்பரை மற்றும் நவீன தேவைக்கு ஏற்ப ஏராளமான கைத்தறி துணிவகைகள் கிடைக்கும்.

உங்கள் உடையணிகளுக்கும், வீட்டு அலங்கரணத்திற்கும் மிகச்சிறந்தவை

கைத்தறி துணிகள்

ALL INDIA HANDLOOM BOARD

ஆல் இந்தியா ஹான்ட்லூம் போர்டு,
பம்பாய் - மதராஸ் - கான்பூர்.

DA/56/82 Tm

தலைநகர் பால்.....

தலைநகரில் வெவ்வேறு வகை விருந்துகள் நடந்தன. கர்நாடக சங்கீத சபையின் ஆதரவில் இன்னிசை விருந்து அவற்றில் ஒன்றாகும். சென்ற ஞாயிறு மாலை ரீடிங் ரோடு பள்ளிக் கூடத்து சதுக்கத்தில் ஸ்ரீ ஜி. என். பாலசுப்ரமண்யத்தின் இன்னிசைக் கச்சேரி அதிவிமரிசையாக நடந்தேறிற்று. சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஸ்ரீ டி. எல். வெங்கடராமய்யர், மந்திரி ஸ்ரீ ஓ. வி. அளகேசன், இலாகா காரியதரிசி ஸ்ரீ என். எம். அய்யர் உட்பட தில்லி ரசிகர்கள் திரளாகக் கூடியிருந்தார்கள். கர்நாடக இசையுலகில் தனக்கெனச் சிறப்பிடம் ஒன்றை வகிக்கும் ஜி. என். பி., தமக்கே உரிய பாணியில் சுமார் மூன்றரை மணி நேரம் பாடி மகிழ்வித்தார். அவருக்கு உறுதுணையாக நின்று, பிரமாத 'அப்ளாஸ்' வாங்கினர் மாஸ்டர் கிருஷ்ணனும், மாஸ்டர் ரகுவும். கச்சேரி நீண்டுகொண்டே போகிறதே என்ற உணர்வு மத்தியில் சற்று ஏற்படத்தான் செய்தது என்றாலும், மொத்தத்தில் இந்த நிகழ்ச்சி சிறப்பானதென்றே கூறவேண்டும். பண வசூலிலும் திருப்திகரமான நிலைதான். நிர்வாகிகள் ராமமூர்த்தி–சங்கரநாராயணனின் மகிழ்ச்சிக்குக் கேட்பானேன்?

அடுத்தது இலக்கிய விருந்து; தமிழ்ப் பெண்மணிகள் இருவர், தில்லித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் நடந்த கூட்டங்களில் நிகழ்த்திய இலக்கியப் பிரசங்கங்கள். செவ்வாயன்று சென்னையைச் சேர்ந்த ஸ்ரீ டி. வி. கமலா என்பவர் 'தமிழ்ப் பண்பாடு' பற்றி அருமையாகப் பேசினார்.

புதன்கிழமையன்று ஸ்ரீமதி ஹா. கி. வாலம் 'தமிழ் இலக்கிய வரலாறு' பற்றி சொற்பொழிவாற்றினார். நக்கீரர் முதல் பாரதி ஈறாக உள்ள தமிழ்க் கவிஞர்களைப் பற்றியும், அவர்களுடைய கவிதா நயத்தையும் எடுத்துரைத்து விமரிசனம் செய்தார். இடையிடையே காளிதாசனின் காவியங்களிலிருந்தும், துளசிதாசிலிருந்தும், டென்னிஸனிலிருந்தும் ஆதாரங்களை எடுத்துக் காட்டினார். ஆண்டாள், மாணிக்கவாசகர் முதலானோர் பாடல்களை மனமுருகப் பாடிக் காட்டிப் பரவசப்படுத்தினார். ஆங்கிலம், வடமொழி, ஹிந்தி, தமிழ் ஆகியவற்றில் நல்ல ஈடுபாடு உடைய பூனாவாசியான ஸ்ரீமதி வாலம், தன் பரந்த அறிவு, சொல்வளம், நயமிகு நடை, கம்பீரமான குரல் ஆகியவற்றைக் கொண்டு சுவை குன்றாமல் ஒன்றரை மணி நேரம் தமிழ் இன்பத்தில் ஆழ்த்திவிட்டார். பிரபல தேச பக்தரும், சிறந்த பேச்சாளருமான திருச்சி ஹாலாஸ்யத்தின் புதல்வியான ஸ்ரீமதி வாலம் தமிழகத்தின் சிறந்த ஸ்திரீ பேச்சாளர்களில் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. அன்றைய கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஸ்ரீ சுந்தா கூறியதுபோல, 'பூனாவுக்குள்ளதுபோல தில்லியில் ஒரு 'வாலம்' இல்லையே' என்பது குறையாகத்தான் தோன்றிற்று.

ஃ ஃ ஃ

1955–ம் வருஷத்தில் வெளியான சினிமாப் படங்களில் சிறந்தவற்றுக்கான அரசாங்க விருதுகளை சென்ற வியாழனன்று பிரதம மந்திரி ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு வினியோகித்தார். தேசீய பௌதீக ஆராய்ச்சிக்கூட மன்றத்தில் நடந்த இந்த விழாவில், மோதிலால், துர்கா கோட்டே, நர்கிஸ், ராஜ்கபூர், பிமல்ராய் முதலானோர் கலந்துகொண்டனர். வெவ்வேறு வகைப்பட்ட படங்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்திய மொழிப் படங்களில் 'ஜனக் ஜனக் பாயல் பாஜே' (ஹிந்தி), 'பங்காரு பாப்பா' (தெலுங்கு), 'பத்தர் பாஞ்சாலி' (வங்காளி) முதலிய படங்களுக்கு வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்தன. தமிழ்ப் படங்களில், 'மங்கையர் திலக'த்திற்கு நற்சாட்சிப் பத்திரம் கிடைத்திருக்கிறது. இந்தப் படம் சென்ற சில வாரங்களாக இங்கு திரையிடப்பட்டு வருவதால், தில்லித் தமிழ் மக்கள் அதைக் கண்டு மகிழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதம மந்திரி விழாவில் கலந்து கொள்கிறார் என்றால், அவரது நல்லுரையைக் கேட்கும் வாய்ப்பும் இருக்குமே என்று மக்கள் எதிர்பார்ப்பது இயல்பு. ஆனால் நேருஜி இந்த வைபவத்தில் வாய் திறவாமல் இருந்து, ஆச்சர்யத்தைத் தோற்றுவித்து விட்டார். அதனால் தானோ என்னவோ, இவ்வருஷ நிகழ்ச்சி, முந்திய வருஷங்களைப்போல அவ்வளவு பிரமாதமாக இல்லை எனத் தோன்றிற்று!

தகவல், ஒலிபரப்பு மந்திரி டாக்டர் கேஸ்கர், அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் முக்கிய நடவடிக்கைகளை இந்த வைபவத்தில் அறிவித்தார்.

இந்த பரிசு அளிப்பு விழாவை ஒட்டி வழக்கம்போல, இந்த வருஷமும் உரைக் கோவை ஒன்று நடந்தது. 'இந்தியத் திரைப் படங்களில் ஹாஸ்ய ரஸம்' என்பது பற்றிய உரைக் கோவையில் அறிஞர்கள் பலர் கலந்துகொண்டனர். பேராசிரியர் ஸ்ரீ பி. கே. சித்தாந்தாவின் தலைமையிலான இந்தப் பேச்சரங்கில், சென்னையைச் சேர்ந்த திரைப் படப் பிரமுகர் ஸ்ரீ ஏ. இராமய்யா எழுதிய கட்டுரையையும் வாசித்துக் காட்டினார்கள்.

ஃ ஃ ஃ

சென்ற ஆண்டில் தொல்பொருள் இலாகாவின் முயற்சியால் கண்டெடுக்கப்பட்ட புதைபொருள்கள் பலவும் இப்போது காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் மகோன்னத தசையில் இருந்த பாரத பூமியின் சிறப்பையும், மேலைய நாடுகள் நாகரிகம் என்றால் என்ன என்பதை அறிவதற்கு வெகுகாலத்திற்கு முன்பே வளமுற்றிருந்த இந்திய கலாசாரத்தின் மேன்மையையும், காட்சிப் பொருள்கள் நன்கு விளக்குபவையாகவுள்ளன.

வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் கோயிற் கலை உருவான கதையை புகைப் படங்களின் மூலம் அழகுற விளக்கியுள்ளனர். ஹாரப்பா நாகரிகத்திலிருந்து, அதற்குப் பின்னர் வாழ்க்கை முறைகளில் ஏற்பட்ட மாறுதல்கள் வரை பல விஷயங்களைக் கண்டுகொள்ளலாம். மண்பாண்டத் தொழிலில் இந்தியாவின் தேர்ச்சிக்கு உலகில் எப்பகுதியுமே ஈடு இணையாகச் சொல்வதற்கில்லை. தவிர, ஆப்கனிஸ்தானிஸ்தானுக்குச் சென்று ஆராய்ச்சி செய்துவந்த இந்திய நிபுணர் கோஷ்டி கொண்டு வந்த பொருள்களும், புகைப் படங்களும், இந்தியாவிற்கு அந்நாடு வழியே பரவிய கருத்துக்கள், வந்த யாத்ரிகர்கள் பற்றிய விவரங்கள் முதலானவற்றை விளக்குகின்றன. சமீபத்தில் அப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்த இந்திய கோஷ்டிக்குத் தலைவராகச் சென்று வாகை சூடி வந்தவர்–தமிழ் அறிஞரும், புதைபொருள் இலாகாவைச் சேர்ந்த துணைத் தலைவருமான ஸ்ரீ டி. என். இராமச்சந்திரன் என்பது நினைவிருக்கலாம்.

தில்லி மதுரை பள்ளிக்கூடத்தில் பாரதி தினத்தன்று, பள்ளி சாரணச் சிறுவர்கள், விழாத் தலைவர் ஸ்ரீ வே. ஷண்முகம் பிள்ளையையும், இதர தலைவர்களையும் அணி வகுத்து நின்று வரவேற்றனர்.

இலங்கை லிகிதம்

இலங்கையில் பல வருட காலம் வேலை செய்துவிட்டு அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்தினால் இந்தியா திரும்புவோர், சுங்கத் தீர்வை ஏதுமில்லாமல் தங்களுடைய உடைமைகளைக் கொண்டு வர அனுமதிக்கப்படுகிறார்களென்று மக்கள் சபையில் வெளிநாட்டிலாகா பார்லிமெண்டரிக் காரியதரிசி சமீபத்தில் சொன்னார். ஆனால் உண்மை இதற்கு நேர்மாறாயிருப்பதாக தாயகம் திரும்பிய பல இந்தியர்கள் பலமாகப் புகார் செய்திருக்கிறார்கள். இந்தியாவிற்கு நாடு கடத்தப்படுகிறவர்கள் இங்குள்ள இந்திய ஹைகமிஷனிடமிருந்து சர்டிபிகேட் வாங்கிச் சென்றும்கூட, தனுஷ்கோடியைத் தாண்டி மதுரை ஜங்ஷனையடையும்பொழுது சுங்க இலாகா அதிகாரிகளினால் கொடுமைப் படுத்தப்படுகிறார்களாம். இது சம்பந்தமாக இந்திய ஹைகமிஷன் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிகிறது.

ஃ ஃ ஃ

இலங்கையில் சென்ற 18 மாதங்களாக இந்திய ஹைகமிஷனராயிருந்துவரும் ஸ்ரீ பி. என். சக்கரவர்த்தி இம்மாதம் மாற்றலாகி டில்லிக்குப் போகிறார். டில்லியில் வெளிநாட்டிலாகாவில் அவர் பழையபடி சேர்ந்து கொள்ளுவார். ஸ்ரீ வி. வி. தேசாய் இங்கு ஹைகமிஷனராயிருந்த காலத்தைப்போல ஸ்ரீ சக்கரவர்த்தியின் காலத்தில் பரபரப்போ அல்லது புதிய அபிவிருத்தியோ இரண்டுமில்லை. இலங்கை இந்தியர்களின் நிலைமை மேற்கொண்டு மோசமடையாமல் ஸ்தம்பிதமாயிருந்தது. இலங்கை இந்தியர்களுக்கு பிரஜாவுரிமை கிடைக்கும்படி ஸ்ரீ தேசாயினால் செய்ய முடியாவிட்டாலும், நினைத்த இந்தியர்களை நினைத்த நேரத்தில் இலங்கை அரசாங்கம் நாடு கடத்தி வந்ததற்கு அவர் முற்றுப்புள்ளி வைத்தார். நாடற்றவர்கள் என்று ஒரு புதிய கோஷ்டியைச் சிருஷ்டித்து அவர்களை யாரும் இலங்கையை விட்டு வெளியேற்ற முடியாதபடி ஸ்ரீ தேசாய் செய்தது மிகப் பெரிய கைங்கர்யம். ஸ்ரீ சக்கரவர்த்தியின் காலத்தில் இதே நிலைமை நீடித்தது.

ஃ ஃ ஃ

இந்திய ஹைகமிஷனில் சென்ற மூன்றரை வருட காலமாக தகவல் அதிகாரியாக இருந்து வரும் ஸ்ரீ எம். ஆர். சிவராம கிருஷ்ணனும் விரைவில் டில்லிக்கு மாற்றலாகிப் போகிறார். ஹைகமிஷனில் இப்பொழுதுதான் சில தமிழ் அதிகாரிகள் இருக்கிறார்களே தவிர, ஒரு வருடத்துக்கு முன்னால் தமிழ் அதிகாரிகளே அங்கு கிடையாது. அப்பொழுது தமிழராகிய ஸ்ரீ சிவராம கிருஷ்ணன் உதவியையே எல்லோரும் நாடவேண்டியிருந்தது. சுமுகமாகப் பழகுவதன் மூலமும், உதவி மனப்பான்மையினாலும் இலங்கை இந்தியர்களின் அமோகமான அன்பை அவர் பெற்றிருந்தார். இப்பொழுது அவர் மாற்றலாகிப் போவது பொதுவாக எல்லோருக்கும் துக்கத்தை விளைவித்துள்ளது.

இலங்கை இந்தியர்களின் சிறந்த நண்பரும், விசேஷமாக இங்குள்ள மலையாளிகளுக்குத் தந்தையாகவும் குருவாகவுமிருந்த டாக்டர் குமாரன் இரத்தினம் இவ்வாரம் மாரடைப்பினால் திடீரென்று காலமாகியது ஒரு பெரிய துக்கச் செய்தி. சிறந்த காந்தி பக்தரான டாக்டர் இரத்தினம் 1946–ம் வருடம் 'மகாத்மா காந்தி ஜயந்திக் கமிட்டி' என்று ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து பிரதி வருடமும் காந்தி ஜயந்தியை மிகப் பெரிய தோரணையில் நடத்தி வந்தார். சென்ற 10 வருடங்களாக கொழும்பு முனிசிபல் மெம்பராயிருந்து வந்த இவர், 1950–ம் ஆண்டில் கொழும்பு நகரின் முதலாவது இடதுசாரி மேயராகவுமிருந்தார்.

ஃ ஃ ஃ

சிங்களம் ஒன்று மட்டும்தான் இலங்கையின் உத்தியோக பாஷையாயிருக்க வேண்டுமென்று அரசாங்கம் சட்டமியற்றியுள்ளபொழுதிலும், உத்தியோக பாஷை இலாகாவில் இரு முக்கியமான தமிழ் நியமனங்களை இவ்வாரம் செய்திருக்கிறது. தமிழ் மொழி பெயர்ப்பு அதிகாரியாக ஸ்ரீ எஸ். நடராஜன் என்பவரையும், தமிழ் ஆராய்ச்சி அதிபராக பண்டித கா. பொ. இரத்தினம் என்பவரையும் பப்ளிக் சர்விஸ் கமிஷன் நியமித்திருப்பது, தமிழ் மொழியை அடியோடு புறக்கணிக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லையென்பதைக் காட்டுவதாகக் கருதப்படுகிறது. பண்டித கா. பொ. இரத்தினம் தமிழ் மறைக் கழகத்தின் தலைவரும், தமிழ்க் கலாசாரச் சங்கத்தின் காரியதரிசியுமாவார். வைகாசி அனுஷத்தை வள்ளுவர் விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று இலங்கை, இந்தியா, மலாயா ஆகிய நாடுகளில் அதி தீவிரமாகப் பிரசாரம் செய்தவர். ஸ்ரீ நடராஜன் ஒரு சிறந்த கவிஞர். தாகூரின் கவிதைகளையெல்லாம் தமிழ்க் கவிதைகளாக மொழி பெயர்த்து வெளியிட்டவர். இலங்கையின் 'கம்பர்' எனப்படும் காலஞ்சென்ற நாவலியூர் ஸ்ரீ சோமசுந்தரப் புலவரின் புதல்வருமாவார். இவ்விருவருடைய நியமனங்களும் விசேஷ முக்கியத்துவம் வாய்ந்தவைகளாக அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

அதே சமயம் பல்வேறு இலாக்காக்களின் கடிதப் போக்குவரத்துகளும் ஆங்கிலத்திலல்லாமல் சிங்களத்திலிருக்கும்படி உத்தரவிட்டிருப்பதும், அரசாங்க வைபவங்களின் அழைப்புகள்கூட சிங்களத்தில் அச்சடிக்கப்படுவதும் தமிழ் மக்களுக்கு மிகுந்த கவலையைக் கொடுத்து வருகிறது.

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணக் கல்லூரி கட்டிட நிதிக்காக பிரபல சினிமா பின்னணி பாடகியான ஸ்ரீமதி எம். எல். வஸந்தகுமாரி இவ்வாரம் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் உதவிக் கச்சேரிகள் நடத்தினார். பத்திரிகை நிருபர்களுக்கு அவர் பேட்டியளித்தபோது ஹிந்துஸ்தானி பாட்டானாலும் சரி, கர்னாடக சங்கீதமானாலும் சரி சுலபமாகப் பாடக்கூடிய பாட்டுகளையே சினிமாப் பிரியர்கள் அதிகம் விரும்புவதாகக் கூறினார்.

—ரவி.

அட்டைப் படம்

காதலனும் காதலியும் கடிமணம் புரிந்து கொண்டார்கள். குடும்பமும் வைத்தாகி விட்டது. வாழ்க்கை இன்பத்தைத் தொடர்ந்து துய்ப்பதில் அந்த வதாவரரின் உள்ளம் ஈடுபடுவது இயல்புதானே? என்றாலும், குடும்பப் பொறுப்பு காரணமாக வேற்றூர் சென்று பொருள் ஈட்ட வேண்டியதாயிற்று, வீட்டுத் தலைவன்.

வேற்றூர் சென்று பொருள் சேமிக்க உழைத்த அந்தக் காலத்திலும் தலைவனின் மனத்தில் காதலுக்கும், கடமைக்கும் போராட்டம் நிகழ்ந்துகொண்டுதான் இருந்தது. 'என்ன கடமை வேண்டிக் கிடக்கிறது, அந்த நீலோத்பல நயனத்தாளின் கடைக்கண் வீச்சுக்கு ஆட்பட்டிருப்பதைவிட்டு?' என்று அவன் நெஞ்சு நெக்குருகிக் கூறியது. ஆனால் அவன் அறிவோ 'என்ன, எடுத்த காரியத்தை முடிக்காமல் சென்றால் இழிவன்றோ ஏற்படும்?' என்று இடித்துச் சொல்லியது. 'பொறுத்ததுதான் பொறுத்தாய்; இன்னும் கொஞ்சம்தான் பொறுத்துக் கொள்ளேன்.' என்றும் அறிவு நெஞ்சுக்கு உணர்த்தியதாம். அதற்கும் அசைந்து கொடுக்காமல் 'உடனே புறப்படு!' என்று உந்தியதாம் நெஞ்சு!

காதலுக்கும் கடமைக்கும்—அறிவுக்கும் நெஞ்சுக்கும்—நிகழ்ந்த இந்தப் போர், சமபலமுள்ள இரு யானைகள், புரிகள் தேய்ந்த ஒரு பழங் கயிற்றை எதிர் எதிர் முனைகளால் விசையாகப் பற்றியிழுப்பது போன்று அமைந்திருந்ததாம்!

அகநானூற்றில் காணப்படும் பாடல்களில் ஒன்று இப்படிக் காதலனின் மனோ தத்துவத்தை விளக்குகிறது. காதலுக்கும் கடமைக்கும் ஏற்படும் போராட்டம் அன்று போல் இன்றும் ஒரே மாதிரியாகத்தானே இருக்கிறது!

இந்தப் பாடலை இயற்றியவருக்கே 'தேய்புரிப் பழங் கயிற்றினார்' என்ற பெயர்தான்.

'ஸூபா' இந்தக் கருத்தை ஓவியமாகத் தீட்டியுள்ளார்.

—கு. வெ. பா.

பாய்ந்து வரும் காளையை நிறுத்த உபதேசமொழி பயன்படாது என்பது முதுமொழி. பிளிறிப் பாய்ந்துவரும் யானையைத் தடுக்க முடியுமா? எல்லாவற்றிற்கும் விதி விலக்கு உள்ளதுபோல இதற்கும் இருக்கிறது. இல்லாவிடில், 'அய்யப்ப'னை அறை கூவி அழைத்த ஸ்ரீ பிள்ளை இந்தக் கதையைச் சொல்ல உயிருடன் இருந்திருக்க முடியாது.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஒரு உயர்தர அதிகாரியான ஸ்ரீ பிள்ளை, அடிக்கடி உத்தியோக விஷயமாக வன மார்க்கமாகச் செல்ல வேண்டியிருக்கும். மலை மீது வளைந்து செல்லும் இந்த ரஸ்தாக்களின் இரு மருங்கும் அடர்ந்த காடுகள்தான். விலங்குகள் பதுங்கி நின்று தாக்குமோ என்ற அச்சத்துடனேயே மோட்டாரில் செல்பவர்கள்கூட பிரயாணம் செய்வது வழக்கம்.

சர்க்கார் அனுமதியில்லாமல் யாரோ கயவர்கள் காட்டில் புகுந்து, மிருகங்களை வேட்டையாடி, சந்தனக் கட்டைகளையும் தேக்கு மரங்களையும் கவர்ந்து செல்வதாகப் புகார் கிடைத்தது. ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை நடத்துவதென ஸ்ரீ பிள்ளை முடிவு செய்தார். அதற்கேற்ப, தமது பழைய 'டூரர்' மோட்டாரில் ஏறிச் சென்றார். விசாரணை முடிய வெகு நேரமாகிவிட்டது. ஜோலியை முடித்துத் திரும்பும்போது இருட்டும் சமயம். இரவில் பிரயாணத்தின் ஆபத்தைச் சொல்லி, அருகிலுள்ள அதிகாரியின் பங்களாவில் தங்கியிருந்து, காலையில் புறப்படுமாறு கீழ் உத்தியோகஸ்தர்கள் யோசனை கூறினர். அவர் கேட்கவில்லை. கொடிய விலங்குகளைக் கண்டுகூடத் தமக்குப் பயமில்லை என்று சொல்லிவிட்டார்.

விடை பெற்றுக்கொண்டு கிளம்புகையில், கீழ்வானில் சந்திரன் உதித்துவிட்டான். மோட்டாரின் அஸ்மான கிரியை சுருட்டி மடக்கி வைத்துவிட்டு திறந்த மோட்டாரில் அவர் கிளம்பினார். பால் பொழியும் நிலவு. மந்தமாருதம் இன்பமாக வீசிற்று. அமைதியினூடே கார் இஞ்சின் சப்தம் மட்டும்தான். இதை ரஸித்த வண்ணம் பின் ஸீட்டில் உட்கார்ந்திருந்தார் ஸ்ரீ. பிள்ளை.

சில மைல்கள் சென்றதும் ஏதோ ஒன்று ரஸ்தாவை நோக்கி வருவதைக் கண்டான் டிரைவர். விளக்கைப் பெரிதாக்கிப் பார்த்ததில் பெரிய யானையொன்று வருவது தெரிந்தது. யானை ரஸ்தாவைக் கடக்கட்டும் என்று காரை நிறுத்திவிட்டான். சில நிமிடங்கள் கழிந்தன. ஆனால், ராஜபாட்டைக்கு அந்த மிருகம் வரவில்லை. டார்ச் விளக்கை வீசிப் பார்த்ததில், திருப்பமொன்றில் தயாராகத் துதிக்கையைத் தூக்கிய வண்ணம் யானை நிற்பது தெரிந்தது. இருமுறை பிளிறவும் செய்தது. டிரைவர் 'ஹார்ன்'ஐ சப்தித்தான்.

இஞ்சினை நன்றாக ஓடவிட்டு காது செவிடாகும்படி சப்தத்தைக் கிளப்பினான். 'புதிசா ஏதோ வந்திருக்கிறது. நமக்கு எதற்கு அதன் தொல்லை' என்று யானை பயந்து ஒதுங்கிப் போய்விடுமென டிரைவரும் ஸ்ரீ பிள்ளையும் எதிர்பார்த்தனர். சாதாரணமாகக் காடுகளில், குறுக்கிடும் விலங்குகளை விரட்ட மோட்டார் ஓட்டிகள் இந்தத் தந்திரங்களைக் கையாள்வது வழக்கம். மிருகங்களும், கொஞ்சம் தாமதித்தாவது நடையைக் கட்டிவிடும். ஆனால் இந்த யானையோ, ஒரு அங்குலம்கூட அசைந்து கொடுக்கவில்லை. எதிரிகளை எதிர்நோக்கி சாவதானமாகக் காத்து நின்றது.

டிரைவரும், ஸ்ரீ பிள்ளையும் செய்வதறியாது திகைத்துப் போயினர். மீளும் வழி புரியாததால் அவர்களுக்குக் கவலை மேலிட்டது. மோட்டாரைத் திருப்பி ஓட்டிக்கொண்டு போவதற்கும் வழியில்லை. ஏனெனில் அந்த இடத்தில் ரஸ்தா மிகவும் குறுகலாயிருந்தது. இருவரும் மந்திராலோசனையில் ஈடுபட்டனர். வேறு வழியில்லாததால், முடிந்த வரை அதிகபட்சமாக சப்தம் போட்டுக்கொண்டு யானை நிற்கும் வழியே மோட்டாரை வேகமாகச் செலுத்துவதே உசிதமென முடிவு செய்தனர்; அதை நிறைவேற்றினர். மோட்டார் திருப்பத்தில் வேகமாகச் செல்கையில், யாரோ ராட்சதன் காரைப் பிடித்துப் பின்னுக்கு இழுப்பதை ஸ்ரீ. பிள்ளை உணர்ந்தார். பயத்தால் நடுங்கிய அவர், திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. ஒரு மைல் சென்ற பிறகுதான், திரும்பினார். தமது படுக்கையும், மோட்டாரின் அஸ்மான கிரியும் யானையின் வசமாகி விட்டதை உணர்ந்தார். நல்ல வேளை, தம்மைக் கொல்ல வந்த மிருகம், மயிரிழை தவறி, சாமான்களைப் பற்றிச் சென்றதே என்று ஆறுதல் பெரு மூச்சு விட்டார். ஆனால், இதுவும் அதிக நேரம் நீடிக்கவில்லை!

மலையில் பாதி தூரம் தான் இறங்கியிருப்பார்கள். அப்போது, எதிரே ரஸ்தா சமீபம், ஏதோ ஒன்று புல்பூத்த மலைச் சரிவில் சருக்கிக் கொண்டு சுகமாகக் கீழிறங்குவதைக் கண்டனர். பழைய யானையேதான்! ரஸ்தா ஓரமாக அது, வாட்டமாக நின்றுகொண்டு காத்திருந்தது.

உடனே மோட்டாரும் நிறுத்தப்பட்டது. இருவரும் பொறுத்துப் பார்த்தனர். ஆனால், யானை காத்திருக்கத் தயாராயில்லை. மோட்டாரை நோக்கி விரைந்தது, பிளிறிக்கொண்டு. டிரைவர் நடு நடுங்கிக் கண்களை மூடிக்கொண்டான். 'ஐயப்பா' என்று அலறினார். ஸ்ரீ பிள்ளை. பாய்ந்து வந்த யானை, 'பிரேக்' போட்டு நின்றது. நிதானித்துப் பார்த்தது. ஏதோ யோசனை செய்து முடிவு காண்பது போலத் தலையை ஆட்டியது. பேசாமல் காட்டுப்பக்கம் திரும்பி ஓடி மறைந்தது.

'மெய்தானா?' என்று டிரைவர் தலையைத் தூக்கிப் பார்த்தான். யானை சென்ற திசையையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த ஸ்ரீ. பிள்ளை 'ஆமாம்' என்று தலையசைத்தார். மோட்டார் கிளம்பியது வீட்டை நோக்கி. குல தெய்வமான 'ஐயப்ப'னின் பெருமையை கரகரத்த குரலில் பாடிக்கொண்டே வந்தார் அதிகாரி.

('ஐயப்பன்' என்ற மந்திர வார்த்தை யானையை அடக்கி ஆண்டதல்லவா? அதில் அடங்கியிருக்கிறது ஒரு சோகக் கதை. அடுத்த இதழில் அதை எதிர்பார்க்கலாம்.)

கார் ஹார்ன் சப்திக்கவேண்டியதேயில்லை. மெல்ல வரும் காரைக் கண்டவுடனே வாயிலண்டை நின்றிருந்த ஆள் இரும்புக் கதவுகளை விரியத்திறந்தான். காரும் உள்ளே சென்று வராந்தா அருகே நின்றது. காரிலிருந்து இறங்கிய அழகிய வாலிபன் கையில் மணந்தரும் பூச்செண்டு இருந்தது. செண்டை எடுத்துக்கொண்டு அவன் வேகமாக மாடிப்படிகளில் ஏறிச்சென்றான். மேல் மாடி வராந்தாவில் இரண்டு நர்சுகள் நின்று பேசிக்கொண்டிருந்தனர். அவர்களை நெருங்கிய வாலிபன், “சகோதரி! 9-ம் நம்பர் ரூமில் என் மனைவி-” என்று தொடங்கி முடிக்குமுன், ஒரு நர்சு விடையளித்தாள். “ஆம்! மிஸ்டர் ஜகந்நாதன்! நீங்கள் வந்தவுடன் தன்னிடம் வரும்படி டாக்டர் ராகவன் உத்தரவு. வாருங்கள் போகலாம்”

ஜகந்நாதன் திகைத்து நின்றான். “ஏன்! சுசீலாவின் உடல்நிலை எப்படி இருக்கிறது?” என்று பரபரப்புடன் வினவினான். “எல்லா விவரமும் டாக்டர் ராகவன் சொல்வார்” என்று சொல்லிவிட்டு அவள் மெதுவாக முன் நடந்தாள். அவள் ஒருவிவரமும் சொல்லமாட்டாள் என்று அவனுக்குத் தெரியும். ஒன்றும் பேசாமல் அவளைப் பின்தொடர்ந்தான். கோடியிலிருந்த அறையில் ஜகந்நாதனை உட்காரும்படி சொல்லிவிட்டு, அந்த நர்சு டாக்டர் ராகவனைத் தேடிச் சென்றாள்.

ஜகந்நாதன் வியாபார நிமித்தமாகப் பட்டணம் வந்து எட்டு நாட்களாயின. சுற்றுப்பிரயாணம் செய்வதற்கென அவனுக்குக் கம்பெனி செலவில் ஒரு மோட்டார் வண்டி அளித்திருந்தனர். ஆறு மாதங்களுக்கு முன்தான் அவன் சுசீலாவைச் சந்தித்தான். கண்டதும் காதல் கொண்ட இருவரும் மணம் செய்து கொண்டனர். சுசீலாவும் கணவனுடன் பிரயாணம் செய்வது வழக்கமாயிற்று. பட்டணத்தில் பிரபல ஹோட்டல் முதலாளி முகுந்த ராவ் சுசீலாவின் தாய் மாமன் ஆவர். ஹோட்டல் வைகுந்தம் என்ற அவர் ஹோட்டலில்தான் இந்தத் தடவை ஜகந்நாதனும், சுசீலாவும் தங்கினார்கள். வியாபார அலுவல்களைக் கவனித்த பிறகு, தினமும் மாலை நேரங்களில் ஜகந்நாதன் தன் மனைவியுடன் சினிமா, நாடகம், நாட்டியம் என்று ஆனந்தமாகப் பொழுது போக்கி வந்தான். அன்று மியூசியம் தியேட்டரில் பரதநாட்டியம் பார்த்துவிட்டுத் திரும்பும்போதுதான் எதிர்பாராத அந்த விபத்து நேர்ந்தது. தரையில் புரண்டு கொண்டிருந்த ஜார்ஜெட் புடவையில் அவளுடைய செருப்பு மாட்டிக்கொண்டு சுசீலா தடாலென்று விழுந்தாள். இரண்டு மூன்று படிகள் சரிந்து உடல் புரண்டபோது அவளுக்கு பலமான அடி இடுப்பில் பட்டுவிட்டது உடனே ஆஸ்பத்திரியில் அவளைக்கொண்டு சேர்த்தான் ஜகந்நாதன். துடை எலும்பு விரிசல் கண்டுவிட்டதாம். சிலநாட்கள் படுக்கையில் இருந்து ஓய்வுபெற்றால் குணமாகிவிடும் என்று டாக்டர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். தினமும் காலையில் புஷ்பச்செண்டுகளுடன் வருவதும், அவள் அறையில் இரண்டுமணி நேரம் தங்கிப் பேசிச் செல்வதுமாக ஜகந்நாதன் காலம் கழித்தான். இரவுகூட வந்து ஒரு மணி நேரம் இருப்பான். நேற்றுத்தான் அவன் வரமுடியவில்லை. இன்று காலை வந்தவுடன் இப்படிச் செய்தி சொன்ன நர்சைப் பிடித்து உலுக்கிவிட வேண்டும்போலிருந்தது அவனுக்கு. ஆனால் அவள் என்ன செய்வாள்? அவள் கடமையை

கண்மணியின் மறுவாழ்வு

வி. நடராஜன்

அவள் சாந்தமாகச் செய்கிறாள். டாக்டர் வருகைக்காகக் காத்திருந்த ஜகந்நாதனின் மனம் தத்தளித்தது. ஏதேனும் விபரீதம் நேர்ந்துவிட்டதோ என்று தயங்கினான். ஆம், அப்படித்தான் இருக்கும். இல்லையேல் வழக்கம்போல் நேராக அவள் அறைக்குச் செல்லவொட்டாமல் இங்கு வந்து டாக்டரைப் பார்க்கும்படி ஏன் சொல்லவேண்டும். இவ்வாறு பலவித யோசனையில் மூழ்கியிருந்த ஜகந்நாதன் சடக்கென்று எழுந்தான். டாக்டர் ராகவன் உள்ளே நுழைந்தார். ஜகந்நாதன் தோள்களைத் தடவிக்கொண்டே அவர், அவனை உட்காரவைத்தார்.

"என்ன செய்தி? டாக்டர் ராகவன்"

"சொல்கிறேன். நிதானமாகக் கேளுங்கள்"

ஆனால் டாக்டரும் உடனடியாகச் சொல்லத் தயங்கினர். ஜகந்நாதனை மேலும் கீழும் உற்று நோக்கினர். ஏதோ சொல்லத்தொடங்கினர். அதற்குள் ஜகந்நாதன் துள்ளி எழுந்தான். பூச்செண்டைக் கையில் பிடித்துக்கொண்டே,

"டாக்டர்! என் மனைவியைப் பார்க்கலாமா?"

"பார்க்கலாம். ஆனால்—"

"ஆனால் என்ன?"

"உங்கள் மனைவி இறந்துவிட்டாள்"

"ஆ! இறந்துவிட்டாளா?" ஜகந்நாதன் கையிலிருந்த பூச்செண்டு விழுந்தது. அவன் முகம் சோபையற்று பேச்சுக் கிளம்பவில்லை. உடல் தடதடவென்று நடுங்கியது. கீழே விழுந்திருப்பான். ஆனால் டாக்டர் அவனைப் பிடித்து மெதுவாக ஒரு சோபாவில் உட்காரவைத்தார்.

"நாங்கள் எதிர்பார்க்கவில்லை. அவள் இதயம் பலவீனப்பட்டிருந்தது. நேற்று மாலை உங்கள் வரவை எதிர்பார்த்திருந்தாள். இரவு 12 மணிக்குக்கூட உங்களைக் காணவேண்டுமென்று நர்சிடம் சொன்னாள். உங்கள் ஹோட்டலுக்கு போன் செய்து பார்த்தார்களாம். நீங்கள் இன்னும் திரும்பவில்லை என்று சொல்லிவிட்டார்கள்"

ஏதோ கனவில் யாரிடமோ பேசுவது போலத் தோன்றியது. ஜகந்நாதன வாய் மாத்திரம் பதில் பேசிற்று.

"ஐயோ! மகாபாபி நான்! என் கண்மணி இறக்கும் சமயத்தில் என்னைப் பார்க்க ஆசைப்பட்டாளே?'

"அதிகாலை நாலு மணிக்குத்தான் இறந்திருக்கவேண்டும். தூக்கத்திலேயே இறந்திருக்கிறாள். ஆனால் மிகவும் ஆச்சரியம்! அவள் கண்கள் திறந்திருந்தன. அதிசயமான ஒரு சோகம்! முகத்தில் சந்தோஷமான களை"

"டாக்டர்! என் மனைவியைப் பார்க்கவேண்டுமே!"

டாக்டரைத் தொடர்ந்து ஜகந்நாதன் நடந்தான். இரண்டு வராந்தாக்களைக் கடந்து சென்றார்கள். அறையில் கட்டிலின் மேல் கிடந்த சுசீலாவை உற்றுப் பார்த்தான்.

ஆம், அவள் முகத்தில் அதிசயமான சோபை காணப்பட்டது. அவள் இறந்துவிட்டதாகவே தோன்றவில்லை. இரவு டூட்டி நர்சு சொன்னது காதில் விழுந்தது. மணிக்கொருமுறை டெம்பரேசர் எடுப்பது அவள் கடமை. பன்னிரண்டு மணிக்குப் பிறகுதான் சுசீலா தூங்க ஆரம்பித்தாள். அதுவும் தூக்க மருந்து அருந்திய பிறகுதான். நாலு மணிக்கு ஏதோ திடுக்கிட்டு விழித்தமாதிரி இருந்தது. கண்கள் அகன்று திறந்து இருந்தன. ஆனால் மூச்சு நின்றுவிட்டது.

"ஆஹா! காலை நாலு மணியிருக்கும். அப்போதுதான் அந்தக் கார், மரத்தில் மோதி நின்றுவிட்டது. இன்னொருவர் காரில் நான் திரும்பி வந்து கொண்டிருந்தேன். பின் சீட்டில் படுத்தவண்ணம் சிறு தூக்கம்; திடுக்கிட்டு விழித்துக்கொண்டேன். எனக்கு ஒரு அபாயமும் இல்லை. ஆனால் என் கண்மணி போய்விட்டாள்" என்று முகத்தை மூடிக்கொண்டு விம்மி விம்மி அழுதான் ஜகந்நாதன். கைகளால் மெதுவாக அவள் முகத்தைத் தடவிக்கொண்டே குனிந்து, அவள் கண்களில் முத்தமிட்டான். பிறகு வேகமாகத் திரும்பி வெளியே சென்றான்.

அவன் நிறுத்தியிருந்த காரைக் கவனியாமலே நடந்தான். எங்கு போகிறோம் எப்படிப் போகிறோம் என்ற நினைவே அவனுக்கில்லை. ஆனால் அவன் கால்கள் இயல்பாக நடந்தன. திடீரென்று மழை கொட்ட ஆரம்பித்துவிட்டது. சொட்டச் சொட்ட நனைந்தவண்ணம் அவன் தங்கியிருந்த ஹோட்டலை அடைந்தான். மழையில் நனைந்த பிறகு அவன் மனநிலை ஒருவாறு ஒழுங்கு பெற்றிருக்கவேண்டும். ஹோட்டல் மானேஜரிடம் சொல்லி அவன் காரை ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டுவரும்படி ஏற்பாடு செய்தான். அறையில் தன் உடைகளை மாற்றிக் கொண்டான். சுசீலாவின் அடை அபாணங்கள் அவன் கண்கள்முன் குவிந்து தோன்றின. முகம் பார்க்கும் கண்ணாடி, மேஜைமேல் அவளது பவுடர் பெட்டி, வர்ணமை முதலியன கிடந்தன. அவளது அபூர்வ சாமான்களையெல்லாம் கண்ணாடிப் பேழையில் எடுத்துவைத்து அடுக்கினான். இச்சமயம் ஹோட்டல் ஆள் 'காபி கொண்டுவரலாமா' என்று விசாரிக்கவே, அதுதான் நல்லது என்று தலையசைத்தான்.

இரண்டு தந்திபாரங்களில் சுசீலாவின் மரணத்தைப்பற்றிய செய்தியை எழுதிக் கொண்டிருக்கும்போது, வேலையாள் காபி கொண்டுவந்தான். ஜகந்நாதனைப் பார்க்க விரும்பி ஒருவர் காத்திருப்பதாகவும் சொன்னான். "ஒருவரையும் பார்க்க முடியாது" என்று ஜகந்நாதன் சற்று அலுப்பாக முணுமுணுத்தான். ஆனால் அடுத்த நிமிஷம் அந்த ஆளே உள்ளே வந்துவிட்டான். வாட்ட சாட்டமான தேகக்கட்டுடன், உயர்ந்தரக சூட் அணிந்துள்ள அந்த ஆசாமி ஜகந்நாதன் முன் வந்து நின்றான்.

"ஐயா! நான் யாரையும் இப்போது பார்க்கமுடியாது"

"நண்பரே! உங்கள் துக்கம் எனக்குத் தெரியும்."

"தெரியுமா? என் மனைவி இறந்துவிட்டாள்"

"அவளைப்பற்றிப் பேசவே நான் வந்திருக்கிறேன்" என்று அந்த ஆசாமி தன்னிடமிருந்த பேர்ச்சீட்டை நீட்டினான்.

'டாக்டர் மங்கள சிங். எம். டி. எப். ஆர். ஸி. எஸ்.' என்ற பெயரைப் படித்துக்கொண்டே, அவனை உட்காரும்படி சைகை காட்டினான், ஜகந்நாதன்.

தமாஷ் தம்பதி

"கேட்டீர்களா செய்தியை, நடிகர் என்.எஸ். கிருஷ்ணன், அவருடைய ட்ரைவர் விலகிப் போனதற்கு, பெரிய டீ பார்ட்டி வைத்து, வெகுமதியும் கொடுத்து அனுப்பினாராமே!"

"ஏன் கொடுக்கமாட்டார்? இந்தக் காலத்திலே நடிகர்கள் எல்லாம் கார் விபத்தில் சிக்கி கஷ்டப்படுகையில், பல வருஷங்களா, அவருக்கு எந்த ஆபத்தும் நேராமல் கார் ஓட்டியிருக்கிறாரே!"

"கொஞ்சம் காபி சாப்பிடுங்கள் டாக்டர்."

ஜகந்நாதன் அளித்த காபியை ஏற்றுக்கொண்டு, டாக்டர்."

"நண்பரே! உங்கள் துக்கத்தை ஆற்ற இறைவன் அருள்க" என்று காபியைப் பருகினான்.

"அதெல்லாம் சரி! என்ன விசேஷம்? சுருக்கமாகச் சொல்லுங்கள்."

"நண்பரே! உங்கள் மனைவியின் திடீர் மரணம்பற்றி வருந்துகிறேன். அவளது கண்களை மறுவாழ்வு செய்ய விரும்புகிறேன்"

"என்னது? மறுபடியும் சற்று விவரமாக சொல்லுங்கள்"

"எங்கள் கண் பாங்கிக்கு உங்கள் மனைவியின் கண்களை தானம் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். என் ஆஸ்பத்திரியில் ஒரு ஏழைப் பெண், பிறவியில் குருடி; அவளுக்கு தானம்–' மறுவிநாடி ஜகந்நாதன் திடீரென டாக்டர் மங்கள சிங் மீது பாய்ந்தான். கையிலிருந்த காபி கோப்பை எகிறி விழுந்து உடைந்தது. எழுந்த டாக்டரைத் தள்ளிக்கொண்டு போய் எதிர் சுவற்றில் மோதினான். "இரக்கமற்ற பாவி! சமயம் பார்த்து தானம்கேட்க வந்தாய்! போ வெளியே"? என்று கூச்சல் போட்டான். டாக்டர் மெதுவாகத் தன்னை விடுவித்துக்கொண்டு.

"நண்பரே! உங்கள் வருத்தமும் கோபமும் சகஜம். நான் உங்களைக் குற்றம் சொல்லவில்லை" என்று நிதானமாகப் புன்சிரிப்புடன் பதில் சொன்னான்.

"என்னைக் குற்றம் சொல்வதாவது? நீர் ஒரு மனுஷனா?" ஜகந்நாதன் கோபம் தணியவில்லை. மறுபடியும் டாக்டரைப் பார்த்து ஒரு குத்துவிட்டான். ஆனால் மங்கள சிங் லேசில் விட்டுக்கொடுக்கும் ஆசாமியல்ல. அவனும் ஜகந்நாதனின் கைகளைப் பிடித்து முறுக்கி ஒருபுறம் தள்ளிவிட்டான். கீழே விழுந்து எழுந்த ஜகந்நாதன் மேஜைமீதிருந்த வெண்கலக்கிண்ணத்தை, அதில் இருந்த பூக்களுடன் எடுத்து வீசினான். டாக்டர் சடக்கென்று குனியவே, கிண்ணம் கண்ணாடி பீரோவில் தாக்கியது. கண்ணாடிச் சுக்கல்கள் சிதறிப் பறந்தன. அடுத்தவிநாடி ஜகந்நாதன் மங்கள சிங்கைக் கட்டிப் பிடித்துத் தாக்கி எறிய முயற்சித்தான். இருவரும் கட்டிப் புரண்டனர். ஒருவரையொருவர் உதைத்துக்கொண்டே, உருட்டிக்கொண்டும் மல் யுத்தம் செய்தனர்.

அறையில் நடக்கும் அமளியைக் கேட்டு ஓட்டல் சிப்பந்திகளும், மானேஜரும் உள்ளே ஓடி வந்தார்கள். கூட்டத்தைக் கண்டவுடன் ஜகந்நாதனின் பிடி தளர்ந்தது. அவனும் மெதுவாக எழுந்தான். டாக்டர் மங்கள சிங்கோ, "நண்பர்களே! இவர் துக்கம் மகத்தானது. உள்ளம் பொங்கி எழும் உணர்ச்சியைப்போக்க இது ஒரு வழி. தயவு செய்து நீங்கள் எல்லோரும் வெளியே போங்கள்" என்று வேண்டிக்கொண்டான். சோபாவில் உட்கார்ந்திருந்த ஜகந்நாதன் கையில் கண்ணாடிக் காயம். டாக்டர் மங்கள சிங் உடனே கைக்குட்டையினால் துடைத்து, அந்தக் காயத்தை மூடிக்கட்டிவிட்டு அப்பால் சென்று கண்ணாடி முன் நின்றுகொண்டு தன் உடைகளையும் தலை முடியையும் சீர்படுத்திக் கொண்டிருந்தான்.

ஜகந்நாதனுக்கு ஒருவாறு சித்தப் பிரமை குறைந்தது.

"என்ன ஐயா! நீர் மனிதனா, பேயா? என் அருமை மனைவி இறந்து ஒருநாள் கூட ஆகவில்லை. அவள் கண்களை நீர் தானம் வாங்க வந்துவிட்டீர்!" ஜகந்நாதன் முகத்தைத் துடைத்துக் கொண்டான். கைக்குட்டைகட்டியிருந்த அவன் கையில் ரத்தம் வடிந்தது. டாக்டர் மங்களசிங் நிதானமாக எழுந்து, ஒரு டவலை எடுத்துக் குளிர்ந்த நீரில் நனைத்துக் கொண்டுவந்து, ஜகந்நாதன் முகத்தைத் துடைத்துவிட்டான். பிறகு ஓட்டல் ஆளைக்கூப்பிட்டு சூடான காபி கொண்டுவரும்படி கட்டளையிட்டான். காபி வந்தவுடன் ஒரு கப் காபியில் தன் சேபியிலிருந்து ஏதோ ஒரு மாத்திரையைப் போட்டுக் கலக்கினான். "நண்பரே! இதைப் பருகும். சில மணி நேரம் நன்றாகத் தூங்கும். நான் நாளைக் காலை வருகிறேன்." ஜகந்நாதன் மறுதளிக்காமல் காபியைப்பருகிவிட்டான். அவனைக் கட்டிலில் படுக்கவிட்டு, டாக்டர் வெளியே போய்விட்டான்.

மறுநாள் காலை டாக்டர் மங்கள சிங் வந்தபோது ஜகந்நாதன் எழுந்து காபி இட்லி சாப்பிட்டுக்கொண்டிருந்தான்.

"நண்பரே! நன்றாகத் தூங்கினீரா?"

"டாக்டர்! நேற்று நடந்த விஷயத்தை நினைக்க எனக்கே வெட்கமாயிருக்கிறது. இனி என்ன செய்யவேண்டும் என்கிறீர்?"

"இதோ பாரும்! எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டேன்", என்று சில காகிதங்களை மேஜைமேல் பிரித்து வைத்துவிட்டு, "உமக்கு சந்தோஷமாயிருந்தால் செய்யும். இல்லாவிடில் நான் நிர்ப்பந்தம் செய்யவில்லை"

"டாக்டர்! காலையில் எழுந்தது முதல் இதைப்பற்றியே யோசித்தேன். என் கண்மணியின் கண்களைக் கொண்டு இன்னொருவர் வாழக்கூடும் என்றால் அப்படிச் செய்வது என் கடமை. அவளும் அப்படியே ஆசைப்படுவாள்"

டாக்டர் சந்தோஷமாக எழுந்தான். உடனே ஏற்பாடுகள் வெகு தீவிரமாக நடைபெற்றன. டெலிபோனில் இரண்டு மூன்று இடங்களைக் கூப்பிட்டு விஷயத்தை விளக்கிச் சொன்னான். பிறகு ஜகந்நாதனிடம் வந்து, விவரங்களை வர்ணிக்கத் தொடங்கினான். ஜகந்நாதனோ ஒன்றும் பேசாமல் சாவதானமாகக் கேட்டிருந்தான். அவன் முகத்தில் இப்போது வருத்தமோ கலவரமோ காணப்படவில்லை. ஆனால், ஒருவித நிம்மதி நிரம்பியவனாய் டாக்டர் சொல்வதை

வெட்டுக்காயம், சொரி சிறங்கு, வேனில்கட்டி, தீப்பட்டபுண், கரப்பான், முகப்பரு, சேத்துப்புண், கொப்புளம், பத்து முதலிய சகல சரும வியாதிகளையும் போக்கும் களிம்பு.

சைபால் CIBOL

ரமணீஸ் **பேபி கிரைப்**

குழந்தைகளுக்கு ஏற்படும் மாந்தம், வயிற்றுவலி, வயிற்றுப் பொருமல், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப் போக்கு முதலிய சகல அஜீரணக் கோளாறுகளையும் போக்கி, புஷ்டி அளிப்பது.

நவீன யந்திர சாதனங்களால் தயாராகிறது

"எல்லிஸ் பாம்" (ELLIS BALM)

ஜலதோஷம், நரம்புவலி, தலைவலி, பல்வலி, மார்சளி, முதலியவைகளைப் போக்கவல்லது.

எமது பாக்டரியில் எல்லா மருந்துகளும் நவீன யந்திர சாதனங்களாலேயே தயாராகின்றன.

தயாரிப்பவர்கள்:

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி,

மதுரை.

யெல்லாம் கேட்டுத் தலையசைத்திருந்தான்.

டாக்டர் மங்கள சிங் நடத்தும் ஆஸ்பத்திரி எட்டு மைல்களுக்கப்பால் உள்ளது. கண் வைத்தியத்தில் மிகவும் தேர்ச்சியும் அனுபவமும் உள்ள மங்கள சிங், இதுவரையில் நூற்றுக்கணக்கான நோயாளிகளுக்குப் புதுக் கண்கள் தந்து அவர்கள்வாழ்வை இன்பமாக்கியுள்ளான். இறந்த மூன்று தினங்களுக்குள் இறந்தவரது கண்களைத் தோண்டி எடுத்து பத்திரப்படுத்தவேண்டும். நோயாளியின் சேதமான கண்களை அகற்றி இப்புதிய கண்களைப் பதித்துத் தைக்கவேண்டும். ரத்த தானம், சதை தானம், எலும்பு தானம் என்று எல்லாம் இப்போது வைத்தியர்கள் ஏற்பாடு செய்வது போலவே, கண் தானத்திற்கும் செய்திருக்கிறார்கள். கண் இல்லாதவருக்குக் கண் அளிப்பது மாபெரும் உபகாரம் அல்லவா? எல்லாவற்றையும் கேட்ட பிறகு, ஜகந்நாதன் எழுந்து டாக்டரின் கைகளைப் பிடித்துக்கொண்டு நன்றியுடன் சொன்னான்:

"டாக்டர் கண்களை உடனே எடுத்துப் போங்கள்"

"ஆம்! அதற்கே டெலிபோன் செய்தேன். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போடுங்கள். என் உதவி டாக்டர் கண்களை எடுத்துக்கொண்டவுடன் போனில் கூப்பிடுவார். உடனே என் ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டும். உங்களுக்கு இஷ்டமிருந்தால் நீங்களும் வருகிறீர்களா?"

"நிச்சயமாக வருகிறேன். என் கண்மணியின் கண்கள் புது வாழ்வு தருவதைப் பார்த்து மகிழ்வேன். எப்போது புறப்படுவீர்கள்?"

"இன்னும் ஒரு மணி நேரத்தில் புறப்படுவோம்"

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு டாக்டரது பெரிய காரில் எல்லோரும் புறப்பட்டனர். பின்சீட்டில் மூவர் இருந்தனர். டாக்டர் காரைச் செலுத்தினான். அருகில் ஜகந்நாதன் அமர்ந்திருந்தான். மங்கள சிங் கண் ஆஸ்பத்திரியில் எல்லோரும் தயாராக இருந்தனர். சிகிச்சை மேஜைமீது ஒரு பெண் படுத்திருந்தாள். மயக்க மருந்துகள் இஞ்செக்ஷன் செய்த பிறகு ஆபரேஷன் தொடங்கியது. பழைய கண்கள் இருந்த இடம் சுத்தம் செய்யப்பட்டு புதிய கண்கள் பதிக்கப்பட்டன. மெல்லிய பட்டு இழை கொண்டு சாமர்த்தியமாக மங்கள சிங் தையல் போட்டான். சிறிது நேரம் இந்தச் செயல்களை கவனித்திருந்தான் ஜகந்நாதன். பிறகு வெளியே எழுந்து சென்றான்.

மூன்று மணி நேரம் ஆயிற்று. வெளியே வந்த டாக்டர், ஜகந்நாதனை விளித்தான்:

"புதுக் கண்கள் பெற்றுப் புது வாழ்வு பெற்ற பெண்ணைப் பாருங்கள். உங்கள் மனைவியின் கண்கள் கொண்டு மறு வாழ்வு பெறும் பாக்கியவதியைப் பாருங்கள்"

ஆம்! பதினெட்டு பிராயமுள்ள அந்த யுவதி அழகான அங்கங்கள் கொண்டவள். கண்கள் இல்லாவிடில் அவள் வாழ்வே சூனியமாயிருக்கும். ஆகா! என் கண்மணியின் கண்கள் புது வாழ்வு பெற்றுவிட்டன. ஜகந்நாதன் உற்றுப் பார்த்தான். அவன் கண்களிலிருந்து பொலபொலவெனப் பொழிந்தது.

"நண்பரே! நாளைதான் கண்கள் கட்டை அவிழ்ப்போம். அதுவும் சில விநாடிகள்தான். மறுபடியும் மூன்று நாட்கள் கட்டிவைக்க வேண்டும். பிறகு புதுக் கண்களின் தசைகள் பொருந்திவிடும். நரம்புகள் ஒன்றுகூடி வேலை செய்யும். நண்பரே உங்கள் உதவிக்கு மிகவும் வந்தனம். இன்று என் வீட்டில் விருந்தினராகத் தங்குவீர்களா?"

"டாக்டர்! இந்த உதவி செய்யும் பாக்கியத்தை எனக்குத் தந்த உத்தமரே! என் உதவி ஒரு பிரமாதமா? நீங்கள் செய்யும் மகத்தான சேவைக்கு எந்த உதவியும் செய்ய எல்லோரும் முன்வருவார்கள்" என்று நன்றித் ததும்பப் பேசினான் ஜகந்நாதன்.

அன்று டாக்டர் வீட்டிலேயே தங்கி, உண்டு, உறங்கிய ஜகந்நாதன், மறுநாள் ஒரு புதிய மனிதன் ஆகிவிட்டான். அன்று டாக்டர் மீது பாய்ந்து குத்தியதை நினைக்க நினைக்க அவனுக்கு ஒரு புறம் வெட்கமும், மறுபுறம் திகைப்பும் உண்டாகின. மனங்கலங்காமல் சந்தோஷமாக எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்ட டாக்டர் பால் அவனது மதிப்பும் பாராட்டும் பொங்கின. மறுநாள் அப்பெண்ணின் கண் கட்டுகளை அவிழ்க்கும் போது கூடவே நின்றிருந்தான். டாக்டர் அப்பெண்ணைத் தட்டிக் கொடுத்து உற்சாகப் படுத்தவே, அவள் மெதுவாகக் கண்களைத் திறந்தாள். ஜன்னல் இடுக்கு வழியாகப் பிரகாசிக்கும் சூரிய ஒளியைக் கண்கள் பார்த்தன. பிறகு கண்களை மூடினாள். டாக்டர் மெதுவாக அவள் வலது கையைத் தூக்கி, உள்ளங்கையை அவள் கண்கள்முன் அசைத்தான். மறுபடியும் அப்பெண் தன் கண்களைத் திறந்தாள்.

"டாக்டர்! என்ன அதிசயம். என் கை விரல்களைப் பார்க்கிறேன்" என்று புன்சிரிப்புடன் சொன்னாள்.

'ஆம்! உனக்குப் புதுக் கண்கள் வந்துவிட்டன. இனி இவ்வுலகில் இறைவன் சிருஷ்டித்துள்ள எல்லாவற்றையும் பார்த்து மகிழலாம். ஆனால் இன்னும் மூன்று நாட்கள் கண் கட்டு அவசியம். புதிய கண்கள் சரியாகப் பொருந்திவிட்டனவா என்று அறியவே இப்போது பரீட்சை செய்தேன். இனி பயமில்லை. மூன்று நாட்கள் பொறுமையாக இரு."

மறுபடியும் கண் கட்டுகளைக் கட்டிய பிறகு, டாக்டரும், ஜகந்நாதனும் வெளியில் வந்தனர்.

"டாக்டர் நான் திரும்பிச் செல்ல விடை அளியுங்கள். நீங்கள் செய்யும் அற்புதமான செயல்களைப் பார்க்கும் அதிருஷ்டம் எனக்குக் கிடைத்தது. இப்பெண்ணுக்குச் செய்த ஆபரேஷனுக்கு எவ்வளவு செலவு?"

டாக்டர் சிரித்துக்கொண்டே சொன்னார். "நண்பரே! செலவுகளைப் பற்றி பயமில்லை. இறைவன் தருகிறார். என் சேவைக்கு நான் கூலி வாங்குவதில்லை. புதுக் கண்கள் பெற்ற பலர் ஆஸ்பத்திரிச் செலவுகளுக்கு நிதி அளித்திருக்கிறார்கள். நிதியிலும் மேலாக வேறு பலர் தங்கள் மரணத்திற்குப் பிறகு தங்கள் கண்களை தானமாக ஏற்றுக்கொள்ளும்படி ஒப்பந்தம் எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்"

ஜகந்நாதன், சற்று வெட்கமான தயக்கத்துடன் தன் உள் பையிலிருந்து ஒரு கவரை எடுத்துப் பிரித்து ஒரு தஸ்தாவேஜியை டாக்டரிடம் கொடுத்தான்.

"டாக்டர்! நீங்கள் சொல்வது உண்மை. இறைவன் திருவுள்ளப்படி உழைக்கும் உத்தமருக்கு ஒருபோதும் மனக்கலக்கமும் சங்கடமும் உண்டாகா. இந்த தஸ்தவேஜி என் மனைவியின் இன்ஷியூரன்ஸ் பாலிஸி. இதில் கிடைக்கும் பத்து ஆயிரம் ரூபாய்களை அப்பெண்ணுக்கு அளித்துவிடுங்கள். என் மனைவியின் கண்கள் புது வாழ்வு தந்த பிறகு, அவள் பணத்தினால் அப்பெண்ணும் சுகமாக வாழவேண்டும்."

டாக்டரும் தன் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து ஜகந்நாதனிடம் கொடுத்து, "நண்பரே, மிகவும் வந்தனம். இந்த ஒப்பந்தத்தில் நீங்களும் கையெழுத்து செய்யுங்கள்" என்றான். அவன் மரணத்திற்குப் பிறகு அவனுடைய கண்களை மங்கள சிங் ஆஸ்பத்திரிக்குத் தானமாகத் தரும் ஒப்பந்தம் அது.

"சந்தோஷமாக எழுதுகிறேன்" என்று ஜகந்நாதன் கையெழுத்துப் போட்டான். வெளிகேட் வரையில் டாக்டர் வந்து அவனுக்கு விடை கொடுத்தனுப்பவே, ஜகந்நாதனும் காரில் ஏறிக்கொண்டு தன் ஓட்டலுக்குத் திரும்பினான் என்றுமில்லாத வகையில் அவன் மனம் நிறைவு கொண்டிருந்தது.

★

திருட்டு!

காலியெர்ஸ் என்ற ஒரு அமெரிக்க வாரப் பத்திரிகைக்கு ஒரு தடவை ஒரு இலக்கியாசிரியர் பின் வருகிற கடிதத்தை அனுப்பி வைத்தாராம்:

"நான் 1930 முதல் தங்களுக்கு என் மேதாவிலாசம் ததும்பும் கதைகளை அனுப்பி வந்து கொண்டிருக்கிறேன். அவற்றில் எதையும் அப்படியே தாங்கள் உபயோகித்ததில்லை எனினும், அவற்றில் உள்ள நல்ல அம்சங்களையெல்லாம் நீங்கள் திருடி உபயோகித்து வந்திருக்கிறீர்கள். நான் உங்களுக்கு அனுப்பாத கதைகளிலிருந்தும் கூட நீங்கள் திருடியிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆகவே இந்தக் கதையையாவது உடனே போட்டு விடுங்கள்."

இந்தக் கடிதத்துடன் அவர் கதையைத்தான் வைத்து அனுப்ப மறந்து விட்டாராம்!

—எஸ்: ராஜா.



படித்திருக்கிறீர்களா?

க.நா.சுப்ரமண்யம்

பொழுதுபோக்கு

நம்மவர்களில் பெரும்பாலானவர்களுக்குப் பொழுது தானகவே போய் விடுகிறது. அவர்களாகப் போது போக்குவதில்லை. பொழுதைச் சரியானபடி போக்கத் தெரிந்தவனைக் கலைஞன் என்று நாம் கொண்டாடுவதில் தவறேயில்லை. பொழுதைச் சரியானபடி போக்கத்தெரிந்தவர் தி. ஜ. ர. அவர் எழுதி நமக்களித்துள்ள 'பொழுது போக்கு' என்னும் கட்டுரைத் தொகுதி ஓரளவு நமக்கும் அந்தக் கலையைக் கற்றுத்தர முயலுகிறது. நாற்பத்தியொன்பது கட்டுரைகளில் இந்தக் கலையை நம்மால் கற்றுக்கொள்ள முடியாவிட்டால், அதற்கப்புறம் இந்தக் கலை நமக்கு என்றும் கைவாராது என்று விட்டுவிட வேண்டியதுதான்.

"தாயுமானஸ்வாமிகள் இப்போது உயிருடனிருந்தாரானால் எந்தப் பத்திரிகை ஆபீஸிலாவது அவருக்கு ஆசிரியர் உத்தியோகம் கிடைக்குமா?" என்று கேள்விக்குப் பதில் அளிக்க முயலுவது மிகவும் ரஸமான விஷயம். எந்தெந்தப் பத்திரிகைகளுக்கு யார் யாரிடம் சிபார்சு வாங்கிக்கொண்டு, எந்த எந்தமாதிரி விண்ணப்ப நமூனக்கள் எழுதிக்கொண்டு தாயுமானஸ்வாமிகள் கிளம்பியிருப்பார் என்று சிந்தித்துப் பார்ப்பதிலே ஒரு நாள் என்ன, ஒருவாரம் பூராவும்கூடப் பொழுதைக் கழித்துவிடலமே! தாயுமானஸ்வாமிகளுக்குக் கண்டிப்பாய் இன்றையப் பத்திரிகைகளில் எதிலும் வேலை கிடைக்காது என்று ஆசிரியர் தி. ஜ. ர. சொல்வதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமேயில்லை. ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம் என்பதற்கும் காரணங்கள் கண்டு பிடித்துக் கொண்டே மேலும் ஒரு வாரம் கழித்து விடலாமே நாம்!

இலக்கியமே ஒரு பெரும் பொழுது போக்குதான் என்று ஒரு கட்சியுண்டு. அதை ஒப்புக்கொள்ள மறுக்கிறவர்களும் கூட, தி.ஜ.ர.வின் கட்டுரைகள் போன்ற கட்டுரைகள் வெறும் பொழுது போக்குதான் என்று நிச்சயமாக ஏற்றுக்கொள்வார்கள். உல்லாஸமான பொழுது போக்கு இது என்பதுதான் விசேஷம். சிந்திக்கத்தூண்டி பலவிதமான நோக்குகளை நமக்கு, நமது தினசரி சாதாரணக் காரியங்களிலும் உண்டாக்கித் தருகிற பொழுது போக்கு இது.

"பாடத் தெரியாதவன் சங்கீதத்தைப் பற்றிப் பேசலாமா, கூடாதா?"—இதென்ன அசட்டுக் கேள்வி என்று நமக்குத் தோன்றும். ஆனால் கட்டுரையாளர் எடுத்துரைக்க எடுத்துரைக்க 'இது ஒன்றும் அப்படி அசட்டுத்தனமான கேள்வியல்ல; இதில் விசேஷம் அடங்கியிருக்கிறது' என்கிற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. ஆனால் முடிவு என்னவோ அப்படி ஒன்றும் முக்கியமல்ல. சமைக்கத் தெரியாதவன் சாப்பிடவே கூடாது என்று சொல்ல யாராவது துணிவார்களா?"

"ஸைக்கிள் வண்டிக்குச் சரியான தமிழ்ப் பதம் துவிச்சக்கர வண்டிதானா? அல்லது உதை வண்டியா?"—இதைப் பற்றி யெல்லாம் நான் யோசிக்கவில்லை. ஸைக்கிள் வண்டி என்று சொல்லிக் கொண்டே அதில் சவாரி செய்யப் பழகினேன். ஸைக்கிள் வண்டி என்று சொல்லிக்கொண்டே அதைக் கைவிட்டேன். ஆகையால் தான் ஸைக்கிள் வண்டி என்ற பெயருடனேயே இந்தக் கட்டுரையையும் எழுதுகிறேன். இந்த அவையடக்கத்துக்குப் பிறகும் தூய தமிழ் நண்பர்களுக்கு ஏதாவது அதிருப்தி இருக்குமானல், அவர்கள் தங்களுக்குப் பிரியமான துவிச்சக்கரம் அல்லது உதையை ஸைக்கிளுக்குப் பதிலாக இந்தக் கட்டுரையில் மாற்றிக் கொண்டு படிப்பதில் எனக்குச் சிறிதும் ஆட்சேபம் இல்லை" என்று 'ஸைக்கிள் பாடம்' என்கிற கட்டுரையைத் தொடங்குகிறார் ஆசிரியர்.

தி. ஜ. ர.

பொழுது போக்குதானே என்று இந்த ஸைக்கிள் பாடத்தில் ஸைக்கிள் என்று வந்திருக்கிற இடங்களையெல்லாம் கணக்கெடுத்துப் பார்த்தேன். என் கணக்குப்படி மூன்று பக்கங்களில் பதினெட்டு இடங்களில் வந்திருக்கிறது இந்த வார்த்தை. 'நான் தூய தமிழ் நண்பனானல் ஸைக்கிள் என்பதற்குப் பதில் துவிச்சக்கர வண்டி என்று சொல்வேனா, உதை வண்டி என்று சொல்வேனா, இஷ்டப்படி மாற்றி மாற்றி இரண்டுமே (ஸைக்கிளையும் சேர்த்து மூன்றையுமே) சொல்வேனா? வார்த்தைகளை மாற்றியமைத்து இந்தக் கட்டுரையை எத்தனை விதங்களில் திருப்பி எழுதலாம்' என்று எண்ணிப் பார்த்தேன். கணக்கில் நான் புலியல்ல—ஆகவே விடை அப்படியொன்றும் சரியாக வரவில்லை. ஆனல் பகுத்தறிவுப் போட்டிகள், குறுக்கெழுத்துப் போட்டிகள், நேர் எழுத்துப் போட்டிகள், வரிசை எண் போட்டிகள் இதெல்லாவற்றையும்விட இது நல்ல பொழுது போக்காகவே எனக்குத் தோன்றிற்று. பிரவேசக் கட்டணம் எதுவுமில்லாததால் இது லாபகரமாகவும் இருந்தது என்பது வெளிப்படை.

ஸைக்கிளைப்பற்றி தி.ஜ.ர. சொல்கிற விஷயங்களும் கவனிக்கப்பட வேண்டிய விஷயம்தான். "பொதுவாக, யந்திரங்கள் எவற்றைக் கண்டாலுமே எனக்குப் பரம பிரமிப்பு. அதுவும் இந்த ஸைக்கிளிடம் என் உள்ளம் மகா வசியப்பட்டிருந்தது. அந்தக் காலத்தில், அடாடா! அந்த வெள்ளைக்காரன் வேலை தான் என்ன வேலை போங்கள்! இந்த ஸைக்கிள் வண்டியைப் பார்க்கும்போதுதான் கடவுளின் ஒரு பெரிய தன்மையும் வெள்ளைக்காரனின் ஒரு பெரிய சாமர்த்தியத்தையும் பற்றி நாம் சிந்திக்க வேண்டியதாக இருக்கிறது. ஸைக்கிள் வண்டியின் நுட்பம் என்ன? சாதாரண வண்டிகளை மாடு, குதிரைகள் இழுக்கின்றன. மோட்டாருக்குப் பெட்ரோல் தேவையாக இருக்கிறது. இந்த மாதிரி யெல்லாம் எந்த அந்நிய சக்தியின் உதவியும் இல்லாமல், மனிதன் தன் சொந்தச் சக்தியைக் கொண்டே தன் நிஜ சக்திக்கு மிஞ்சிய வேகத்திலும் தூரத்திலும் பிரயாணம் செய்யச் சாத்தியமாக்கும் அபூர்வக் கருவியல்லவா ஸைக்கிள் வண்டி. மனிதனுக்கு இரண்டு சக்கரக் கால்கள் முளைத்தது போன்றது ஸைக்கிள் வண்டி. இந்த யுக்தி கடவுளுக்குத் தோன்றாமல் போயிற்று; வெள்ளைக்காரன் கண்டுபிடித்துவிட்டான். சக்கரக் கால்கள் தான் ஸைக்கிள் வண்டியின் நுட்பம்." விளையாட்டாகவும் வினையாகவும் பொழுது போக்காகவும் சிந்திக்க வேண்டிய விஷயம்தான் இது. தி. ஜ. ர. வின் ஸைக்கிள் கட்டுரைக்கு நாம் மிகவும் கடமைப்பட்டவர்களாகிவிடுகிறோம் இதைப் படித்தவுடனேயே.

"...கன்னிப் பெண்கள் தன் காதலரை (இலக்கியப்படி) சந்திக்க வேண்டிய ஆனல் (வாழ்க்கைப்படி) சந்திக்காத இன்ப நிலவிலே என் ஸைக்கிள் பால

பாடம் ஆரம்பமாயிற்று.” ஸைக்கிள் கற்றுக் கொள்கிற பயிற்சிக்கு ஒரு உதாரணம் சொல்கிறார் ஆசிரியர்—“ஹநுமான் சஞ்சீவி பர்வதத்தைக் கொண்டு வருகிற மாதிரி” என்று. சஞ்சீவி பர்வதம் வந்து சேருவது ராமாயணத்தின் போக்குக்கு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் இன்றைய துரித வாழ்க்கையை நடத்த, ஸைக்கிள் கற்றுக்கொள்வதும் என்று சொல்வதில் தவறில்லை.

வாத்தியார் ரகங்களைப்பற்றியும் தி. ஜ. ர. குறுகிய அளவில் சொல்வதற்கு நிறையவே விஷயங்கள் வைத்திருக்கிறார். “வாத்தியார் வேலை மிகவும் உயர்ந்தது என்பது என் திடமான அபிப்பிராயம். ஏனென்றால், அதுதான் பகல் தூக்கத்துக்கு முற்றும் வசதியான உத்தியோகம். அநேக வாத்தியார்கள் அப்படித் தூங்குவதில்லை என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மாணவர்களை விசாரித்துப் பார்ப்பீர்களானால், நல்ல வாத்தியார்கள் அத்தனை பேரும் வகுப்பில் தூங்குகிறார்கள் என்று கண்டு கொள்வீர்கள்” என்று கட்டுரையைத் தொடங்குகிறார் ஆசிரியர் தி. ஜ. ர. “எனக்கு அந்த வேலை கிடைக்காததற்காக, நான் என் வாத்தியார்களை மறக்கவில்லை” என்று எவ்வளவு நயமாக மொழிந்திருக்கிறார்!

“நான் சின்னப் பையனாய் இருந்த போது, மிக நல்ல வாத்தியார் ஒருவர் இருந்தார். சாது. விஷயம் ரொம்பத் தெரிந்தவர். அப்படியிருந்தும் அவருடைய பிரியத்துக்குப் பாத்திரமாக யாருக்குமே இஷ்டமல்லை. அது விஷயமாக, ஒரு நாள் மாணவர்களுக்குள் பிரமாதமான சண்டைகூட உண்டாகிவிட்டது. நாள் தவறாமல் பக்திக்கு உதாரணமாக ஏகலைவன் கதையை அவர் எங்களுக்குத் திரும்பத் திரும்பச் சொல்லி வந்தார். யாருடைய கட்டை விரலுக்கோ வாத்தியார் அடிபோடுகிறார் என்ற பயம் எல்லாருக்கும் உண்டாகிவிட்டது. ஒவ்வொரு பையனுக்கும் அர்ஜுனனை இஷ்டம் இருக்கிறதேயொழிய, ஏகலைவனை எவனுக்கும் இஷ்டமில்லை.” நியாயம் தானே!

‘தூக்க மருந்து’ என்று ஒரு கட்டுரை. இந்த நாற்பத்தியொன்பது கட்டுரைகளில் இதுதான் எனக்கு மிகவும் பிடித்தது என்று சொல்ல தைரியமில்லை – ஏனென்றால் எல்லாக் கட்டுரைகளிலுமே ஏதாவதொரு சிறிய விஷயமாவது எனக்குப் பிடித்ததாக இருக்கிறது. ஆகவே, இந் நூலிலுள்ள நாற்பத்தொன்பது நல்ல கட்டுரைகளில் இதுவும் ஒன்று என்று சொல்லிவிட்டுச் சில பகுதிகளை மட்டும் இங்கு தருகிறேன்.

‘சென்னை சட்டசபை நேற்றிரவு முழுவதும் தூக்கமில்லாமல் வேலை செய்து சரித்திரத்தை சிருஷ்டித்து விட்டது’ என்று எழுதினர் ஒரு பத்திரிகை நிருபர். நான் எத்தனையோ நாள் இவ்விதம் சரித்திரத்தைச் சிருஷ்டித்திருக்கிறேன். ஆனால் பத்திரிகைகள் வெளியிட்டதில்லை. ஏனென்றால், அந்தக் கௌரவம் என்னைச் சேர்ந்ததில்லை. என் அறையிலுள்ள மூட்டைப் பூச்சிகள், கொசு, சீட்டுக்கட்டு, எதிர் வீட்டு கிராமபோன் ஆகியவற்றுக்கே அது உரியதாகும்’.

இதுதான் கட்டுரையாளரின் கலை என்று தி. ஜ. ர.வின் கட்டுரையை எடுத்துத் தருவது தவறில்லை. இலக்கியத் துறைகளிலே கவிதை, நாவல், சிறு கதை, நாடகம் என்றெல்லாம் பல சிறு பகுதிகளுக்கு மதிப்பும் பெருமையும் ஏற்பட்டுவிட்டது நமக்குத் தெரிகிறது. மாண்டேன் என்கிற பிரெஞ்சு ஆசிரியர் தொடங்கி, லாம்ப் என்கிற ஆங்கில ஆசிரியர் சிறப்பாகச் செய்து நமக்களித்திருக்கும் கட்டுரைக் கலையின் இன்றையக் கொழுந்து தி. ஜ. ர. என்றால் அது மிகையாகாது. தமிழில் அறிவியல் கட்டுரை, விஞ்ஞானக் கட்டுரை, வேதாந்தக் கட்டுரை என்றெல்லாம் அடிபடும் கட்டுரை சிறப்பாகப் பெயர் பெறுவது தி. ஜ. ர. அவர்கள் கையில்தான் என்று சொல்ல எனக்குத் தோன்றுகிறது. கனமான விஷயங்களையும் லேசாக, ஒரு தனி நோக்குடன், சொல்லியிருக்கிறார் தி. ஜ. ரங்கநாதன். இந்த ரகத்தில் தி. ஜ. ர.வைப் பின்பற்றுபவர்கள் ஒருவர் இருவர் இருக்கலாம்; அவரை மிஞ்சிவிட்டவர்கள் என்று சொல்ல முன்னும் ஒருவரும் இருந்ததில்லை; இன்றும் இல்லை.

தூக்கத்தைப் பற்றிய அவருடைய கட்டுரையை மேலும் பார்ப்போம். சுவாரசியமான விஷயம் அல்லவா? “தூக்கம் இயற்கையின் வைத்தியன்; மனக் கவலை தீர்க்கும் மருந்து; ஏழைகளின் பூலோக சொர்க்கம். தூக்கம் நமக்கு ஒரு புது உலகத்தை – அதிசயக் கனவு ராஜ்யத்தைப் படைத்துத் தருகிறது. சாத்தியமில்லாத நமது மனோ ரதங்களையும் ஆசைகளையும் பூர்த்தி செய்து தரும் சாதனம் தூக்கந்தான்.

“தூக்கமில்லாவிட்டால் அதிசயக் கனவுகளெல்லாம் காண்பது நமக்கு சாத்தியமாகுமா? நேற்றிரவு நான் ஒரு பிரமாதமான காவியத்தைச் சிருஷ்டித்து விட்டேன். பத்திரிகைகளெல்லாம் அதை ஏகோபித்துப் புகழ்ந்தன; ஜனங்களெல்லாம் அந்த நூலை வாங்கி, ஆவலுடன் விழுந்து விழுந்து படித்தார்கள். எனக்கு ஒரு பெரிய கௌரவ விருந்து நடத்தக்கூட ஏற்பாடுகள் நடந்தன. இத்தனையும் கனவில்தான் நிகழ்ந்தன. ஆனாலும் என்ன? இப்போது நான் இதை எழுதிக் கொண்டிருப்பது எவ்வளவு உண்மையாய் இருக்கிறதோ, அவ்வளவு உண்மையாய் இருந்தன அப்போது அவையும். ஆனால் விருந்தைச் சாப்பிடப் போகிற சமயத்தில், அந்தச் சனியன் பிடித்த தூக்கம் கலைந்துவிட்டது. வேறொரு நாள் கனவில் விருந்து பூர்த்தியாகும் என்று நினைக்கிறேன் . . .

“கொஞ்ச நாளாகத்தான் தூக்கத்தின் சுகத்தை நான் ஓரளவு அனுபவித்து வருகிறேன். அதற்கு முன் எத்தனையோ நாள் நல்ல தூக்கமில்லாமல் அவதிப் பட்டிருக்கிறேன் . . . சமீபத்தில்தான் நான் உண்மையான தூக்க மருந்தைக் கண்டு பிடித்தேன் . . என் மருந்துப் பிரயோக முறை பின்வருமாறு: முதலில் விளக்கைச் சற்று உயர்த்தி என் தலை மாட்டில் வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு நன்றாய்க் காலை நீட்டிப் படுக்க வேண்டும். தூக்க மருந்தைக் கையில் எடுத்துப் பிரிக்க வேண்டும். அது வேறொன்றும் அல்ல. போன வாரம் வெளியான ஒரு கடுமையான இலக்கியப் பத்திரிகைதான். சில பக்கங்களைப் புரட்டி, அதன் கரடுமுரடான விஷயங்களைப் படித்தால், நாலே நிமிஷத்தில் தூக்கம் வந்துவிடும். இலக்கியங்களில் இப்போது எனக்குப் பெரிய மோகம் ஏற்பட்டிருப்பதற்கு வேறு காரணம் வேண்டுமா? இலக்கியம் நீடூழி வாழ்க’

இதில் விசேஷம் என்னவென்றால், ‘பொழுதுபோக்’கைக் கையில் வைத்துக் கொண்டும் தூங்கலாம் என்பதுதான். அதை மறந்துவிட்டு எழுதுகிறவர் அல்ல தி. ஜ. ர. அப்படி மறந்துவிட்டு எழுதினாரானால் அவரை எப்படி நல்ல கட்டுரையாளர் என்று சொல்ல முடியும்—மாண்டேனுக்கும், லாம்புக்கும் தமிழில் ஏற்பட்ட வாரிசு என்று சொல்ல முடியும்? விஷயத்தை ஒரு நோக்குடன் சொல்லிக் கொண்டு போகும்போதே, இந்த விஷயத்தை வேறு பல நோக்குகளுடனும் பார்க்கலாம் என்பதைத் தொக்கி நிற்கிற மாதிரி காட்டுவதுதான் திறமை. அந்தத் திறமை தி.ஜ.ர.வுக்கு இருப்பது நன்கு தெரிகிறது, இந்த நாற்பத்தொன்பது கட்டுரைகளையும் பார்க்கும்போது.

“கடவுள் தோல்வியுற்றார் என்ற ஆச்சரியமான செய்தியை இன்று நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். ‘யாரிடம்?’ என்று நீங்கள் கேட்கக்கூடும். அதைச் சொல்லுவதுதான் எனக்கு மிகவும் கூச்சமாக இருக்கிறது. நான் ரொம்ப அடக்கமான மனிதன். சிலர்போல என் பெருமையை தானே சொல்லிக்கொள்ளும் பழக்கம் எனக்கு இல்லை. ஆகையால் நீங்கள் என்னதான் மன்றாடினாலும் கடவுள் யாரிடம் தோற்றார் என்ற விஷயத்தை நான் உங்களுக்குத் தெரிவிக்கப் போவதேயில்லை. நீங்களாகவே ஊகித்துக்கொள்ளுவதுதான் அழகு என்று மட்டில் குறிப்பிட விரும்புகிறேன்.”

இதை எழுதிய தி. ஜ. ரங்கநாதன் ரஸமான மனிதர். அவருடைய ரஸமான கட்டுரைகளில் சின்னதும் பெரியதுமான பல ரஸமான விஷயங்கள் அடிபடுகின்றன. அவ்வளவும் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் தான் (அல்லது தாமா?)!

இயற்கை தேவியின் அன்புக்கைகளால் அரவணைக்கப்பட்ட அழகிய ஊர் மருதங்குடி. இயற்கை அழகு ததும்பிய மருதங்குடி, அந்த மாவட்டத்திலுக்கு வேண்டிய நெல்மணிகளை இல்லையென்றது வழங்கிக்கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான கமக்காரர்களின் உறைவிடமான மருதங்குடியின் தலைவன் அவன். பல நூற்றுக் கணக்கான ஏக்கர் புன்செய் நிலங்களுக்குத் தலைவன்,. சொந்தக்காரன் அவன்.

அவன் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்ய எத்தனையோ பேர்கள் காத்து நின்றுர்கள். இத்தனைக்கும் அவன் தொண்டுகிழவனல்ல; கட்டிளங்காளை; இளமை சொட்டும் அழகு வாலிபன். எடுப்பான தோற்றங்கொண்ட போடிமகன் அவன். சுருண்ட கிராப்பும், அரும்பு மீசையும் எடுப்பான அவனது தோற்றத்துக்குத் தனியோர் வகையான கவர்ச்சியை ஊட்டிக்கொண்டிருந்தது. சுருங்கச் சொன்னால் அவன் மருதங்குடியின் மன்மதனெனலாம்.

அவன் வழக்கம்போல் வயல்வெளியைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தான். வழியிலே அவளைத் தற்செயலாகக் கண்டான். கண்டதும் க்ருத்தை இழந்தான். அவள் வேறு யாருமல்ல. அவனுக்குச் சொந்தமானவள். முறைப்படி தாலிகட்ட வேண்டியவள். சிறுவயதிலே அவன் அவளுடன் எவ்வளவோ சல்லாபமாக இருந்திருக்கிறான். ஆனால் பருவமென்னும் பண்புத் திரையிலுள் அவள் பதுங்கிக்கொள்ளவும், அவனால் அவளைக் கண்டுகொள்ள முடியாது போயாற்று. இன்று தற்செயலாகக்கண்டுவிட்டான். அப்படித்தான் கண்டாலும், பகிரங்கமான பாதையிலே, என்னேரமும் பார்த்துக்கொண்டு நிற்கமுடியுமா? மற்றவர்கள் வித்தியாசமாக எண்ணுவார்களே! ஆதலினால் தன் நிலை இழந்தவனாக வீட்டுக்குச்சென்று படுக்கையிலே வீழ்ந்தான்.

படுக்கை எப்படி இதமாக இருக்கும் அவனுக்கு. அவனால் படுக்க முடியவில்லை. படுக்கை முள்போல் குத்தலாயிற்று. அவளைப்பற்றிய இன்பநினைவிலே, பொழுது மறைந்தது அவனுக்குத் தெரியவில்லை. எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. அந்த இருளினுள்ளே, அவள் அழைப்பது போன்றதோர் பிரேமை எழுந்தது. அவ்வளவுதான். துண்டை உதறிப் போட்டுக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினான்.

தெருவினுக்குக் காவலான சொறி நாய்கள் அவனைக் கண்டதனல் குரைக்கத் தொடங்கின. குரைக்கத்தொடங்கிய நாய்கள் அவனைத் துரத்தவும் தொடங்கின. அந்த இக்கட்டான நிலையிலிருந்து தப்புவதற்காக ஓடத் தொடங்கியவன், அவளது படலைத் திறந்து உள்ளே நுழைந்தபின்னர்தான் ஓய்ந்தான்.

ஓரளவு தன்னை ஆசுவாசப் படுத்திக்கொண்டு, அவளது வீட்டுக் கதவை மெதுவாகத் தட்டினன். கதவு தட்டுமுன்னரே அவள் விழித்துக்கொண்டாள். நாயின் குரைப்பொலி அவளது நித்திரையைக் குழப்பிவிட்டது. கதவு தட்டும் ஓசை தொடர்ந்துகொண்டிருந்தது. எந்நாளும் தட்டப்படாத கதவு தட்டப்படுவது அவளுக்குப் புதுமையாகத்தானிருந்தது. இத்தனை துணிவுகொண்டு கதவை இடிப்பது யார் என்று கேட்டு விடுகிருள். அதுவும் எப்படிக் கேட்கிருள். நாடோடிக் கவிதையிலே கேட்கிருள்.

தடதடவென ஓடி வந்து
 தலைவாசல் நீ துறந்து என்றன்
கதவில் தெறிக்க யார்
 பொடியா ஓர் முறைக்கு.

அவளது கவிதை அமுதைக் கேட்டு அவன் குதூகலமுற்றுன். மருதங்குடி மக்களுக்குக் கவிதை இசைப்பது ஓர் பொழுதுபோக்கு. அப்படி நியதி இருக்க, அவன் எப்படி விதிவிலக்காக முடியும். யார் என்று கேட்கிருள். அதுவும் கதவிலே தட்ட என்ன முறையென்றும் கேட்கிருள். கேள்விக்குப் பதில் இறுக்கிருன் அவன். கவிதை எழுகிறது.

ஊரான் மகனென்று
 உன்றன் வாயால் ஏசிடாதே
உங்க மாமி மகன் நான்தான்
 மதிக்கலியா மயிலாளே.

கவிதையினால் அவள் அவனை இன்னுரென்று ஊகித்துக்கொண்டாள். நாளையொருக்கால் ஊரறியத் தாலிகட்டுபவன் அவன்தான். இருந்தாலும் அர்த்த ராத்திரியிலே வந்து கதவைத் தட்டினல் எப்படித் திறக்கமுடியும். அப்படித்திறந்தால் ஒருக்கால் விபரீதமாக எண்ணக்கூடும். எவ்வகையிலும் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதே நன்மையென்ற முடிபினுக்கு வந்தாள். அவள் அவ்வாறு கட்டிய முடிபை அவன் ஏற்கவேண்டுமே. அவன் கோபிக்காமலுமிருக்கவேண்டும். தான் கதவு திறக்காமலும் இருக்கவேண்டும். பொழுதைக் கடத்திவிட்டால் தன்னாலே அவன் சென்றுவிடுவான். ஆகவே

சினிமாக்கதை

எட்னெஃபெர்பர் என்கிற ஆசிரியை எழுதிய கதை ஒன்றை சினிமா படம் பிடிக்க ஏராளமான பணம் தந்து ஒரு சினிமா கம்பெனிக்காரர் வாங்கிஞர். படம் பிடித்தானதும் ஆசிரியைக்குப் படத்தைப் போட்டுக் காட்டினர்கள்.

“படம் நன்றாக இருக்கிறது. ஆனால் அது என் கதை அல்ல” என்றான் ஆசிரியை.

தன் கதையைத் திருப்பி வாங்கிக்கொள்ளப் பணம் தந்துவிடுகிறேன் என்றாள் ஆசிரியை. அதற்கு ஆக்ஷேபமில்லை என்றது சினிமா கம்பெனி. ஆனால் கதையை சினிமாப்படம் பிடிக்கிற உரிமையை மட்டும், தனக்குத் தேவையானல் வாங்கிக்கொள்ள முதல் உரிமை தரவேண்டும் என்றும் கேட்டது!

—எஸ். ராஜா

என்ன செய்யலாமென எண்ணினாள்! எண்ணத்தை நடைமுறையில் கொண்டு வர நாடோடிக் கவிதைகளைத் துணையாகக் கொண்டாள். புதிருக்குமேல் புதிரை அள்ளி அள்ளி வீசினாள். ஏட்டிக்குப் போட்டிதானே! அவனும் சளைக்கவில்லை! கவிதைகள் எழுகின்றன.

அவள் :

மாமி மகனென்று
மருங்காகப் பேசுகிறாய்
இச் சாமம் வந்து
எழுப்பறது யார் மகனோ?

அவன் :

மாமி மகன் நான்தான்
மச்சான் முறை காரனுந்தான்
சொந்த உரித்தாளனென்று
ஓடி வந்தேன் கண்மயிலே

அவள் :

ஆருமறியா அரிய ராத்திரி
வேளை இந்நேரம்
பாலா உனக்கு என் நினைவு
வந்த மாயமென்ன?

அவன் :

பாயை விரித்துப் படுப்ப மென்று
நான் போனேன்
உன்றன் நினைவு வந்து
ஓடி வந்தேன் கண்மயிலே!

அவள் :

என்றன் ஆயாளும் நானும்
படுக்குமிந்தக் காம்பறையிலே
இச்சாமம் இங்கு வந்து
எழுப்பறது யார் மகனோ?

அவன் :

ஆரோ எவரோ வென்று
ஆராம்பு பண்ணாதே
உங்க மாமி மகன் நான்தான்
கதவு திற சீதேவி.

அவள்:

கதவு திறக்கச் சொல்லிக்
கருத்துடனே பேசுகிறாய்
இந்நேரம் இங்கு வந்து
எழுப்புவதன் ஞாயமென்ன?

அவன்:

முந்திரியம்பழமும்
மூணுவகை முட்டாசும்
கற்கண்டும் தாரேன்
கதவு திற என் கண்மணி.

அவள்:

கதவு திறக்கவொண்ணா
கடும்பூட்டு என் கதவு
இந்நேரம் மச்சான் நீ
எங்கிருந்து வாராயோ?

அவன்:

இலந்திப் பழமே என் இன்பமுள்ள
தேன்வண்டே
அதிமது ரங்கிளியே
மலை நங்கணமே கதவு திற

அவள்:

கதவு திறப்பேன் கதைத்திருக்க
நான் வருவேன்
சோகம் தெளிவிப்பேன்
சொன்னகதை மாறுதில்லை

அவன்:

முல்லைச் சிரிப்பழகும்
முகத்தழகும் கண்ணழகும்
வல்லி இடையழகும்
மனதைவிட்டுப் போகுதில்லை

அவள்:

மனதை மனதறியும்
வஞ்சகத்தை நெஞ்சறியும் என்
நெஞ்சிலுள்ள வெஞ்சம்
நீயறியப் போவதில்லை.

அவன்:

உயரப் பறக்கும் ஒரு கோடி
நங்கணங்காள்
தாழப்பறவீரோ என்றன்
தலைவி சுகம் கேட்டறிய.

அவள்:

கண்மலரும் கால்நடையும்
கதையழகும் கைவீச்சும்
என்னேரமும் என் கண்முன்
இடிக்குதுகாண் என் துரையே

அவன்:

ஏழைக் கிரங்கி மச்சாள்
இனியுந்தன் மனதிரங்கி
நாளுக்கிரங்கி மச்சாள்
நல்லதுணை தந்தாலென்ன?

அவள்:

அந்தி விடிஞ்சி மச்சான்
அனுதினமும் ஓடிவந்தால்
பூவிலொரு பிஞ்சு
பிடித்ததென்றால் வம்புவசை

அவன்:

வம்புவசைக்கென்ன பயம்
மாமன் மகன் நானிருக்க
வஞ்சகங்கள் இல்லை மச்சி
மாங்கலியம்தான் தரிக்க.

கவிதை வெள்ளம் தடம் புரண்டு ஓடுகிறது. அவளுக்கு அவன் சளைத்தவனல்ல! அவனுக்கு அவள் சளைத்தவளல்ல! கவிதையிலே தங்களது கைவரிசைகளைக் காட்டுகிறார்கள். அவன் எதையோ நாடிவந்தான். அந்த எண்ணத்தை நிறைவு செய்வதற்காக அவளுடன் சேர்ந்து கவிதை இசைக்கத் தொடங்கிப் போட்டியையும் ஏற்படுத்தி விட்டான்! போட்டி மேலும் சுவாரசியமாகத் தொடருகிறது. அவள் அறையினுள் இருந்து கொண்டு இசைக்கிறாள். அவனோ, திண்ணையிலே கதவுக்கு முன்னர் இருந்து கொண்டு இசைக்கிறான். கவிதைகள் சங்கிலித் தொடர்போல் பின்னிப் பின்னி எழுகின்றன.

அவள்:

மாமன் மகனே என்றன்
மாம்புள்ளிச் சாவலே நீ
வங்கிசத்துக் கோர் பிழையும்
வாராமல் காக்கவேணும்

அவன்:

ஓடிவரும் தண்ணீரிலே
உருண்டுவரும் திரண்டமுத்தே
பதித்த முத்து மாலைவடம்
பாரிருந்து என் குணத்தை

அவள்:

கடலைக் கலக்கிறதும்
  கடல்நுரையை அள்ளுறதும்
உடலை வருத்துறதும்
  மச்சான் உங்களுக்கு சம்மதமோ?

அவன்:

தாலிக்கொடியே என்றன்
  தாய்மாமன் பெற்ற கன்றே
மாமிகொரு மகளே
  உன்னைமறக்க வொண்ணுதில்லே

அவள்:

ஈரச் சுவரானேன்
  இடிந்து(வி)ழுந்த மண்ணானேன்
பாரக் குமரானேன்
  இந்த பாரமெல்லாம் யார் தலைக்கோ?

அவன்:

கூந்தலழகும் உன்றன் குறுஞ்
  சிரிப்புப் பல்லழகும்
நெற்றி இளம்பிறையும்
  நான் நித்திரையில் கண்டேனே

அவள்:

பாலைப் பிழிந்தெடுத்தேன்
  பழத்தைஉரிக்க மறந்தேன்
சோற்றைப் பிசைந்தெடுத்தேன்
  தொண்டையிலே போகுதில்லே

அவன்:

பதினெட்டுக் கட்டை பறந்து
  விழுந்தோடி வந்தேனடி
ஈரத் துளிரான மச்சியை
  எதிரே வந்து காண்போமென்று

பொழுது புலரும் வரையும் கவிதை இசைத்து அவனை ஏமாற்றத்துடன் அனுப்பவேண்டுமென்பது அவளது எண்ணம். ஏமாற்றத்துடன் அவன் சென்றுற்

அவன்:

சந்திரனுக்கும் வடுவுண்டு
  தாமரைக்கும் குற்றமுண்டு
முத்துக்கும் சொத்தையுண்டு என்
                                        மொய்
  குழலுக்கு குற்றமில்லே

அவள்:

அச்சடியன் புத்தகத்தில்
  அரும்பு கட்டி வச்சதுபோல்
உன் நெற்றிப் புருவமென்
  நித்திரையில் தோணுதுகாண்

றுன் விரைவிலே திருமணத்திநுக்கும் ஏற்பாடு செய்வானென்று அவள் எண்ணினுள்.

அவளைக் காணவென்று வந்துவிட்டான். காணுமற் சென்றுல் ஆண்மைக்கு இழுக்கல்லவா? எப்படியாயினும் அவளது கவிதைக்கு எதிர் கவிதை பாடியேனும் அவளைக் காணவேண்டுமென அவன் எண்ணினுன்! இருவருக்கும் ஒருவர் மேல் ஒருவருக்கு அளக்க முடியாத அன்பிருந்தது. ஆனுல் அர்த்த ராத்திரியிற்றுன் அவர்கள் எண்ணத்திலே வேறுபட்டு நின்றுர்கள். அந்த எண்ணம் கனியாத காதல் மயக்கம்தான். மயக்கத்திலே கட்டுண்டு ஏட்டிக்குப் போட்டியாக இசைக்கிறுர்கள்.

அவள்:

வாழைச் சருகானேன்
  வைக்கோலுக்கும் கேடானேன்
பாரக் குமரானேன்
  இந்தப் பாரமெல்லாம் யார்
                                        தலைக்கோ?

அவன்:

மாதுளம் பூவே மச்சாள்
  மலையிலடை பொழுதே
சிங்கமக ராசாத்தி நீ
  சிறையிருக்க நீதியுண்டோ?

அவள்:

வானத்தில் வெள்ளி
  மங்காமல் பூத்தது போல்
சீனத்தின் வண்டே
  சிறையிருக்கேன் உன்னுலே

அவன்:

கட்டிலிலே நானிருக்க
  கதவோரம் நீயிருக்க
வாழையிலே பூவிருக்க மதனி
  வாழாமல் ஏனிருக்கா?

அவள்:

ஏறுபொழுதே மச்சான்
  இலங்குமந்தச் சூரியனே
சிங்கத்தின் குட்டியே
  சிரிக்க இடம் வையாதே

அவன்:

தேமல் முதிரை
  சிறு முதிரை கல் முதிரை
காராம் பசுக் கன்றே நீ
  கழுத்தறுத்துப் போடாதே

அவள்:

தாவையில் தகர மரம்
  தலை தெறிக்கக் காய்த்ததுபோல்
உங்க அகராதிக்கெல்லாம்
  அடிபணிய ஞாயமுண்டோ?

அவன்:

தங்கக் கொடிபறக்கத்
  தாதிமார் வேலை செய்ய
வெண்சாமரம் வீச
  விதியிருக்கு வா மயிலே

அவள்:

ஈரத்துளிரே மச்சான்
  இலங்குமந்தச் சூரியனே
மாதுளம் பூவே மச்சான்
  மனக்குறைகள் வைத்திடாதே

அவன்:

வட்ட முகத்தழகி
  வடிவாலுயர்ந்த கிளி
தொட்டவுன்னை விட்டு மச்சி
  கெட்ட எண்ணம் கொள்ளுவேனு

அவள் கவிதை இசைத்துக் கொண்டிருந்தாளே தவிரக் கதவைத் திறக்க வில்லே. நயமாகவும், அதிகாரமாகவும், புகழ்ந்தும் சொல்லிப் பார்க்கான். அவள் கதவு திறக்க முனேயக் கூட இல்லே! பொழுதோ ஓடிக் கொண்டிருந்தது. கடைசி ஆயுதமாக 'போகட்டா?' என்று இரந்து கேட்கிருன். அப்படிக் கேட்பதனுல் ஒருக்கால் கதவைத் திறப்பாளென்ற எண்ணம் அவனுக்கு. ஆனல் அவளுக்கோ பொழுது விடியச் சாமம் ஆகி விடட்டும் என்ற தவிப்பு. பொழுதுபுலர்ந்தால் அவன் வந்த சுவடு தெரியாமல் போய் விடுவான். ஏமாற்றத்திலே சென்ருல் திருமணத்துக்கு உடனடியாகமுனே வான் என்ற நிலேயான எண்ணத்தாலும் கவிதையைத் தொடருகிருள்.

அவள்:

புள்ளிமான் கன்றே
  புறநாட்டார் ஈன்ற முத்தே
வங்கிசத்து மச்சான் உன்
  வாக்குத்தப்பி போனதேனே?

அவன்:

வாசலுக்கு வந்து நின்று
  வெகுநேர மாகுதிப்போ
காலுங்கடுக்குதுகாண்
  கண்மணியே போயிடட்டா?

அவள்:

போயிடட்டா என்று சொல்லி
  என்னே வந்து கேட்காதே
போவென்று சொல்லப்
  பொருந்தாது என் மனசு

அவன்:

கதைக்குக் கதையெல்லாம்
  கதைத்துக் கொண்டிருக்காய்
ஈவிரக்க மென்பது
  இல்லேயோடி உன் மனசில்?

அவள்:

கலகலத்த கதை அழகும்
  கபடமற்ற முகத்தழகும்
என்னேரமும் கண்முன்
  இடிக்குதுகாண் என் துரையே

அவன்:

சாமம் அறுகுதுகாண்
  தலேக்கோழி கூவுதுகாண்
ஆளும் பலமாறுதுகாண்
  ஆசை வண்டே போகட்டா?

அவள்:

வாவென்று சொல்லி
  ஒரு வாக்குத் தந்தேனென்ருல்
போவென்று சொல்லப்
  பொறுக்காதே என் மனசு

விடியச்சாமம் ஆகி விட்டதென்பதைக் காட்டக் காகங்கள் குரலெழுப்பின. தனது எண்ணமெல்லாம் மண்ணுகப் போய் விட்டதே என்ற வெறுப்புத்தான் அவனுக்கு உண்டாகியது. கிராமியக் கற்பொழுக்கத்திலிருந்து அணுவளவேனும் பிசகாமல் காத்துக் கொண்டு விட்டோமே என்ற பெருமிதம் அவளுக்கு.

கிராமப் பெண்களுக்கு கற்பே பிரதானம். கற்பு நெறிக் குடும்பத்திலே வந்தவள் அவள். ஆசை அத்தானை அவனேக் கணவனுக உள்ளத்திலே நினைத்திருந்தாலும், களவொழுக்கத்தை மேற்கொண்டு குலக் கௌரவத்தைப் பாழடிக்க அவள் விரும்பவில்லே. நாளேயொரு காலம் கணவனுல் ஏளனம் செய்யப் படாமல் இருக்கவும் தக்கதாக அவள் தன்னேப் பாதுகாத்துக் கொண்டாள். விளேயாடியும் அவள் மதுரங் கிளியாள் அல்லவா? விஷயப் புறத்திலே ஏட்டிக்குப் போட்டி இறுதியாகத் தொடர்கிறது.



"அடுப்பு போட களிமண் வேணுங்கிறியே! இந்தப் பட்டணத்திலே அதுக்கு நான் எங்கே போவேன்?"

"நீங்க எங்கேயும் போகவேண்டாம். உங்கள் கடையிலேந்து இரண்டு படி அரிசி கொடுத்து அனுப்புங்கோ! அதிலே இருக்கும்!"

அவன்:

வெள்ளி படுகுதுகாண்
  விடியச்சாமம் ஆகுதுகாண்
பாலுக்குப் போருர்கள்
  பாவையே நான் போயிடட்டா?

அவள்:

போயிடட்டா என்ருல்
  மச்சான் மனம் புண்ணுகுதுவே
போவென்று சொல்லப்
  பொறுக்காதே என்மனசு

அவன்:

டலிலே விழுந்தாயினும்
  கைசேதப் பட்டாயினும்
மாமிமகளே உன்னே
  மறந்திருக்கமாட்டேனடி

அவள்:

வந்தாரென்ருல் மச்சான்
  வாசல்மரம் பூத்ததுபோல்
போனரென்ருல் மச்சான்
  பூப்பூத்து ஓய்ந்ததுபோல்

அவன்:

என்சீவன் கிடந்து
  இந்தச் சீமையிலே நானிருந்தால்
கட்டாயம் வாறநாளில்
  கலியாணந்தான் கிளியே

பொழுது புலரக் கிழக்கு வெளுக்கத் தொடங்கியது. அவன் மெதுவாகச் சென்றுவிடுகிருன். கடைசியாக அவன் சொன்னதுபோல, அந்தத் திங்களில் வந்த சுபமுகூர்த்தத்தில் அவளே அவன் மனைவியாக்கிக் கொண்டான்.

★

சந்திப்பு

விஜயஸ்ரீ

அப்பொழுதுதான் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பினேன். உடலும், மனமும் அலுத்துச் சோர்ந்து போயிருந்தன. வழக்கமாக உள்ள வேலை போதாதென்று, தலைமை ஆசிரியை வரப்போகும் ஆண்டு விழாவிற்காக என்னை ஒரு கலை நிகழ்ச்சி தயாரிக்கும்படி கூறியிருந்தார். அதற்காக ஒரு இசை நாடகத்திற்கு ஒத்திகை செய்துகொண்டிருந்தேன். அது என்ன, எளிதான வேலையா? நல்ல முக வெட்டு உள்ள பெண்களை முதலில் தேர்ந்தெடுக்கவேண்டும்; அதிலும் அவர்கள் எல்லோரும் செல்வச் சீமான்களின் புதல்விகளாயும் இருக்கவேண்டும் என்பது என் தலைவியின் ரகசியமான உத்தரவு. அப்பொழுதுதானே ஆண்டு விழாவிற்கு நிறையப் பணம் சேரும்!

“கலைமகளும், திருமகளும் ஒன்று சேர்ந்து இருப்பது அபூர்வம்’ என்று ஜானகி அடிக்கடி சொல்வாள். அது உண்மைதான் போல் இருக்கிறது. அந்தப் பெண்களிடம் நடிப்புக் கலை வரவே நடுங்கியது. ஒரு மாணவிக்குப் பாடத் தெரியவில்லையே என்று பின்னணிக் குரலுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். அதற்குத் தகுந்தாற்போல வாயை அசைக்கக்கூடத் தெரியவில்லை அவளுக்கு. என்னுடைய பொறுமை எல்லை மீறிவிட்டது.

“என்ன சாந்தா, எவ்வளவு தடவை சொல்லிக் கொடுப்பது? இந்தச் சின்ன விஷயத்தைக்கூடப் புரிந்துகொள்ள முடியாதா ஒரு பெண்ணால்?”, என்று எரிந்து விழுந்தேன்.

உடனே அந்தப் பெண் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டுக்கொண்டே தலைமை ஆசிரியையிடம் சென்றுவிட்டாள்.

சிறிது நேரத்தில் என்னை அழைப்பித்தார் என் தலைவி.

“எதற்காகப் பெண்களை அநாவசியமாகத் திட்டுகிறீர்கள்? ஆசிரியைகள் எதற்கு இருக்கிறோம்? தெரியாதவற்றைத் தெரிய வைப்பதற்குத்தானே? அதைவிட்டு ஏன் குழந்தைகளின் மனத்தைப் புண்படுத்த வேண்டும்?” என்றார்.

எல்லோரும் பிறருக்கு உபதேசம் செய்வதில்தான் சமர்த்தர்கள் போலும்! மற்றவர்கள் மனத்தைப் புண்படுத்தக்கூடாது என்று அறிவுரை நிகழ்த்திய அவர் அதைத் தம் செயலில் காட்டினாரா? இவ்வளவு படித்தும் சொல்லும், செயலும் ஒன்றாய் இருக்க வேண்டுமென்று தெரியவில்லையே!

ஆனால் இதையெல்லாம் அவர் கீழ் ஊழியம் செய்யும் நான் கேட்டுவிட முடியுமா? என்னுடைய தவறுக்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டு வந்தேன்.

ஐந்து நாட்களாக வேலை செய்த அலுப்பும், அதிகமான உழைப்பும், சொல்லம்புகளால் துளைக்கப்பட்ட மனதை மேலும் சோர்வடையச் செய்தன.

வீட்டை அடைந்ததும் ரகு ஓடிவந்து கால்களைக் கட்டிக்கொண்டான், “அம்மா, வரும்போது மிட்டாய் வாங்கிக்கொண்டு வருகிறேன் என்றாயே? கொண்டு வந்திருக்கிறாயா?” என்று கொஞ்சியவாறே.

“வந்ததும், வராததுமாய் ஏன் மேலே விழுந்து பிராணனை வாங்குகிறாய், சனியனே? போ அந்தண்டே”, என்று எரிச்சலுடன் கடிந்தேன், மனத்திலுள்ள கசப்பையெல்லாம் உமிழ்வதுபோல.

குழந்தையின் மனம் சுருங்கிவிட்டது. தேம்பியவாறே ஒரு மூலையில் உட்கார்ந்துவிட்டான். ஆனால் நான் அப்பொழுது அவனைத் தேற்றும் மனநிலையில் இல்லை.

என் பேச்சைக் கேட்டுக்கொண்டே வந்தாள் ஜானகி. ஜானகி அடுத்த போர்ஷனில் குடியிருப்பவள். திக்கற்றவளாய் நிற்கும் எனக்கு உற்ற தோழியாய் இருப்பவள் அவள்தான்.

“எதற்காகடி குழந்தையைக் கரித்துக் கொட்டுகிறாய்? எப்பொழுது பார்த்தாலும் கடுகடுப்பைத் தவிர, முகத்தில் சிரிப்பு என்பதையே காணோமே? விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சலம் கட்டினாற்போல உனக்குப் பெயர் வைத்தார்களே, ஹம்ஸவதனி என்று”, என்று ஸ்வாதீனத்துடன் கடிந்துகொண்டு, “இங்கு வாடாப்பா, ரகு”, என்றவாறே விசும்பிக்கொண்டிருந்த குழந்தையைத் தன்னிடம் இழுத்து அணைத்துக்கொண்டாள்.

"பெயர் வைத்துவிட்டால் போதுமா, ஜானகி? அதற்குத் தகுந்தாற்போல வாழ்க்கையும் அமைய வேண்டாமா? மனதில் சந்தோஷம் இருந்தால்தானே முகத்தில் மலர்ச்சி இருக்கும்? 'அகத்தினழகு முகத்திலே' என்று சொல்வதில்லையா? மனம் நொந்து கிடக்கும்போது என்ன கொஞ்சல் வேண்டியிருக்கிறது, சமயா சமயம் தெரியாமல்?" என்று சொல்லிக் கொண்டு போன என்னை இடைமறித்தாள் ஜானகி, "என்னடி, நீ பாட்டுக்கு அடுக்கிக்கொண்டே போகிறாய்? பெரியவர்களுக்கே நேரம், காலம் ஒன்றும் தெரியமாட்டேன் என்கிறதாம். பச்சைக் குழந்தைக்கு என்ன தெரியும்?", என்று.

"இந்த மாதிரி 'குழந்தை, குழந்தை' என்று இடம் கொடுப்பதால்தானே பெரியவளாகப் போன பிறகும் தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று தான்தோன்றித்தனம் உண்டாகிவிடுகிறது."

"சரி, சரி. மனதில் எதையாவது வைத்துக்கொண்டு பேசாதே. உன் குழந்தை வளர்ப்புத் தத்துவம் எல்லாம் அப்புறம் கேட்டுக்கொள்கிறேன். சீக்கிரம் காப்பியைக் குடித்துவிட்டு எக்ஸிபிஷனுக்குக் கிளம்பு."

"வேண்டாம், ஜானகி. எனக்கு இன்று மிகவும் களைப்பாக இருக்கிறது. இன்னொரு நாளைக்கு சாவகாசமாகப் பார்த்துக்கொள்ளலாம்", என்றேன் தட்டிக் கழிக்கும் நோக்கத்தோடு.

"நாளைக்கு எக்ஸிபிஷன் வைத்துக் கொண்டு உன்னை யார் வா, வா என்கிறார்கள்? இன்றைக்குத்தான் கடைசி. இன்று மாயவரம் சாருமதி பாட்டுக் கச்சேரியாம், வா, போய்விட்டு வரலாம். கிளம்பு என்றால் கிளம்ப வேண்டியதுதானே? ஒன்றும் பேசாமல் புறப்படு. நான் போய் குழம்பை இறக்கி வைத்துவிட்டு வருகிறேன்" என்று கட்டளையிட்டுவிட்டு என் பதிலுக்குக் காத்திராமல் போய் விட்டாள் ஜானகி.

குமட்டியைப் பற்றவைத்து ஜலத்தை வைத்த நான் யோசனையில் ஆழ்ந்தேன். நீர் கொதிப்பதுபோல் என் மனமும் கொதித்தது. "உனக்குப் பெயர் வைத்தார்களே, விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சலம் கட்டினாற்போல", என்ற ஜானகியின் வார்த்தைகள் என் நினைவில் பளிச்சிட்டன. எனக்கு எதற்கு என் தந்தை அப்பெயரைச் சூட்டினார்? பிறர் பார்த்துக் கேலி செய்யவேண்டும் என்பதற்காகவா? இல்லை, தன் மகளுடைய முகத்தில் என்றும் மங்காத மகிழ்ச்சி நிறைந்திருக்க வேண்டும் என்பதற்காகவோ 'புன்னகை முகத்தாள்' என்ற பொருள் பொதித்த அப்பெயரை எனக்கு வைத்தார்...?

"அப்பா, இன்று உங்கள் பெண் அடையும் ஆனந்தத்தை ஸ்வர்க்கத்திலிருந்து பார்க்கிறீர்களா?...

ஒருகாலத்தில் மாறாத புன்சிரிப்புடன், என் பெயருக்கு இலக்கணமாகத்தான் விளங்கினேன். என்னுடைய பள்ளித் தோழிகள்கூட, 'ஹம்ஸாவின் முத்துப் பல் வரிசை ஒன்றே போதுமே, அவள் அழகை எடுத்துக் காட்ட' என்பார்கள். இன்று வறுமையின் முன் அந்த அழகின் மெருகு அழிந்துவிட்டது...'

வியாதியஸ்தர் மனைவி:—ஒரு வாரமா எங்க வீட்டுக்காரருக்கு காது சரியாகக் கேட்கலீங்க. ஏன் அப்படின்னு தெரியலலீங்க. எப்படி பா குணமாகும்?

டாக்டர்:—கிட்டத்தட்ட இரண்டு மாதம் ஆகும். அதாவது, வருகிற தீபாவளி வரையில் அப்படித்தான இருக்கும். பிறகு சரியாகப் போய் விடும்!

சிந்தனையில் ஈடுபட்டிருந்த என்னை, "என்ன, இன்னும் கிளம்பவில்லையா?" என்ற ஜானகியின் குரல் தட்டி எழுப்பியது.

"இதோ வந்துவிட்டேன்", என்று பரபரப்புடன் கூறிவிட்டு அடுப்பை விசிற ஆரம்பித்தேன்.

"நகர்ந்துகொள். நான் காப்பி போடுகிறேன்", என்று என் கையிலிருந்த விசிறியை வாங்கிக்கொண்ட ஜானகி, "பாவம். வீட்டிலும் ஓடி, ஆடி வேலை செய்துவிட்டு, பள்ளிக்கூடத்திலும் ஓடாய் உழைக்க வேண்டியிருக்கிறது. எங்கள் அகத்துக்காரரைப் பார்! சாயங்காலம் ஆஸ்பத்திரியிலிருந்து வரும் போதே டிபனையும், காப்பியையும் தயாராய் வைத்திருக்கவேண்டும். கொஞ்சம் தாமதமாகிவிட்டால் பார்க்க வேண்டுமே அவர் படுத்துகிற பாட்டை! என்னமோ இவர்தான் உலகத்தையே தலைகீழாய்ப் புரட்டிவிடுவது போலவும், நான் காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பது போலவும் நினைப்பு", என்றாள்.

" 'பெண்ணே' என்று இளப்பமாகச் சொல்கிறார்களே, தெரியாமலா சொல்கிறார்கள்? பெண் அடுப்பூதிக் கொண்டிருந்தாலும் எல்லோருக்கும் கேலியாகத்தான் இருக்கிறது. வெளியே வேலை செய்யப் புறப்பட்டாலும் ஏதோ இழிந்த காரியம் செய்துவிட்டதுபோல்தான் நினைக்கிறார்கள்; நாகரிகமும், பண்பாடும் பெற்றுவிட்டோம் என்று சொல்லிக்கொள்பவர்கள் கூடத்தான்" என்றேன்.

ஜானகி திடுக்கிட்டுவிட்டாள். "என்ன ஹம்ஸா? யாராவது உன்னை ஏதாகிலும் சொன்னார்களா, என்ன?", என்று பரிவுடன் கேட்டாள்.

நான் வெறுப்புடன் சிரித்தேன். "அதிசயத்தைக் கேட்டாற்போல திகைக்கிறாயே, ஜானகி! இது என்ன புது விஷயமா? தினந்தோறும் நடப்பதுதானே? இன்று காலையில்கூட காமுப்பாட்டி ஜப மாலையை உருட்டிக்கொண்டிருந்தவள் என்னைக் கண்டதும், 'இந்தக் காலத்துப் பெண்களுக்கே அசாத்தியத் துணிச்சல் தாண்டி. புருஷன் எங்கேயோ கண்காணாமல் இருக்கிறான். இதுவானால் வேளைக்கு ஒரு அலங்காரம் பண்ணிக்கொண்டு ஊர் சுற்றுகிறது' என்றாள். எப்படி இருக்கிறது கதை? நானா என் அகத்துக்காரரை விரட்டினேன்? அல்லது நான் பொழுது போகாமல் ஊர் சுற்றிக்கொண்டிருக்கிறேனா?" என்றேன்.

"காமுப்பாட்டி ஒரு மனுஷியா? ஹம்ஸா, நீ இதையெல்லாம் காதிலேயே போட்டுக்கொள்ளக்கூடாது. உடம்புக்காகத்தான் பால் சாப்பிட வேண்டுமே ஒழிய ஊருக்காக அல்ல", என்று என் உள்ளக் குமுறலுக்கு அணைபோட முயன்றாள் ஜானகி.

புண்ணைத் துடைத்து மருந்து போடும்போதுதான் வலி அதிகமாக இருக்கும். என் மனமும் ஜானகியின் தேறுதல் மொழியினால் இன்னும் நொந்தது. ஆயினும் என் பலவீனத்தை வெளிக்காட்டிக்கொள்ள விரும்பாமல், "நான் இதற்காகவெல்லாம் வருத்தப்படுவேன் என்று நினைத்தாயா? என் மனம் மரத்துப்போய் எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன. இப்பொழுது அதில் எவ்வளவு ஊசிகள் கொண்டு குத்தினாலும் வலி தெரியாது" என்றேன், அவள் அளித்த காப்பியை அருந்தியவாறே.

என் நிலை புரியாமல் அலளும், "ஆமாம். வம்புப் பேச்சுக்கு நடுங்கிக் கொண்டிருந்தால் நம்மால் ஒரு நிமிஷம் கூடக் காலம் தள்ளமுடியாது. மனோதைரியத்துடன் எதையும் துச்சம் என்று நினைத்தோமானால் நாளைக்கே நம்மையும் நாலுபேர் கொண்டாடுவார்கள். ஓடுகிற மாட்டை விரட்டுவதுதான் எல்லோருக்கும் எளிது. சண்டி மாடென்றால் பேசாமல் போய்விடுவார்கள்", என்றவள் பேச்சை மாற்றும் நோக்கத்துடன், "ரகு எங்கே? போகலாமா? நாழியாகி விட்டதே", என்றாள்.

'..இந்தப் பெண்தான் வயதில் சிறியவளாய் இருந்தாலும் எவ்வளவு அனுபவம் முதிர்ந்தவள் போல் பேசுகிறாள்! உண்மையில் இவளுடைய நட்பு மட்டும் எனக்குக் கிடைக்காமலிருந்தால் நான் என்னதான் செய்திருப்பேனோ? . .'

நான் புகழின் உச்சியிலிருந்தபொழுது என்னைத் தேடிப் பல ரஸிகர்கள் தங்கள் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்வார்கள். தூரத்து உறவினர்கள் சொந்தம் கொண்டாடிக்கொண்டு வருவார்கள். என் தர்மசிந்தையைப் புகழ்ந்து வயிற்றை நிரப்பிக்கொண்ட ஏழைகள் பலர். ஆனால்

இன்று என்னைத் தேடுவார் இல்லை. ஒரு பள்ளியில் சங்கீத உபாத்யாயினியாக இருக்கும் இவ்வேழையினால் யாருக்கு என்ன உபயோகம்? நட்பும், உறவும் செல்வத்தைப் பொறுத்தேதானே இருக்கும்?

ஆனால் என் ஏழ்மையில் எனக்குப் பழக்கமானவள் ஜானகி. ஒளி மங்கிய என் வாழ்வுச் சுடரை, துயரப் புயலில் அணைந்துவிடாமல் நட்பெனும் போர்வையால் அரவணைத்துக் காத்து வருகிறாள். அவளும் ஏழைதான். அவளுடைய கணவர் உள்ளூர் ஆஸ்பத்திரியில் கம்பவுண்டராக இருக்கிறார். என்றாலும் அந்த மனமொத்த தம்பதிக்கு மனக்குறை என்பதே இல்லை. இன்பமான இல்லறம் என்ற மலையின் முன் எந்தத் துயரும் கடுகைப் போல் அற்ப விஷயம்தான் போலும்!

என் கால்கள் எக்ஸிபிஷனை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனவே தவிர, மனம் பின்னோக்கியே ஓடியது.

காரையூர் துரைசாமி அய்யர் என்றால் அழுதபிள்ளை பாட ஆரம்பிக்கும் என்று வேடிக்கையாகக் கூறுவார்கள். அப்படிப்பட்ட சங்கீதப் புலி என் தந்தை. அவருக்குப் பிறந்த நானும் பூனையாகி விடவில்லை. தாயற்ற என்னை, என் தந்தை கண்ணினுள் மணியெனக் காப்பாற்றினார். அவருடைய சிட்சையும், பாரம்பரை ஞானமும் என் இனிய குரலுக்கு மெருகூட்டின.

காலம் ஒரே நிலையில் இருக்கிறதா? என் தந்தைக்கு சரீரத்துடன் சாரீரமும் தளர்ந்தது. அத்துடன் சங்கீத உலகில் அவரது செல்வாக்கும் மங்க ஆரம்பித்தது. செலவாளியான என் தந்தை வருமானம் வந்த காலத்திலேயே சேர்த்து வைத்துக்கொள்ளாததால், நாங்கள் இருவரும் வறுமைப் புயலில் வாட நேர்ந்தது.

ஒரு நாள் நான் துணிந்து என் தகப்பனாரிடம் ஆசையை வெளியிட்டேன். திடுக்கிட்டுவிட்டார் அவர். "என்ன, நீ கச்சேரி செய்வதா? வேண்டாம் அம்மா. ஒரு பெண் மேடையேறினாள் என்றால், இந்தப் பொல்லாத உலகம் அவளைப்பற்றி ஏதும் சொல்லத் தயங்காது" என்றார்.

"இன்று நம்முடைய கஷ்ட காலத்தில் உதவி செய்யாத உலகம், நாளைக்கு நம்மைப்பற்றி என்ன சொன்னால்தான் என்ன, அப்பா? மேலும் நாம் நாணயமாக சம்பாதிப்பதில் யாருக்குப் பயப்பட வேண்டும்?" என்றேன்.

என் தந்தை சுலபத்தில் இதற்கு இணங்கவில்லை. கடைசியில் பலவிதமாகக் கூறி, அவரை வற்புறுத்தி என் ஏற்பாட்டுக்கு இசையவைத்தேன்.

அன்று முதல் என்னைப் பேரும், புகழும் தேடி வர ஆரம்பித்தன. ஆரம்பத்தில் உற்சாகம் கூட்டாத என் தகப்பனார் கூட பின்னால் மிகவும் மகிழ்வெய்தினார்.

இந்நிலையில்தான் எனக்கு விவாகம் நடந்தது. தாய் தந்தையற்ற என் கணவர் ஒரு கம்பெனியில் பணியாற்றி வந்தார். அவருடைய வருமானம் மிகக் குறைவாக இருந்ததால் நான் கச்சேரிகள் செய்வதை நிறுத்தவில்லை. என் தந்தையின் துணையுடன் பல இடங்களுக்கும் சென்று வந்தேன். எங்கள் வாழ்க்கைச் சகடம் மேடு பள்ளமற்ற காரோட்டில் சென்றுகொண்டிருந்தது. செலவு போக மீதமாகும் பணத்தை என் கணவர் பேரிலேயே பாங்கில் கட்டி வந்தேன்.

ஆனால் என்னுடன் பிறந்த துரதிருஷ்டம் என்னை விடவில்லை. என்னை வளர்த்து உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்த என் தந்தை, நான் இன்ப வாழ்க்கை நடத்துவதைப் பார்த்த மகிழ்விலேயே கண்களை மூடினார். தாயற்ற எனக்குத் தாயாகவும், தந்தையாகவும் இருந்த அவரை நினைத்து நெஞ்சம் குமுறிய என்னை, என் கணவரின் ஆறுதல் நிறைந்த வார்த்தைகள்தான் சற்றுத் தேற்றின.

என் தந்தையின் மறைவுக்குப் பின் என் வாழ்க்கைத் துணைவரே என்னுடன் கச்சேரிகளுக்கு வந்தார். அதற்குப் பல தடைகள் ஏற்பட்டன. ஓர் நாள் கச்சேரிக்காக ஒரு இடத்திற்குப் போயிருந்தபோது, அசந்தர்ப்பமாக, அன்று இரவே நாங்கள் ஊருக்குத் திரும்ப முடியவில்லை. காரியாலயத்திற்கு நேரம் கழித்துச் சென்ற இவரை மானேஜர் கண்டபடி இரைந்தாராம், "உம் மனைவி கச்சேரி செய்கிறாள் என்பதற்காக காரியாலய வேலைகள் நிற்க முடியுமா, ஐயா? உமக்கு இந்த வேலையில் இஷ்டமில்லாவிட்டால் விட்டுவிட்டு, மனைவியின் பின்னால் சுற்றிக்கொண்டிருமே" என்று. முன்கோபியான என் கணவரால் அந்த வார்த்தைகளைப் பொறுக்க முடியவில்லை. அன்றே வேலையை ராஜிநாமா செய்துவிட்டார். அதன்பின் அவருக்குக் கச்சேரிகள் ஒப்பந்தம் செய்வதையும், என்னுடன் வருவதையும் தவிர வேறு வேலையே இல்லை. அவர் என்னுடனேயே எப்பொழுதும் இருப்பது எனக்கும் சந்தோஷமாகவே இருந்தது.

ஒரு நாள் கச்சேரி முடிந்து நாங்கள் புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது யாரோ இருவர் பேசிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது:

"ஏன் ஐயா, இந்த அம்மாள் பின்னால் வருபவர் யார்? அவள் புருஷனா?"

"யார் கண்டார்கள்? அப்படித்தான் சொல்லிக்கொள்கிறார்கள். ஆனால் இந்த 'கூஜாத் தூக்கி'கள் எல்லோரும் வெறும் பொம்மைக் கணவர்கள்தானே..."

அவர்கள் இன்னும் என்ன பேசிக் கொண்டார்களோ, தெரியாது. கார் புறப்பட்டு விட்டது.

பானையிலுள்ள சோறு பதமாகி விட்டதா என்று பார்க்க ஒரு சோற்றைப் பார்த்தால் போதாதா? எல்லாவற்றையுமா பார்க்கவேண்டும்? எல்லோரும் எங்களைப்பற்றி இந்த அபிப்ராயத்தானே கொண்டிருப்பார்கள்? ஆனால் இம்மாதிரியான பல அனுபவங்கள் எங்களுக்கு ஏற்பட்டன. என் கணவருடைய மனம் தளர ஆரம்பித்தது.

"ஹம்ஸா, போதுமே இந்தக் கச்சேரிகளும், அதனால் வரும் அவதூறுகளும்! ஏதோ நான் சம்பாதிப்பதைக் கொண்டு கஞ்சியோ, கூழோ குடித்துக்கொண்டிருக்கலாம்" என்றார்.

நானோ, "வதந்திகளுக்காகப் பயந்து எதற்காகத் துன்பத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளவேண்டும்? நம் மனச்சாட்சிக்குப் பயந்து நேர்மை தவறாமல் நடந்தால் யாருக்கு அஞ்சவேண்டும்? எல்லாரும் சொன்னபடி நடக்கவேண்டுமென்றால் கழுதையைத் தூக்கிச் சென்ற கிழவன் கதிதான் ஏற்படும்" என்றேன்.

ஆனால் என் கணவருடைய மனம் சமாதானமடையவில்லை. கச்சேரி செய்வதை விட்டுவிடும்படிப் புலம்பிக் கொண்டேயிருந்தார். நானும் அவர் பேச்சை விளையாட்டாகவே அசட்டை செய்தேன்.

இந்நிலையில் நான் தாய்மைப் பேற்றை அடையப்போகிறேன் என்று அறிந்து என் மகிழ்ச்சி எல்லை மீறியது. ஆனால் என் கணவர் உற்சாகமின்றியே இருந்தார். ஒரு நாள் ஒரு பிரமுகர் வீட்டில் நடக்கும் கல்யாணத்தில் என்னுடைய இசை விருந்துக்கு ஏற்பாடு செய்ய வந்திருந்தார்கள். என் கணவர் யோசி



த்து மறுதினம் பதில் கூறுவதாய் சொல்லி என்னிடம் வந்தார்.

"ஹம்ஸா, இந்த நிலையில் நீ சம்பாதிக்காவிட்டால் என்ன? நான் சொல்வதைக் கேள்", என்றார்.

"சம்பாதிக்காவிட்டால் என்னவா? நாளைக்கு நாம் சாப்பிடுவது எப்படி? குந்தித் தின்றால் குன்றும் மாளும் என்று கேட்டதில்லையா? எத்தனை நாட்கள் உட்கார்ந்து சாப்பிடமுடியும்? நீங்கள் ஏதாவது வேலை தேடிக்கொள்ளுங்கள். நான் என் வேலையை விட்டுவிடுகிறேன்", என்றேன் சம்பாதிக்கும் பெருமிதத்துடன்.

அவருடைய முகம் சுண்டிவிட்டது. "ஆனால் போய் வா. உன்னை எதற்காக நான் தடுக்கவேண்டும்?" என்றார்.

நான் கச்சேரிக்குக் கிளம்பிக்கொண்டிருந்தேன். "ஹம்ஸா, எனக்கு இன்று உடம்பு ஒரு மாதிரியாக இருக்கிறது. என்னால் அங்கு வந்து உட்கார்ந்திருக்க முடியாதுபோல் தோன்றுகிறது. உள்ளூர் தானே, நீ மட்டும் போய் வந்து விடு" என்றார், சாய்வு நாற்காலியில் படுத்திருந்த என் கணவர்.

என்னுடைய கச்சேரி அன்று மிகவும் பரிமளித்தது. ஜனங்கள் பலத்த கரகோஷங்கள் மூலம் தங்கள் மகிழ்ச்சியை அடிக்கடி தெரிவித்துக்கொண்டார்கள். என் மனக்கிண்ணம் இன்பமென்னும் அமுதத்தால் நிறைந்திருந்தது. அதை என் கணவருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற துடிப்புடன் விரைந்து வந்த எனக்கு, அங்கு எத்தகைய பேரிடி காத்திருந்தது என்பதை நான் அறியவில்லை! என் கணவரை வீடு பூராவும் தேடியும் காணவில்லை. துயரம் நெஞ்சை அடைக்க என் அறையை அடைந்த நான் மேஜை மீது ஒரு உறையைக் கண்டேன் அதனுள் இரண்டு கடிதங்கள் இருந்தன. ஒன்று அவர் எனக்கு எழுதியிருந்தது:

"ஹம்ஸா!

நான் எத்தனை கூறியும் நீ கேட்கவில்லை. ஆயினும் தன் மனைவியைப்பற்றி பிறர் இழிவாகப் பேசும்பொழுது எந்த அறிவற்ற ஜடத்தாலும் பொறுக்க முடியாது. உலகம் நமக்கு எவ்வளவு தூரம் மதிப்பு வைத்திருக்கிறது என்பதை நாம் உணர இத்துடன் இருக்கும் கடிதம் உதவும். நான் வேலையற்று உட்கார்ந்திருப்பதால்தானே நீ அவ்விதம் பிறர் கூறும் பழிகளை ஏற்கவேண்டியிருக்கிறது? ஆகவே, நான் எவ்விதமேனும் உன்னைக் காப்பாற்றக்கூடிய நிலைக்கு வந்த பின்னரே உன்னை சந்திப்பது என்று தீர்மானித்துவிட்டேன். ஆனால் அதற்கு ஆதாரவாக நீ பாங்கில் என் பெயரில் கட்டியிருக்கும் பணத்தை எடுத்துச் செல்கிறேன். என்னை மன்னித்துவிடு—உன் சேகர்."

மற்றொன்று, யாரோ என்னைப்பற்றிக் கண்டபடி, பச்சையாக என் கணவருக்கு எழுதியிருந்த மொட்டைக் கடிதம்.

என்னால் மேலே யோசிக்கவே முடியவில்லை. கண்கள் இருண்டன. அப்பொழுது மயங்கி விழுந்த நான் கொஞ்சங் கொஞ்சமாகத் தெளிவுபெற இரண்டு நாளாயிற்று. அன்றே எனக்கு புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் ஒருங்கே அளித்த அந்தப் பிழைப்பை உதறித் தள்ளினேன். பல பத்திரிகைகள் மூலம் என் முடிவைக் கூறி என் கணவரைத் திரும்ப வரும்படி கெஞ்சிக் கெஞ்சி அழைத்தேன். ஆயினும் பலன் ஒன்றுமில்லை.

கையிலிருந்த பணமும் போய்விட்டதால், வயிறு வளர்க்க வேறு ஏதேனும் வழி தேட வேண்டியதாயிற்று. அதற்காக இந்த ஊரில் பெண்கள் பள்ளிக்கூடத்தில் கிடைத்த இசை ஆசிரியை வேலையை ஒப்புக்கொண்டேன்.

எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எனக்கு ரகுதான் வாழ்வின் ஒரே பற்றுக்கோடு. இன்று ஏன் குழந்தையை அப்படிக் கடிந்து கொண்டேன்? எடுத்ததற்கெல்லாம் சீறி விழும்படி அவன் என்ன அப்படி அலுத்துச் சலித்துப் பிறந்த குழந்தையா? என்னுடைய உப்பு சப்பற்ற வாழ்விற்கு கருவேப்பிலைக் கன்றைப்போல மணமூட்ட வந்தவனல்லவா அவன்? வாழ்க்கையில் நான் அடைந்த தோல்வி, தாய்மை என்னும் அன்புப் பிரவாகத்தின் ஊற்றை அடைத்துவிட்டதோ?

அன்றுதான் கடைசி நாளாதலால் எக்ஸிபிஷனில் ஜனத்திரள் அலை மோதியது. ரகுவின் கையைப் பிடித்தவாறே கூட்டத்தை விலக்கிக்கொண்டு சென்ற ஜானகியைப் பின்தொடர்ந்தேன். கடைகளில் விதவிதமான விளையாட்டுச் சாமான்கள் குவிந்திருந்தன. பலவிதமான மிட்டாய்களையும், பொம்மைகளையும் தூக்கமுடியாமல் சுமந்துகொண்டு மனமகிழ்ச்சியுடன் சென்றுகொண்டிருந்தான் என் மகன். ஒவ்வொரு கடைவாயிலிலும் கண்கள் வியப்பால் விரிய நின்றுவிடும் அவனைத் தட்டி இழுத்துத்தான் செல்ல வேண்டியிருந்தது.

வழியில் ஜானகியின் உறவினர் ஒருவர் அவளுடன் பேச ஆரம்பித்துவிட்டதால் நான் மெதுவாகச் சென்றுகொண்டிருந்தேன். சற்று நேரம் கழித்து என் நேரனைத் தொட்ட ஜானகி, "குழந்தை எங்கே?" என்றாள்.

திடுக்கிட்டுவிட்டேன் நான், "என்ன, உன்னுடன்தானே நின்றுகொண்டிருந்தான்?" என்றேன் பதைக்கும் நெஞ்சுடன். "இல்லையே, உன்னுடன்தானே வந்தான்?" என்றாள் அவள்.

ஒரு கணம் என் உள்ளம், உடலெல்லாம் 'திகு திகு'வென தகித்தது. தாய்மைப் பாசம் அந்நிலையில் அப்படித்தான் தகிக்குமோ...? ஐம்புலன்களும் ஒடுங்கி செயலற்று நின்றுவிட்ட அந்த ஒரு கணம் என் வாழ்நாளிலேயே ஒரே கணம்தான். 'பிள்ளையையும் பறி கொடுத்து விட்டோமோ..?' என்ற எண்ணம் என்னுள் எழுந்து என்னை அலைத்த அலைப்புதான் எவ்வளவு!

பாவம், ஜானகிக்கும் செய்வது இன்னதென்றே புரியவில்லை; 'திரு திரு'வென்று விழித்துக்கொண்டிருந்தாள்.

அந்த விநாடியில்...

"ஐந்து வயதுக் குழந்தை.. பெயர் ரகுவாம்.. மழலையில் பேசுகிறான்.! 'அம்ஸா தான் என் அம்மா' என்கிறான்.. தயவு செய்து இந்தக் குழந்தையின் தாய் காரியாலயத்திற்கு வந்து அழைத்துச் செல்லவும்..'

'மைக்'கில் எழுந்தது சாதாரண ஒலியாகவா தோன்றியது எனக்கு? 'அமிருத தாரை, அமுத வர்ஷம்' என்பார்களே, அப்படியல்லவா இருந்தது!

விடுவிடென்று எக்ஸிபிஷன் காரியாலயத்தை நாடி ஓட்டமும் நடையுமாக வேக நடை போட்டேன் நான். பாவம், ஜானகியின் நடை என் நடைக்கு உறைபோடக்கூடக் காணவில்லை! தாய்ப் பாசம் அப்படி என்னைக் காரியாலயத்தை நோக்கி விரட்டியது!

தென்னங் கீற்றால் வேயப்பட்ட அந்தக் காரியாலயத்தின் உள்ளே என் கால்களை எடுத்து வைத்தேன்.. 'ஆ, அதோ ரகு, கையில் பிஸ்கட்டுடன்!' என் அருமைக் குழந்தையைக் கண்டதில் பாதாதி கேசம் இன்று வரை உணர்ந்தறியாத ஒரு புல்லரிப்பு பாவி மெய் மறக்கச் செய்தது.

'அதோ 'மைக்'குக்கு அருகில் அது யார்?. அவரா? இங்கேயா.. எங்கெங்கோ தேடி இங்கேயே அன்றோ கண்டுகொண்டேன்...!'

என் கணவரும் என்னைப் பார்த்தார். அந்தப் பார்வையில்தான் எத்தனைக் கனிவு! அருகிலிருந்த ரகுவை இழுத்து அணைத்துக்கொண்டு "எதோ, அம்மா கூப்பிடு' என்று செல்லமாக அவர் கூறிய மாதிரிதான் எவ்வளவு பெருந்தன்மையானது! என்ன இருந்தாலும் அவரது மற்ற நண்பர்கள் அருகில் இருக்கும் போதேயா இதெல்லாம்!

எங்கோ போனார் என்று எண்ணியவர் இங்கேயே வந்து சேர்ந்தார். தனயன் மீதுள்ள பாசமும், தாரத்தின் மீதுள்ள ஆசையும் அவருக்கு மட்டும் விலக்கா என்ன?...

அந்தச் சந்திப்பு எங்கள் மன வேற்றுமைகளைப் பொசுக்கி ஒன்று சேர்த்து ஒருமிக்க வாழச் செய்தது. அவருக்கும் தான் தற்போதைக்கு ஏதோ வேலை இருக்கிறதே...!

அது ஒரே கணத்தில் நிகழ்ந்தது; அந்த ஒரு கணம் என் வாழ் நாளிலேயே ஒரே கணம்தான்!

ஜானகியும், குழந்தையுமாக எக்ஸிபிஷனுக்கு வந்தேன். போகும்போது 'அவரும்', குழந்தையுமாக வீடு திரும்பினேன். ஜானகிக்கு வெட்கம் எங்களோடு வர; தனியாகவே வீடு திரும்பி விட்டாள்!

☆

ஏஜெண்டு தேவை

ஜாம்ஷெட்பூரில் எமது மித்திரன் தினப்பதிப்பு, வாரப்பதிப்பு விற்பனை செய்ய ஊக்கமுள்ள ஏஜெண்டு தேவை. விண்ணப்பதாரர்கள் உள்ளூர் வாசியாகவும், தகுந்த செக்யூரடி செலுத்தக் கூடியவராகவும் இருக்கவேண்டும், விவரங்களுக்கு கீழ்க்கண்டுள்ள விலாஸத்திற்கு எழுதவும்.

சர்க்குலேஷன் மானேஜர்,

சுதேசமித்திரன்,
விக்டரி ஹவுஸ், மதராஸ்-2.

திரைக்குப் பின்

39

குபுகுபுவென்று பொங்குகிற பாலில் பச்சைத் தண்ணீரை ஊற்றியதுபோல, பாமினியின் பூரிப்பெல்லாம் அந்தத் தந்தியைக் கண்டதும் பொக்கென்று அடங்கிவிட்டது. தடுமாற்றம் தரும் கலக்கம் ஒன்று உடல் முழுதும் பரவிச் சென்றது.

கசக்கி எறிந்த அந்தத் தந்திக் காகிதத்தை அரவிந்தன் எடுத்துப் பிரித்துப் படித்தான். அந்தச் செய்தி அவனுக்கு அத்தனை அதிர்ச்சியைத் தரவில்லை. கிட்டத்தட்ட அதை அவன் படிப்பதற்கு முன்பாகவே ஊகித்துவிட்டான். அதைவிட அதிர்ச்சி தரக்கூடிய செய்தியை அவன் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையிலேயே இருந்தான். நாளைக் காலையில் டாக்டர் வரப்போகிறார் என்பதைவிட இது ஒரு பெரிய விஷயமாக அவனுக்குப் படவில்லை.

ஒன்று மட்டும் அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. டாக்டர் சென்னைக்குப் புறப்படும் சமயமாகப் பார்த்து, தங்கம் அந்தப் பாட்டியோடு கிளம்பிவரத் திட்டமிட்டிருக்கலாம். அல்லது டாக்டரே அவர்களை இங்கே கொண்டு வந்து சேர்ப்பதற்காகப் புறப்பட்டு வர முடிவு செய்திருக்கலாம். இந்த இரண்டுக்குள் ஒன்று நிச்சயம் என்பதில் சந்தேகமில்லை. எதுவானால் என்ன? மூவரும் நாளைக் காலையில்சேர்ந்துவரப்போவதென்னவோ நிச்சயம். டாக்டர் அவனுடைய ஜாகைக்கு வரமாட்டார் என்பதும் நிச்சயம். இந்த நிலையில் மற்ற இருவரையும் அழைத்து வர அவன் ஸ்டேஷனுக்குப் போவதா, போகாமல் இருந்துவிடுவதா? அரவிந்தன் அதைத்தான் யோசித்துக்கொண்டிருந்தான். அவனால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை. ஒன்றைப் பார்த்தால் ஒன்று இடைஞ்சலாக இருந்தது.

வெகு பிரயாசையோடு இழைத்த மெல்லிய இழை அறுந்து போனதுபோல, சன்னம் சன்னமாகச் சேர்ந்து வந்த அந்த இழை, சுருதியோடு கவ்வச் சேர்ந்து ஒன்றுகிற நுட்பமான கட்டத்தில் படுக்கென்று விட்டுவிட்டது. அதை மீண்டும் இழைப்பதோ ஒன்று சேர்ப்பதோ முடியும் என்று அவனுக்குத் தோன்றவில்லை.

இரவும் அதன் ஓசை ஒடுங்கிய அமைதியும் ஓர் உயிராய் ஒன்றி முயங்கியிருந்தன. நேரம் நீண்டு கொண்டிருந்தது. ஆசைக் கனவு வளைவதுபோல, மட்டிப்பால் வத்தி நீறுபூத்து, நீற்றுக்கொண்டிருந்தது. எண்ணெய் வடியவடிய எழில் விளக்கு திரையிட்ட முகம் போல ஒளி மங்கிக்கொண்டிருந்தது. மெல்லிய பஞ்சணைகள் முட்டு முட்டாய் வெள்ளை வெளேரென்று தவம் இயற்றிக்கொண்டிருந்தன. அறையின் புஷ்பாலங்காரங்கள் எல்லாம் புதுமணப் பெண்ணைப் போல், பொறுமையோடு காத்துக் கொண்டிருந்தன. மெல்லிய காற்று, தோழியரின் சேஷ்டையைப்போல, அந்த விசித்திரமான நிலையிலிருந்த நாயகனையும் நாயகியையும் வந்து வந்து எட்டிப் பார்த்துவிட்டு மறைந்து கொண்டிருந்தது.

பாமினியும் அரவிந்தனும் தத்தம் போக்கில் எதையோ யோசித்துக் கொண்டிருந்தார்கள். திடீ

ஆர்வி

ரென, சொல்லிவைத்ததுபோல, இருவருடைய சிந்தனையும் ஒரே சமயத்தில் முற்றுப் பெற்றது. நாணம் கலந்த முனகலுடன் அவள், "இதெல்லாம் என்ன? வெறும் அசட்டுத்தனம்!" என்று சொல்லிவிட்டு எழுந்தாள். அவனும் புன்னகை பூத்தான்.

பால் அன்னம் வைத்திருந்த கிண்ணத்தை ஏந்தி வந்து, "யார் வந்தாலும் எனக்கு ஒன்றும் பயமில்லை" என்றாள் பாமினி. அவனுடைய கையை மெல்லப் பிடித்துக்கொண்டு, "இல்லையா?" என்றாள்.

"ஆமாம்" என்று அவன் தலையை ஆட்டினான்.

"டாக்டரே வந்தாலும் சரிதான்!"

"டாக்டரும் நாளைக்கு வருகிறாராம். ஆபீசுக்குத் தகவல் வந்திருக்கிறது!" என்றான் அரவிந்தன்.

அவளுடைய கோலமுகம் சட்டென்று மாறியது. விழுமிய நெஞ்சகம் உயர்ந்து தணிந்தது. கிண்ணத்து அன்னத்தை அவனிடம் கொடுக்கும்போது, "இதற்கெல்லாம் நாம் ஏன் அஞ்சவேண்டும்? இதில் மோசம் என்ன? ரகசியம், திருட்டுத்தனம் என்ன? எது நடக்கவேண்டுமோ, அது செலவில்லாமல், ஆடம்பரமில்லாமல் நடந்துவிட்டது. இதனால் யாருக்குத் துரோகமாம்!" என்றாள். அவனுடைய பதிலை அவள் எதிர்பார்த்ததாகத் தெரியவில்லை.

அவனுடைய கைகளை மெல்ல இழுத்து, கட்டிலில் உட்கார வைத்து, "அந்தக் கிழவர் நாளைக்கு இங்கே வருவாரா, என்ன?" என்று கேட்டாள்.

"ஊஹும்; வரமாட்டார்!"

"பெரிய மனுஷன்! இல்லையா?"

"ஆமாம்."

"அவர் அந்தஸ்துக்கு அது குறைச்சல்; இல்லையா?"

"அது என்னமோ? கூப்பிட்டால் ஒருகால் வரக்கூடும். ஆனால் அவர் முகத்திலேயே நான் விழிக்க மாட்டேன்!"

பாமினிக்குச் சட்டென்று கோபம் வந்தது; அழகிய கண்கள் குப்பென்று சிவந்தன. "ஏன்? அப்படி என்ன தகாத காரியத்தைக் கேவலமாக நீங்கள் இப்போது செய்துவிட்டீர்கள்?" என்று படபடப்பாகக் கேட்டாள்.

"கேவலமோ, கேவலமில்லையோ, அவர் முகத்தில் நான் விழிக்க மாட்டேன்!"

"ஏன்?"

"அவ்வளவுக்கு எனக்குத் துணிச்சல் இல்லை."



இதைக் கேட்டதும் பாமினி சினந்து பொங்கினாள்; எதையோ சட்டென்று சொல்லத் துடித்த உதடுகளை நறுக்கென்று இறுகக் கடித்துக்கொண்டாள்.

"கேவலம் இல்லை என்றால் துணிச்சலும் இருக்கும்; இருந்திருக்கும்!" என்றான் அரவிந்தன், எங்கேயோ பார்த்துக் கொண்டு.

மீண்டும் மௌனம்.

அவளுக்குப் படபடப்பும் பதற்றமும் அடங்கச் சிறிது நேரம் பிடித்தது. அவள் சமரஸமான பாவனையில் அவன் கையை உலுக்கி, "இதோ பாருங்கள்! நாளை அவர்கள் வருவது உங்களுக்குப் பிடிக்கவில்லை. உங்களைவிட எனக்கும் பிடிக்கவில்லை. அவர்களுக்கு இங்கே என்ன வேலை? அதுவும் அந்த வேலைக்காரப் பெண் தங்கச்சி இருக்கிறாளே, அவளுக்கு இங்கே யார், என்ன உறவு? அவள் யாரோ, நாங்கள்—நாம் யாரோ? என்னவோ கூடப் பிறந்தவள் மாதிரி, கடமைப்பட்டவர்கள் மாதிரி அவள் எண்ணிக் கொண்டிருப்பானேன்? வரட்டும்; வந்தவுடனேயே அவள் போக வேண்டிய இடத்தை அவளுக்குச் சரியாகக் காட்டுகிறேன்!" என்றாள்.

அரவிந்தன் சட்டென்று திரும்பி, "அவள் என்ன செய்தாள், உன்னை?" என்றான்.

"இன்னும் என்ன செய்யவேண்டும்? அவளுக்கு இங்கே என்ன வேலை?"

"ஏன், உன் பாட்டி வரும்போது அவள் வந்தால் என்ன? அவள் வேறு எங்கே போவாள்?"

"எங்கே வேண்டுமானாலும் போகட்டும்; அவளுக்கும் நமக்கும் என்ன?"

அரவிந்தன், "எனக்குந்தான் இங்கே என்ன வேலை?" என்று கேட்க நினைத்தான். ஆனால் நெஞ்சில் தோன்றிய இந்தச் சொற்களுக்கு ஒலிவடிவம் கொள்வதற்குப் போதிய நேரம் இல்லை. அதற்குள் அவள், "எல்லாம் எனக்குத் தெரியும். இதெல்லாம் அந்தக் கிழவனுடைய சூழ்ச்சிதான். என்னைக் கண்டாலே அந்தக் கிழவனுக்கு ஆகவில்லை. நாம் சந்தோஷமாக இருப்பது அந்தக் கிழவனுக்குச் சகிக்காது; நாம் வாழ்வதில் அவனுக்கு இஷ்டமேயில்லை!" என்று மூச்சு இரைக்கும்படி வேகமாகப் பேசினாள்.

இந்தப் பேச்சுக்குப் பொருள் எதுவும் இருப்பதாக அரவிந்தனுக்குத் தோன்றவில்லை. உண்மை எப்படியிருந்தாலும் டாக்டரை ஒருமையில் பேசுவது அவனுக்குப் பிடிக்கவேயில்லை. அதைக் காது கொடுத்துக் கேட்பதே குற்றம் போலத் தோன்றியது. திடீரென்று அந்தக் குற்றத்தைச் செய்யத் துணிந்த பாமினியையும், அவளுடைய கரம்பட்ட அந்த அலங்கார ஜோடனைகளையும் கண்டு அவனுடைய உள்ளமெல்லாம் கசந்தது. புதிர் போன்ற பாமினியின் காதலைவிட, அவளுடைய அன்பைவிட, அந்த மனிதருடைய அபிமானமும் அக்கறையும் உயர்வாக, தெளிவாகத் தெரிந்தன. அவருடைய போக்கிலே தன்னலமற்ற அன்பும் எதையும் எதிர்பாராத உயர்வும் இருந்தன. இவளுடைய அன்பிலே நேர்மாறுதலான சிறுபிள்ளைத் தனமும் தெளிவின்மையும் தெரிந்தன.

அவன் உடனே, "அவரை அப்படி 'அவன்—இவன்' என்று மட்டும் சொல்லாதே. அது எனக்குப் பிடிக்கவில்லை!" என்றான். பிறகு குரலை மாற்றிக்கொண்டு, "நமக்கு அவரைப்பற்றி நல்ல அபிப்பிராயம் இல்லாமல் இருக்கலாம். என்ன இருந்தாலும் அவர் பெரிய மனுஷன். என்னிடத்தில் அக்கறையுள்ளவர்!" என்றான் மீண்டும்.

பாமினி பெண் சர்ப்பம்போல் சீறி எழுந்து, "நான் நன்றாகத்தான் சொல்வேன். அதில் ஒன்றும் தப்பில்லை. அவர் என்னிடத்திலே அக்கறை இல்லாதவர். என்னை வெறுப்பவர்களிடத்திலே என்னால் மரியாதை காட்ட முடியாது!" என்று கூறினாள்.

பிறகு அவள் ஒவ்வொரு விளக்காகப் பொக்குப் பொக்கென்று அணைத்துவிட்டு வந்தாள். இரவில் எரியும் நீல விளக்கை மட்டும் பொருத்திவிட்டு, குத்து விளக்கிலே வழிய வழிய எண்ணெயை ஊற்றினாள். சுடரைத் தட்டிவிட்டு, எண்ணெய்க் கரிபட்ட விரலைத் தரையிலே துடைத்துக்கொண்டாள். தன்னையே வியப்போடு பார்த்துக்கொண்டிருந்த அரவிந்தனை அவள் திரும்பிப் பாராமலே, அன்னத்தூவி போன்ற பஞ்சுத் தலையணையை எடுத்து, கட்டிலின் கடைசியிலே படுத்துக்கொண்டாள்.

ஜன்னலில் கட்டியிருந்த தாமரை மொக்குகள் மீண்டும் கூம்பின நிலையில் தொங்கின. அவள் எதையும் பார்க்கப் பிடிக்காமல் கண்களை அழுந்த மூடிக்கொண்டுவிட்டாள்.

தன்னுடைய மணவறையைத் தானே சிங்காரித்துவைத்த ஒரு புதுப் பெண்ணின் கனவு மறு பாதியில் கலைந்து அழிந்துவிட்டது. அந்தப் பெண் தன் கருத்துக்கு இசைந்த மணவாளனிடம் தன்னை எவ்விதம் திரிகரணசுத்தியாக அர்ப்பணித்துக்கொள்வாள் என்கிற அனுபவம் கைநழுவிப் போய்விட்டது.

பெண்களின் பிணக்குக்கு இசைந்த இரவு, வீணாகிக்கொண்டே வளர்ந்து தேய்ந்தது. புஷ்பங்களின் நறுமணமும் ஊதுவத்தியின் நறுமணமும் ஒடுங்கிவிட்டன. எப்பொழுது எண்ணெய் வற்றியதோ. குத்துவிளக்கு, சுடர் விட்டு அணைந்துவிட்டது.

விடிகாலையில், பால்காரன், "அம்மா! அம்மா!" என்று கதவைத் தட்டும் வரையில் அந்த அறையில் சலனமோ, விழிப்போ உண்டாகவில்லை.

பாமினி கலகலப்பாகத்தான் இருந்தாள். ஆனால் அரவிந்தனுடைய ஏமாற்றம் எல்லாம் அவனுக்கு ஒரு சோர்வைக் கொடுத்திருந்தன. எட்டுமணி ஆனபோது அவள் அவன் எதிரே வந்து, "எங்கிட்டே ஏதாவது கோபமா?" என்று கேட்டாள்.

கேட்கிற மாதிரியிலேயே ஏதாவது சமாதானமாகச் சொன்னால் தான் போவாள்போல இருந்தது.

"இல்லே" என்றான் அரவிந்தன்.

"நீங்கள் ஸ்டேஷனுக்குப் போகவில்லையா?"

"இல்லே."

"ஆபீசுக்கு?"

"அதுவும் இல்லே."

சிறிது நேரம் அவள் பேசாமல் நின்றாள். பிறகு அருகில் நெருங்கி வந்து, "நான் அசட்டுத்தனமாகச் சொன்னால் நீங்கள் அதைத் திருத்தக்கூடாதா? அதற்காக என்னை இப்படித் தண்டிக்க வேண்டுமா?" என்றாள்.

அவள் என்ன கேட்கிறாள் என்று முதலில் அவனுக்குப் புரியவில்லை; அவள் முகத்தை ஏறிட்டுக் கேள்விக் குறியோடு பார்த்தான்.

"நேற்று ராத்திரியைத்தான் சொல்கிறேன். நேற்று முகூர்த்த நாளாம்! எல்லாம் வீண்!" என்றாள் அவள் பிறகு.

அவன் ஏதோ பதில் சொல்ல வருவதற்குள் வாசலில் ஒரு பெரிய டாக்ஸி வந்து நிற்பது தெரிந்தது. முதலில் டிரைவருக்கு அருகில் உட்கார்ந்திருந்த சுந்தரம் கதவைத் திறந்துகொண்டு இறங்கினான். பின்னால் பாமினியின் பாட்டியும் தங்கமும் உட்கார்ந்திருந்தார்கள். இந்தக் காட்சியைக் கண்டதுமே இருவருக்கும் 'சொரக்' என்று ஆகிவிட்டது. பாமினி அதற்குமேல் அங்கே நிற்கப் பிடிக்காமல் உள்ளே போய்விட்டாள். அரவிந்தன் மட்டும் பனியனும் துண்டுமாக, வாசல் வராந்தாவில் வந்து அவர்களை எதிர்பார்ப்பதுபோல் நின்றான்.

முன்னால் பாட்டியும் அவளுக்குப் பின்னால் தங்கமும் வர, சுந்தரம் டாக்ஸிக்காரனை அனுப்பிக்கொண்டிருந்தான். பெட்டி, படுக்கைகளைத் தரையில் எடுத்து வைத்துவிட்டு, டாக்ஸி புறப்பட்டுவிட்டது.

"அண்ணா!" என்று கூவினாள் தங்கம்.

அரவிந்தன் சிரித்த முகத்தோடு அவளை வரவேற்றான்.

எதிர்பார்த்தபடி ஒன்றும் மனத்துக்குப் பிடிக்காதபடி நடக்க

எழுத்தாளர்:—இந்தவாரத்தில், உங்க பத்திரிகையில் வந்திருக்கும் கதைகள் எல்லாம் ரொம்ப நன்றாயிருக்கிறது சார் இதுவரையில இம்மாதிரி வெளிவந்ததில்லே

ஆசிரியர்:—உங்கள் கதைகூட இந்த வார இதழில்தான் வந்திருக்காப் போல இருக்கே?

வில்லை. வந்த மறு நொடியிலேயே தங்கம் ஒரு கலகலப்பை உண்டாக்கிவிட்டாள்.

"என்ன அண்ணா, ஸ்டேஷனுக்கு வாராமெ இருந்திட்டீங்க? தூங்கிப் போயிட்டீங்களா?" என்றாள் தங்கம்.

"தூங்கல்லே—" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், அவளே மீண்டும், "வந்தோமா? ஒருத்தரும் இல்லியா—அப்புறம் தந்திதான் கிடைச்சுதோ இல்லேயோன்னிட்டு—ஆமாம்; தந்தி கிடைச்சுதில்லே?" என்றாள்.

"உம்; கிடைச்சுது ஆனால்"

"சரி. அதானே கேட்டேன் முதல்லே டாக்டரும் வராதா இருந்தாரு. அப்புறம் என்ன நினைச்சுக்கிட்டாரோ, என்னவோ, வரல்லேன்னிட்டாரு. ஆனா எல்லாம் சொல்லியனுப்பிச்சிருந்தாரு. யாரும் வராட்டிப்போனா, டாக்ஸி வச்சிக்கிட்டு இதோ இவங்க வீட்டுக்குப்போயி, அங்கேருந்து இங்கே போயிடுங்கன்னு முன்னாலேயே சொல்லியிருந்தாரு. அதேபோல ஆச்சு; கடைசியாக் கண்டுபிடிச்சிட்டோம். வந்தும் புட்டோமின்னு வையிங்களேன்!" என்று படபடவென்று ஆனந்தம் பொங்குகிற குரலில், கலகலவென்று பேசினாள்.

"சரி; உள்ளே வந்து பேசு!"

"இதானா? அடெடெ. இடம் நல்லா இருக்கே. எங்கே அக்காவை—அண்ணியைக் காணோம்? பாட்டி! இடத்தைப் பாத்தீங்

களா? சின்னதா இருந்தாலும் ரொம்ப ஜோரா இல்லே...ஏன் அண்ணா! சரியாய்ப் போச்சு! இன்னும் படுத்த படுக்கையைச் சுருட்டலியா?" என்று அந்தக் கோடிக்கும் இந்தக் கோடிக்குமாக, சிறு குழந்தையைப்போல ஓடினாள்.

சுந்தரத்தைப் பார்த்து, "பாவம்! அவுங்க ஆபீசுக்குப் புறப்படற சமயம். நமக்காக வந்திருந்தாங்க. ஐயைய..நான் எல்லாம் எடுத்து வச்சுக்கிறேங்க..நீங்க தூக்காதீங்க!" என்று பெட்டியை வாங்கி முன் ஹாலில் வைத்தாள்.

சுந்தரம் விடைபெற்றுக் கொண்டு போய் வெகு நேரம் கழித்த பிறகுதான், பாமினி குளியல் அறையிலிருந்து வெளிவந்தாள், ஒன்றையுமே தெரிந்துகொள்ளாதவள்போல. அதற்குப் பிறகும் ஒன்றும் விசேஷமாக நடந்து விடவில்லை. நடுவில் சில மணி நேரமே பார்த்துக்கொள்ளாதவர்களைப் போல, நிலைமை வெகு எளிதாக, சகஜமாக மாறிவிட்டது. எல்லாம் தெரிந்தவளைப்போல், எதையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக வந்திருந்தவளைப்போல, தங்கம் அதி அற்புதமாக, வெகு நாசூக்காக, அழகாக நடந்துகொண்டாள்; பேசினாள். பாட்டி சமையல் கட்டில் போய், பாமினிக்கு எதிரே உட்கார்ந்திருந்தாள். அவளும் நடந்தது, போனது எதைப்பற்றியும் பேச்சுக் கொடுத்து, பாமினியின் எரிச்சலுக்கு உள்ளானதாகத் தெரியவில்லை.

"குழாயில் எப்பொழுதும் தண்ணீர் வருமா? என்ன வாடகை? எப்பொழுது வெயில் அடிக்கும்? சமையல் எத்தனை மணிக்கு முடியும்? வேலைக்கு ஆள் யாராவது உண்டா?"– இந்த வகையில்தான் அவளுடைய கேள்விகள் இருந்தன.

டாக்டர் சென்னைக்கு வரவில்லை என்ற செய்தி அரவிந்தனுடைய திட்டங்களைத் திடீரென்று மாற்றிவிட்டன. அவன் பாமினியைக் கூப்பிட்டு, ஆபீசுக்குப் போகப் போவதாகச் சொன்னான்.

"சமையல் இதோ நொடியில் ஆகிவிடும்; சாப்பிட்டு விட்டுப் போங்கள்!" என்றாள் அவள்.

அவர்கள் இருவரும் பேசிக்கொள்ளும் மாதிரியைக் கவனித்து, தங்கம் அசந்துபோனாள். பாமினி இத்தனை பதவிசாகக் குடும்பம் நடத்துவாள் என்று அவள் கேள்விப்பட்ட வரையில் தெரிந்துகொள்ளவில்லை. அரவிந்தன் ஆபீசுக்குப் புறப்படும் கெடுபிடியும், பாமினி ஓட்டமும் நடையுமாக அவன் புறப்படுவதற்கு வேண்டியவைகளை எடுத்துக் கொடுத்துத் துரிதப்படுத்துவதும் அவளுக்குப் புதுமையாக இருந்தன. அத்தகைய ஒரு காட்சியை அவள் கற்பனை செய்து கூடப் பார்த்ததில்லை.

அரவிந்தன் ஆபீசுக்கு போகும் வரையில் அவளுக்குக் குதூகலமாகவே இருந்தது. ஆனால் அதற்குப் பிறகுதான் அவளுக்கு ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோலிருந்தது. நன்றாக எண்ணிப்பார்த்த பின்னர்தான், அவள் வந்தது முதல் இதுவரையில் பாமினி அவளிடம் ஒருவார்த்தை கூடப் பேசவில்லை என்பது தெரிந்தது. 'ஏதோ சமயம் நேரவில்லை; பேசவில்லை' என்று எந்தச் சாக்குக்கும் இடமில்லாதபடி, அவள் 'பேச விரும்பவில்லை' என்று தெளிவாகவே காட்டிக்கொள்வது போல் நடந்துகொண்டாள்.

அவர்கள் ஸ்நானம் முதலானவற்றைச் செய்துவிட்டுச் சாப்பிட உட்காரும்போது, "நீ முதலில் உட்கார், அண்ணி! நான் உனக்குப் போட்டு விட்டு அப்புறம் சாப்பிடுகிறேன்" என்று வலியப் பேசினாள்.

பாமினி வெகு அலட்சியமாகத் தலையைத் திருப்பி அவளை ஒரு முறை பார்த்துவிட்டு, "இதோ பார்! அவர் வேண்டுமானால் உனக்கு அண்ணாவாக இருந்துவிட்டுப் போகட்டும்; நீ அவருடைய அருமைத் தங்கையாகவே இரு. எனக்கு அக்கறையில்லை. ஆனால் என்னை அந்த உறவு முறையெல்லாம் வைத்து, நாலு பேர் எதிரில் கூப்பிட்டால், பார்த்துக்கொள். அண்ணியாம், அண்ணி! ரொம்பக் கண்டாயோ, அந்த உறவை எல்லாம்!" என்று நிதானமாக, ஆனால் கண்டிப்பான குரலில், கொஞ்சங்கூடத் தாட்சிண்ணியமற்ற குரலில் கூறினாள்.

"ஏன் அப்படிச் சொல்றே, அந்தப் பெண்ணைப் போய்! அது மட்டும் இல்லாவிட்டால் நான் போன இடம் இவ்வளவு நாளும் புல்லு முளைச்சுப் போயிருக்கும்!" என்றாள் பாட்டி.

"அப்படிப் போகாததற்காகத்தான் சொல்கிறேன்!" என்று கூறிவிட்டு, பாமினி வேகமாகச் சென்றாள். ஒருவரும் அறியாமல் கீழே குவித்துக் குப்பையாக வைத்திருந்த வாடிய மலர்களையெல்லாம் வாரிக்கொண்டு போய்க் கொட்டினாள். 'வந்ததும் வராததுமாக, படுக்கையிலே கண்! படுக்கையைச் சுருட்டினால் என்ன, சுருட்டாவிட்டால் இவளுக்கு என்ன கேடு!' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள்.

அன்று மாலையில் அரவிந்தன் வந்ததும், இதற்கெல்லாம் வேறு ஏற்பாடு ஒன்று செய்யவேண்டும் என்று அவள் முடிவு கட்டிக் கொண்டாள். என்ன செலவானாலும் அவர்களைத் தனி ஜாகையாக வைப்பதுதான் தேவலை என்று அவளுக்குத் தோன்றியது.

ஆனால் அவள் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை. ஒரு வாரமாகியும் நிலைமையில் எந்தவித மாறுதலும் நிகழவில்லை. வீட்டில் இருப்பதே முள்ளின் மேல் இருப்பது போலத்தான் அவளுக்கு இருந்தது. தங்கம் மட்டும் எப்போதும்போல் கலகலப்பாகத்தான் இருந்தாள். வேற்றுமை பாராட்டி அவள் தன்னை வேதனைப்படுத்திக் கொள்ளவில்லை.

அன்று ஒரு ஞாயிற்றுக்கிழமை. வீட்டிலேயே அடைந்து கிடக்கப் பிடிக்காமல் பாமினி அரவிந்தனோடு கடற்கரைக்குச் சென்றிருந்தாள். அன்று அவளுக்கு எத்தனையோ விஷயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டியிருந்தது.

கடற்கரையில் நிம்மதியான ஓர் இடத்தைத் தேடி உட்கார்ந்த சமயத்தில், சற்று தூரத்தில் ஒருவர் தண்ணீர்த் துறையோடு நடந்து வருவதை அவர்கள் கண்டார்கள். அந்த நடை அவர்களுக்குப் பழக்கமான நடைதான். அவர்கள் கண்ட அதே சமயத்தில் அவரும் தலைநிமிர்ந்து இவர்களைப் பார்த்து விட்டார். சந்தேகமில்லை, டாக்டர்தான் அவர்.

இவர்களைக் கண்டவுடன் அவர் நடை நின்று தயங்கியது. பிறகு வந்த வழியே திரும்பியது.

(தொடரும்)

இனும்! இனும்!! இனும்!!!
பூரண ஆரோக்யம் இன்ப
வாழ்க்கை நல்ல சந்ததிக்கு வழி
"தம்பதி விகாசம்"
மேன்மையான உங்கள் ஜீவிதம்
சௌக்யமாகவிருக்க
ஓர் வழிகாட்டும்
புஸ்தகம்.
மதன் மஞ்சரி பார்மஸி,
ராம்வாடி, கல்பா தேவி ரோட்,
பம்பாய்-2.

★ பழங்காலப் புடவை

நவநாகரிகக் குறிப்புகள்

தாசினி

உங்கள் எதிர்வீட்டு நாட்டுப் பெண் சுலோசனா சற்று முன் வந்திருந்தாள். அவள் மாமியாருக்குத் துளியும் 'பண்பு' இல்லை என்று குறை கூறினாள். சுலோசனா பிறந்த வீட்டில் ஏதோ விசேஷம் என்று பட்டணம் போயிருந்தாள். அவள் தாயார் ஒரு புடவை வாங்கிக் கொடுத்தாளாம். ஒரு மாதம் முன்னதாகவே, சொல்லி நெய்தாளாம். பழங்காலப் புடவையாம். விலை 125 ரூபாய் ஆச்சுதாம். 'ஒரு இழை சரிகை இல்லை—பாட்டி புடவை மாதிரியில் இருக்கு!' என்று இவள் மாமியார் பழித்தாளாம். தனக்கு சாண் அகல சரிகை போட்டு பளபள என்ற ஒரு புடவை அனுப்பும்படித் தன் தாயாருக்கு எழுதி இருக்கிறாளாம். புடவையைப் பார்ஸல் செய்துவிட்டாளாம்! அந்தப் பெண்ணுக்குக் கண்ணில் தண்ணீரே வந்துவிட்டது. ஏதோ சமாதானம் சொல்லி அனுப்பினேன்.

'பழங்காலப் புடவை என்றால் என்ன? முன் காலத்து நெசவு மாதிரியில் ரூப்பாகம் புடவையா? இது இப்போ புதிய நாகரிகமாக முளைத்திருக்கிறதா?' என்று நீ எழுதியிருக்கிறாய். இதே விஷயம்தான் உன் கடிதம் வந்த சமயம் நாங்களும் பேசிக்கொண்டிருந்தோம்.

"நான் ஒரு பழங்காலப் புடவை வாங்கினேன். ரொம்பவும் நன்றாக இருந்தது. ஆனால் எனக்கு அந்த நிறம் பொருத்தமாக இருக்காதோ என்று ஒரு சந்தேகம் வந்துவிட்டது—திருப்பி விட்டேன்!" என்றாள் பார்வதி.

"என்னது—நேத்திக்கு நாலு கடை ஏறி, இறங்கி, இருக்கிற புடவைகளை எல்லாம் மலையாக எடுத்துப் போடச் சொல்லி, பொறுக்கின புடவையையா திருப்பிவிட்டாய்?" என்று மங்களம்—சின்னையா சற்றுக் கோபமாகவே தன் மகளைக் கேட்டாள்.

"இதுக்குத்தான் பெண் புத்தி, பின் புத்தி என்பது. ஆமாம், கடையில்தான் நிலைக்கண்ணாடி வைச்சிருக்காளே—நிறப் பொருத்தத்தைப் புடவையை மேலே போட்டுப் பார்த்து நிச்சயம் செய்து கொள்ளக் கூடாதோ?" என்றாள் ராஜம்—நாதன்.

"கடையில் நன்றாகத்தான் இருந்தது. வீட்டுக்கு வந்த அப்புறம்..." என்று பார்வதி கூறிக்கொண்டிருக்கும் போதே, "என் புடவை நன்னா இருக்கா?" என்று கேட்டுக்கொண்டே சரஸ்வதி உள்ளே வந்தாள்.

"அடே! நேத்திக்கு நான் வாங்கி இருந்த புடவை!" என்று பார்வதி சற்றுப் பதட்டமாகவே சொன்னாள்.

புடவை ரொம்பவும் அழகாக இருந்தது. ஒருவித பச்சை – இதில் உடலில் அங்காங்கே பட்டில், பூக்கள் நெய்யப்பட்டிருந்தன. ஐந்து விரல் அகலத்துக்கு ஒரு தினுசான அரக்கில் கரை. இதே அரக்கு நிறத்தில் முக்கால் முழத் தலைப்பு. கரையிலும், தலைப்பிலும், ஆழ்ந்த பச்சையில் யானையும், கிளியுமாக வேலைப்பாடு செய்திருந்தது. புடவை நல்ல அழுத்தம். விலை நூற்று இருபது ரூபாய். சரஸ்வதிக்கு அந்தப் புடவை ரொம்பவும் நன்றாக இருந்தது.

"பழங்காலப் புடவை என்று சொன்னாயே, இது புதுக் காலமாகத்தானே இருக்கு? எங்கள் நாளில் அகலக் கரை போட்டுப் புடவை கட்டுவோம். தலைப்பும் நல்ல நீளம் இருக்கும். அதுதான் சரியான பழங்காலப் புடவை' என்றாள் என் அத்தை.

"அதாவது புதிய தினுசில் ரூபம் எடுத்திருக்கும் பழங்காலத்துப் புடவை இது. இப்போதான் பழங்காலத்துப் புடவைகள் என்று அத்தை சொல்லுகிற மாதிரியிலேயே நெய்கிறார்களே! சரிகை இல்லாமல், இப்படி எல்லாம் கரைகள் போட்டு நெய்தால் பழங்காலத்துப் புடவை என்று இதுக்கு ஒரு பேரைச் சூட்டி விற்கிறார்கள். எல்லாம் வியாபாரத் தந்திரம்!" என்றாள் வேதவல்லி—சாரி.

"என்ன இருந்தாலும் சரிகைப் புடவை சரிகைப் புடவைதான்!" என்றாள் பார்வதி.

"என்ன நீகூட இப்படிப் பேச ஆரம்பித்துவிட்டாய்? சரிகைப் புடவை பளபளவென்று, படாடோப பயங்காம், என்று இருக்கு. நாசூக்குத் தெரியாதவர்கள்தான் சரிகைப் புடவையின் கவர்ச்சியில் மயங்குவார்கள். சரிகையே இல்லாமல், பளபள என்றிருக்காமல், உறுதியான பட்டில், பழங்கால மோஸ்தரில் நெய்திருக்கும் புடவைகளுக்கே ஒரு தனி கம்பீரம் உண்டு. நாசூக்கே இல்லாதவர்கள்தான் சரிகைப் புடவை மவுஸில் உயிரை விடுவார்கள் என்றெல்லாம் பத்து நாள்களுக்கு முன் பேசினது நீதானே? இல்லை, எனக்குத்தான் வயசு காலத்தில் புத்தி தடுமாட்டம் ஏற்பட்டிருக்கா?" என்றாள் என் அத்தை.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்தக் கடையில் சரிகை போட்ட புடவை ஒன்று இவளுக்கு ரொம்பவும் பிடிச்சிருந்தது. நாங்கள் எல்லாருமாக இதை வாங்கிக்கோ, நன்னா இருக்கு என்று சொன்னோம். அதுதான் வீட்டுக்குப் போனதும் மனசு மாறி, புடவையைத் திருப்பி இருக்காள்! பழங்காலப் புடவைக்குள்ள ஒரு கண்ணியம் சரிகைப் புடவைக்கு எப்படி வரும்?" என்றாள் ராஜம்—நாதன்.

"அந்தப் புடவையை வாங்கிக் கொண்டாயா?" என்று மங்களம்—சின்னையா கேட்டாள்.

"இந்தப் புடவையை நேத்திக்கே திருப்பி விட்டேன். காலையில் அந்தப் புடவையை அனுப்பச் சொன்னேன். அதற்குள் யாரோ வாங்கி விட்டார்களாம்!" என்று பார்வதி அழமாட்டாக் குறையாகச் சொன்னாள்.

"அட கஷ்டமே! கடையில் இருக்கிற பலாப்பழத்துக்கு ஆசைப்படப் போய், கையில் இருந்த களாப் பழமும் போச்சா!" என்று என் அத்தை கேலி பண்ண ஆரம்பித்தபோது, நல்ல காலம் அப்போ உன் கடிதமும் வந்தது.

ஒரு சமயம் இப்படிப் பழங்காலப் புடவைகள் என்று புதிசாக நெய்யவில்லை. கலையில் ஆர்வம் உள்ள சிலர் பழம் புடவைகளை வாங்கி, இதில் சில மாறுதல்களுடன் நெய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். முதன் முதலில், இவ்விதப் புடவைகளுக்குக் கலாக்ஷேத்திரப் புடவை என்றுகூடப் பேர் இருந்தது. கலாக்ஷேத்திரத்தில்தான் முதலில் இவ்விதம் புடவைகளை நெய்யச் சொன்னார்கள். இப்பொழுது இந்தப் புடவைகளை எங்குமே விற்கிறார்கள். இந்தப் பழங்காலப் புடவைகள், முப்பாகமாக இருக்கிறது இல்லை—அகலக் கரைகள் போட்டாலும், முப்பாகமாகப் போடுவதில்லை. தலைப்பும் குட்டைதான். பட்டு உறுதியாக, வேலைப்பாடு அழுத்தமாக இருக்கும். பட்டிலேயே உத்திராக்ஷம், யானை, குதிரை, அன்னம், கிளி என்று வேலை செய்திருக்கும். இவ்விதப் புடவை ஒன்று நெய்ய, ஒரு நெசவாளிக்கு ஒரு மாதம் வரையில் பிடிக்குமாம். நெசவு கூலி ஏகப்பட்டது கொடுக்க வேண்டுமாம். இந்தப் புடவைகளுக்கு ஒரு தனிப்பட்ட கம்பீரம் இருப்பது என்னமோ உண்மைதான். சரஸ்வதி புடவை மாதிரியில் ஒருவித நீலத்தில் நான் ஒரு புடவை நெய்யச் சொல்லப் போகிறேன். இதன் ஜதையை உனக்கு அனுப்பவா? விலை நூற்றிப்பத்தில் இருந்து பதினைந்து வரையில் ஆகும். 'ராகவுட்' என்ற கூட்டுச் செய்யும் விதத்தை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

எங்கள் வைத்தியரைக் கேளுங்கள்

268 எம். உ. மதுரை.

"எக்ஸிமா." சென்ற 8 வருஷமாக 'மித்திர'னில் பிரசுரமாகி இருந்த...மருந்துகளை உபயோகித்தார். கணிசமான குணம் கண்டது. வீட்டில் வேறொருவருக்கும் அதையே கொடுத்து வந்தார். இவருக்குப் பரிபூரணமாக குணமாகிவிட்டது. சில மாதங்கள் இருவருக்கும் வெகு சந்தோஷம். ஆனால் இப்போது ஒரு மாதம் முன்பு—மறுபடியும் திருப்பிக்கொண்டது. இதற்கு மூன்று வருஷத்திற்கு முன் 'மித்திர'னில் வெளியாகியுள்ள "சொட்டைத் தைலம் கலந்த தூர்வா தைலத்தை" உபயோகிக்கலாமா? வேறு என்ன செய்யலாம்?

இவ்வளவுசிரத்தையுடன்'மித்திர'னில் வெளியாகும் குடும்ப வைத்தியக் கட்டுரைகளை வாசித்துப் பயனும் அடைபவர் உண்டு என்றறிந்து சந்தோஷப்படுகிறேன்.

எக்ஸிமா மாறிவிட்ட உடனே இந்தச் செய்தியைத் தெரிவித்திருந்தால் மறுபடி அது திரும்பாமலிருக்க என்ன செய்யலாமெனத் தெரிவித்திருப்பேன். வியாதி ஓரளவு குணமானதும் வைத்தியனைச் சிந்திக்கும் நோயாளி கிடையாது. இது உலகப் பிரசித்தம். படிப்பு முடிந்த பின் குருவைச் சிந்திப்பவர் பலர் இல்லை. கல்யாணமாகி மனைவி வந்த பின் தாயாரை நினைப்பவர் வெகு சிலர்தான். சம்பளத்தைத் தவிர எஜமானனைச் சிந்திக்கும் வேலைக்காரன் கிடையாது. "எஜமானனாவது! பாட்டாளியின் ரத்தத்தையும் வியர்வையையும் குளமாய்த் தேக்கி அதில் ஜலக்கிரீடையாடிக் களிக்கும் முதலாளியை எஜமானனென்பதா? கிழவனுக்கு புத்தி தடுமாற்றம் ஏற்பட்டுவிட்டது." என்கிறீர்களா? மன்னிக்கவும், ஏதோ இப்படி நிஜத்தைப் பேசும் (கெட்டப்) பழக்கம்! பொன் விழா செய்யவேண்டிய காலத்தையும் தாண்டிவிட்ட காலத்திய வழக்கம். இதை இனி மாற்றமுடியுமா? "மடிசஞ்சி. அதிலும் கந்தல் மடிசஞ்சி. போனால் போகிறது கிழம். அது சொன்னால் சொல்லிக்கொண்டிருக்கட்டும். நாம் காதில் போட்டுக்கொள்ள வேண்டாம்" என்று விட்டுவிடுங்கள்.

எக்ஸிமா, போவதும் வருவதுமாகக் கண்ணாமூச்சி காட்டும் இயல்புள்ள ரோகம். காரணம்? அதுதான் அதன் இயல்பு. இதற்கென்ன செய்தால் திரும்பாமல் போகும்? அதைத்தான் நண்பர் எழுதிக் கேட்கவில்லையே என்ற குறை.

எக்ஸிமா மறுபடி மறுபடி உபத்திரவிக்காமலிருக்கச் செய்ய வேண்டிய ஒரு முக்கியமான சிகிச்சை ரத்தமோக்ஷணம். இதைப் பலவிதத்தில் செய்யலாம். ஆனால் அட்டையைக் கடிக்கவிட்டு ஓரளவு ரத்தமோக்ஷணம் செய்வது எளிது. இன்றளவும் பழக்கத்திலிருந்து வருவது.

"அடாடா! அட்டையைக் கடிப்பித்து ரத்தத்தை விடுவதா? அதில் எவ்வளவு ஆபத்திருக்கிறது தெரியுமா? இதெல்லாம் காட்டுமிராண்டித்தனம்" என்று 'நவீன விஞ்ஞானிகள்' என்று தம்மைத் தாமே அழைத்துக்கொள்பவர் 'கூ கூ' வென்பதையும் கேட்டிருக்கிறேன்.

ஆனால், இதை முன் சொன்னதுபோல் இன்று வரையில் செய்துவரும் ஒரு சில சுக்கு, மிளகு வைத்தியர்களுமிருக்கிறார்கள். இவர்களிடம் மேற்சொன்ன நவீன விஞ்ஞானிகளிலும் சிலர் இச்சிகிச்சையை ஏற்று நல்ல பலனையடைந்து, நன்றியைத் தெரிவிக்கவும் செய்து வருகின்றனர்.

நண்பரும் இவ்விதம் ரத்தமோக்ஷணம் செய்திருந்தால் இந்த எக்ஸிமா திரும்பி வந்திராது. அதமபக்ஷம் இவ்வளவு துரிதத்தில் திரும்பியே இராது.

இப்பொழுது ஏற்கெனவே செய்த சிகிச்சைகளைச் செய்யலாம். சொட்டைத் தைலம் கலந்த தூர்வா தைலத்தை உபயோகிக்கலாம். ஆனால் ஜலம் கசிந்தபடி இருக்கும் நிலையில் இதை உபயோகித்தால் விரணமாகிவிடும். இதில் ஜாகரூகராயிருத்தல் அவசியம்.

குச்சாமாமா

திக்தகம் அல்லது மஹாதிக்தகத்தை உள்ளுக்குச் சாப்பிடுவது நல்லது. பறங்கிச்சக்கை சூர்ணத்தைச் சாப்பிடுவதாயின் இந்த கிருதத்துடன் குழைத்துச் சாப்பிடலாம்.

மாணிபத்ர குடத்தைச் சாப்பிட்டுக் குடலைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

நால்பாமாப்பட்டை, ஸேவ்யசந்தனாதி ஆகியவற்றின் கஷாயத்தில் தேங்காய்ப் பாலும் நல்லெண்ணெயும் சமனாகக் கூட்டி ஏலாதி கணகல்கம் சேர்த்துக் காய்ச்சிய எண்ணெய் மேலுக்குத் தேய்க்க மிகவும் நல்லது.

ஓரளவு எக்ஸிமா காய்ந்த நிலையிலானால் உடனே ரத்தமோக்ஷணம் செய்து கொள்ள வேண்டும். இதற்கு அனுபவம் மிக்க வைத்தியரிடம் சென்று செய்து கொள்வது அவசியம்.

269 ஏ. ஏ. ஸா. மானாமதுரை

கூப்பன் இல்லை.

270 ஸ்ரீமதி கே. ரா. கல்கத்தா

பசி இல்லை. வயிற்றில் எப்போதும் உப்புசம். அடிக்கடி வயிற்றில் என்னவோ சொல்லத் தெரியாத வேதனை. வாய் கசப்பு, மலபந்தம் இல்லை. மாதாந்தர [illegible] கெடு சரியாய் [illegible]. ஆனால் தீட்டு ரொம்ப குறைவு. அக்காலத்தில் வயிற்றில் விசேஷமாக ஒரு வலி முதலியது இல்லை. மார் படபடப்பு உட்கார்ந்திருக்கும் போதே உடம்பரல் ஒரு நடுக்கம். உடம்பில் ஒரு சூடு, காதில் சீழ், முடி கொட்டுகிறது. வயது 27. இரண்டு குழந்தைகள். இரண்டாவது பையனுக்கு வயது 5½.

டாக்டர்கள் நரம்புத் தளர்ச்சி என்கிறார்கள். 4 வருஷத்திற்கு முன் இப்படி இருந்தது. ஒரு வருஷம் கஷ்டப்பட்ட பின் குணமாயிற்று. இப்போது மறுபடி திரும்பிக் கொண்டிருக்கிறது. என்ன செய்யலாம்?

ஆம்ரபல்லவாதி லேஹியத்தை விடாமல் கொஞ்ச நாள் சாப்பிட்டுவரவேண்டும். பசி ருசி ஜீரணம் இவையுண்டாகும். வயிற்றில் உப்புசம் வேதனை இவை நீங்கும்.

தலைக்கு அஸனவில்வாதி தைலத்தை தினசரி தடவ உபயோகிக்கவேண்டும். காதுக்கு போராவ்கஹால் போன்றவை விட்டால் போதும்—ஆனால் காதில் சீழ் உள்ள வரையில் தலைக்கு ஸ்நானம் செய்ய வேண்டாம்.

பலாச்வகந்தாதி தைலத்தை உடம்பிற்கெல்லாம் தடவி தினசரி எண்ணெய் குளி. இதனால் நரம்புத் தளர்ச்சி–நடுக்கம் இவை போகும்–உடல் சூடு நீங்கும்.

சில நாள் ஒரு வைத்தியனின் நேர் பார்வையிலிருந்து முக்கியமாக பிழிச்சல், நவரக் கிழி போன்றவை செய்தால் நீடித்த சுகம் கிடைக்கும்.

271 ஸ்ரீ ஜிஹ. தேவதானம்பட்டி.

மருந்து கிடைக்குமிடம்.

272 என். ரா. புன்னபூதங்குடி.

15 வருஷத்திய காது கேட்காமை—காதில் இரைச்சல். குணமாகுமா? குணமாகுமென்றால் மருந்தை எழுதவும். முன் வாரப் பதிப்பில் விவரம் எழுதியுள்ளேன் என்று எழுதவேண்டாம்.

இதற்கென்ன செய்வது? ஒரு தரம் எழுதினதை மறுமுறை எழுதமாட்டேன். ஆகையால், மித்திரனில் இது முதல் பிரசுரமாகும் வினா—விடைகளை ஜாக்கிரதையாக எடுத்து வைத்துக் கொள்ளவும் என்று கண்டிப்பாக வருஷ ஆரம்பத்திலேயே எழுதியுள்ளேன். ஆயினும் ஏனோ இப்படி ஒரு தொந்தரவு. போதும் என்று எனக்கு வெறுப்புத் தட்டலாயிற்று.

"குணமாகுமா? குணமாகுமென்றால்.." எந்த வைத்தியனாவது எந்த வியாதிக்காவது இப்படி ஒரு உத்தரவாதம் செய்ய முடியுமா? நேயர் ஒரு டாக்டரைப் பார்த்து இவ்வித கேள்வியைக் கேட்பாரா? சுக்கு மிளகுக்காரன் என்றால் மட்டும் என்ன கிள்ளுக்கீரையா? கட்டாயம் குணப்படுத்தலாமென்பதிருந்தால் உலகத்தில் வியாதியே இராது. ஒருவருமே இறக்கமாட்டார்கள்.

பெருவாரியானவருக்கு குணமேற்பட்டிருப்பதை எண்ணி, இன்ன மருந்தை உபயோகியுங்கள் என்று சொல்லமுடியும். பலருக்கு ஏற்பட்டதுபோல் குறிப்பிட்ட நபருக்கும் குணம் ஏற்படலாம். சிலருக்குப் பரிமிதகுணம் ஏற்படலாம். சிலருக்கு குணமாகாமலேயும் போகலாம். உத்தாரவாதமளிப்பது எப்படி சாத்தியமாகும்?

இந்த 15 வருஷமாக எத்தனை பேரிடம் வைத்தியம் செய்திருப்பார்? யாராவது இவ்வித உத்தாரவாதம் கொடுத்திருப்பாரா?

தலைக்கு க்ஷீரபலா தைலம்—3 முறையாவது மடக்கிக் காய்ச்சியதைத் தேய்த்து வரவும். பிசு, சிரோவஸ்தி என்ற முறையில் உபயோகிப்பது நல்லது. தலைக்குத் தண்ணீர் விட்டுக் குளிக்கக் கூடாது. 10–15 நாளைக்கொரு நாள் வேணுமானால் சுருக்கத்தில் தலை ஸ்நானம் செய்யலாம்.

காதுக்கு 2–3 தினத்திலொரு தரம் சில துளிகள் போரால்கஹாலை விட்டுப் பஞ்சை வைக்கவும்.

உள்ளுக்கு தஞ்சை அரண்மனை முறைப்படி தயாரித்த அச்வகந்தா லேஹியத்தைச் சாப்பிடலாம். மூன்று நான்கு மாதத்தில் ஓரளவு குணங் காணலாம். காணாமலும் போகலாம். சாஸ்திரமென்னவோ இவ்வளவு நாட்பட்டது குணமாவது எளிதல்ல என்கிறது. நண்பரின் அதிருஷ்டம் எப்படியோ.

273 எம். எஸ். வை. மாயூரம்

கர்ணாடகத்திற்குக் கேள்வி 219ன் கீழ்ச் சொன்ன சிகிச்சை வகையில் சில விளக்கங்கள் கேட்டுள்ளார். தக்க பதில் தனித் தபாலில் அனுப்பப்பட்டது.

274 ஸ்ரீமதி சி. லா. கல்கத்தா.

1. முதல் மகளுக்கு இப்போதே தலை நரைக்கிறது. அடிக்கடி தலையில் கொசுக்கடிபோல் சிறங்குகள். சொறிந்தால் சீழ் பிடித்துக்கொள்கிறது. டாக்டர்கள் இதை அலர்ஜி என்கிறார்கள்.

2. இரண்டாவது மகளுக்கு உடல் மெலிவு. 'எலும்புக் கூடு' என்று சொல்லலாம். ஆகாரத்தில் சிறிது ஏறத்தாழ்வானாலும் அஜீர்ணம் வந்து விடுகிறது. 'உடம்பு கொஞ்சமாவது தேறினால்' சந்தோஷப்படுவார்.

3. மூன்றாவது பாப்பாவுக்கு அடிக்கடி வயிற்றுப் போக்கு. சாப்பிடவும்–பொறுக்கிப் போட்டுக்கொள்ளவும் அலைகிறாள். அவள் ஜீர்ணம் சரியானால் போதுமென்று இருக்கிறது.

நல்லதம்மா. 1. ஆம்ராஸ்த்யாதி தைலத்தைத் தடவி முடி சீவி வாருங்கள். நரையும்போகும். அலர்ஜியும்தீரும்.

வெள்ளை மிளகு அல்லது வெந்தயத்தைப் பாலில் அரைத்துத் தலைக்குத் தேய்த்து ஸ்நானம் செய்யச் செய்யுங்கள். வாரத்தில் ஒரு முறையோ பத்து நாளுக்கொரு தரமோ..போதும்.

திராக்ஷை கஷாயத்தால் குடலையும் சுத்தம்செய்து கொண்டால் அலர்ஜியே இராது.

2. இரண்டாவது ரத்தினத்திற்கு ஆம்ர பல்லவாதி லேஹியத்தைச் சில நாள் கொடுத்துப் பிறகு தஞ்சை அரண்மனை முறைப்படி செய்த அச்வகந்தா லேஹியத்தையும் கொடுத்து வரவும். இடையில் பலாச்வகந்தாதி தைலத்தை உடம்புக்குத் தேய்த்து தினசரி (ஒரு நாள் விட்டு ஒரு நாளாவது) வெந்நீரில் குளிப்பாட்டி வரவும். கொழுகொழு வென்றாகி விடுவாள்.

3. பாப்பாவுக்குப் பல் முளைக்கும் வயதல்லவா? அதனாலேயே இந்த வயிற்றுப் போக்கும் இருக்கலாமே. ஆயினும் 9 மாதப் பாப்பா. சாப்பிடவும், பொறுக்கிப் போட்டுக்கொள்ளவும் அலைகிறாள்.

இவர்களுக்காகத்தான் இவர்கள் அப்பா வீட்டை விட்டு மக்கள் மனுஷ்யாளைவிட்டு 1000 மைல்களுக்கப்பாலெல்லாம் சென்று அலைகிறாரே. இவர்கள் ஏன் அலையவேண்டும்? பொறுக்கித் தின்பதானால் தின்னட்டுமே. வெள்ளாட்டின் பாலை ஆகாரமாகக் கொடுத்தால் ஆகாரமுமாயிற்று; வயிற்றுப் போக்கிற்கும் மருந்துமாயிற்று. அப்படியும் வயிற்றுப் போக்கு இருக்குமானால் ஓமத்தைக் கரண்டி, கஷாயம் வைத்துக் கொடுப்பது. ஓமத்தீநீரைச் சில துளிகள் ஜலத்தில் கலந்து கொடுப்பது—இப்படி ஏதாவது ஒன்றிரண்டு மாதம் வரையில் செய்து வந்தால் பல் முளைப்பதற்கான பிரட்டல்காலம் தாண்டிவிடும். பிறகு காய்ச்சிய மோர் கொடுக்கலாம். அல்லது முஸ்தாதக்ராம் கொடுக்கலாம்.

275 ஜி. ஸா. சின்ன சொக்கிக்குளம்.

குறிப்பிட்ட மருந்துகள் கிடைக்குமிடம் கேட்டிருக்கிறார்.

276 வி. ஏ. ஸா. திருநெல்வேலி.

சில வீண் சந்தேகங்களைக் கேட்கிறார். பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டாமென்றும் உத்தரவிடுகிறார். பத்திரிகையின் வாயிலாக, பொதுஜன சேவை செய்யத்தான் நாம் முன் வந்தது.

அனுசிதமான விஷயமானால் ஒரு வைத்தியனும் அதை பகிரங்கப்படுத்த மாட்டான். அவனுக்கு அப்படி ஒரு தொழில் முறையிலுள்ள பண்பாடு. சில கேள்விகளையும் பதிலையும் வெளியிடுவதால் பொதுஜனங்களுக்கு நன்மை விளையும். பெயரை வேணுமானால் வெளியிடாது விஷயத்தை வெளியிடுவது பொதுமக்களின் நன்மையை உத்தேசித்துச் செய்ய வேண்டிய கடமையாகும். "அதைச் செய்யாதே. ஆனால் பதிலை எனக்கு நேராக எழுதிவிடு" என்று உத்தரவு போட ஒருவருக்கும் உரிமையில்லை. நண்பரின் ஆணை அர்த்தமற்றது. ஆனால் ஒரு வைத்தியக் கூப்பன் வைத்துள்ளாரே, பதிலெழுதாமலிருக்க முடியுமோ? வைத்தியக் கூப்பனுக்காக பதிலை வேணுமானால் மித்திரனில் பிரசுரிக்கலாம். நேரிட பதில் எழுதுவது என்னிஷ்டத்தை யனுசரித்ததுதானே! எப்படியானாலும் இவ்வகை உத்தரவுகள் எனக்குக் கசப்பாகத்தான் இருக்கின்றன.

277 ஸ்ரீமதி வெ. சென்னை.

இளம் பிள்ளை வாயுவுக்குச் சொன்ன கொர்னஸித்ஸ மருவைப்பற்றிச் சில தகவல்களைக் கேட்டிருக்கிறார். தெரிந்த வரையில் தெரிவித்தாயிற்று.

278 ஸ்ரீமதி வி. டெல்லி.

பாஷை தமிழ். எழுத்து மலையாளம், இப்படி எழுதி இருக்கிறார் சகோதரி. விஷயம் ஒன்றுமில்லை. முன் கடிதத்திற்கு நன்றி என்பது போன்றதுதான்.

279 ஸ்ரீமதி ரா. ஜான்ஸி.

தற்போது பிரசுரிப்பது தகாது. குழந்தையின் நோய் விஷயம்.

283 ஸ்ரீமதி அ. சென்னை.

மருமகனுக்கு அடிக்கடி வரும் 'கணை'. இழுப்பும் இருமலும் சளியும்–சிறிது ஜுரமும் வருவதுண்டு மாதத்தில் ஒரு முறை தவறாது. 2–3 முறையும் வந்துவிடும். என்ன செய்யலாம்?

ஆறு வயது வரையில் வளர்த்துவிட்டீர்கள்! இனி என்ன கஷ்டம்? கூஷ்மாண்ட ரஸாயனம், அச்வகந்தா லேஹியம் இவற்றை மாறிமாறிக் கொடுத்துவர வேண்டும். இரண்டு மூன்று வாரத்திற்கொருமுறை தாத்ரீ தைலத்தை பேதிக்குக் கொடுக்கவேண்டும். ஒன்றிரண்டு முறை வாந்தியானாலும் ஆகலாம். அது மிகவும் உத்தமம்.

ஆட்டுப் பாலில் ஒரு பல் பூண்டையும் சிறிது ஜலத்தையும் கூட்டி, ஜலம் சுண்டும் வரையில் காய்ச்சி—பூண்டைப் பிழிந்து களைந்துவிட்டு அப்பாலைக் குடித்துவரக் கொடுக்கவும். தினம் ½ ஆழாக்கு முதல் 1–2 ஆழாக்கு வரையில் ஒரு வேளையோ இரண்டு வேளையோ கொடுத்து வந்தால் மருந்தே தேவையில்லை. இந்தக் கணை இழுப்பு, இருமல் விலாவில் குழி விழுந்து மூச்சுவிடல் ஆகிய யாவும் குணமாகிவிடுமே.

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி" REGD

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் அசல் விஜயநகரம் மருந்து. எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும். போலிகளைக் கண்டு ஏமாறுதீர்

Dr. பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

19, தெற்குமாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்-4. போன்: 71354

கும்பகோணம் கிளை: 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி

விக்கிரமாதித்தன்

உலகியல் கதைகள்



பத்மாவதி சாகஸம் 3.

விளைகேட்க யோகியிடம் வேந்தன் விரைந்து வந்தான் "தவவேடம் தாங்கியுள்ளீர் தாழ்வட மேதுமக்கிங்கே?" "மன்னுவுன் நகரிருந்து வருவாள்ஓர் இளமங்கை பின்னிரவிற் சுடுகாட்டுப் பிணம் வெந்தவுடனதனை தன் மன்பிழுத்துத் தைரியமாய்த் தின்றுவிட்டு முன்பின்னுய்ப் பார்த்து நகர் மூதேவி திரும்பிடுவாள் நானிவனின் நிலையறிய நன்நெஞ்சில் சூலத்தால் ஊன்றிச் "சோஸ்! யார்நீ? என்உடல் தின்னும் வகையென்ன தாழ்வடத்தைத் தென்பேர்தான் பத்மாவதி நித்தம் வெந்தபிணம் தின்னுல்தான் வெம்பசிதீர்ந் திருந்திடுவேன் யாரிடமும் கூறநீர்..." என்றவுடன் இளவரசி நந்தையவள் தனதடுவில் தந்தநகக் குறிகண்டான் மந்திரிபா விளைநச்சொல்ல மறுநாளே பெண்பேயை அந்தப்புரம் விட்டகற்றித் துரத்திவிட்டான் தந்தை உயிர்நீத்தான் தாயாரும் அப்படியே இந்தப் பழிஎவர்க்கு எனறதந்த வேதாளம் மந்திரிய மாபாவி மங்கைக்குத் தீர்ப்பளித்தான் என்றுசொல விக்ரமனும் எழுந்தோடும் வேதாளம்.

சின்னியாள் கதை 1.

அந்தணர்க்கோ ரழகுமகள் அதைமணக்கப் பிராமணர்கள் வந்தனர் மூன்றிளைஞர்களாய் வடிவழகி வயதறிந்து அந்தப் பெண் தமையனை ஓர் அந்தணன்கேட்டுத் தந்துனுக்கே தந்திடுவேனென்றவனும் தங்கைக்கு மணம்பேச அந்தப்பெண் தாயிடத்தில் இன்னெருத்தன் இந்தப்பெண் உனக்கென்று உறுதிமொழியாய்க்கொடுக்க தந்தையிடம் மற்றொருவன் தனக்கவளென்றுறுதிபெற இந்தவிதம் மூவருமாய் எனக்குனக்கு வழக்காட சுந்தரியா மம்மங்கை சோகத்தால் இறந்துவிட்டாள் வந்தவர் மூவரில் ஒருவன் வைக்நேரித்த சுடுகாட்டில் வெந்தவளின் சாம்பலுக்கு விளக்கண் நீராடிக் காத்திருக்க மற்றொருவன் கன்னிகையின் எலும்பெடுத்து யாத்திரையாய்க் கங்கைக்குக் காசித் திசைசென்ருன் மூன்ருமவன் உலகம் முழுதலைந்து வரும்வழியில் விருந்தளித்த பார்ப்பாத்தி வெகுசமர்த்தி அருளாலே சிகபாவம் சஞ்சீவிசில மந்திரங்கற்று சுடுகாட்டிற் சென்று அவளைச் சுயரூபம் உயிருடனே எடுநீஎன்று உயிர்கொடுக்க வல்லோரும் வந்துவிட படுபாவிப் பார்ப்பனர்கள் பழையபடி வழக்காட எதுநியாயம் விக்ரமரே யாருக்கு இவள்மனைவி இவ்வாளக் கேள்விக்கு விடையளிப்பான் விக்கிரமன் சுடுகாடு காத்தவனே சுந்தரிக்கு மணவாளன். உயிர் கொடுத்தோன் தந்தை. அவள் உடல் எலும்பைக் கங்கையிடச் சென்றவனே செல்வ மகன் செப்பிவிட்டேன் என்றவுடன கட்டவிழ்த்து வேதாளம் கால் மேலாய்த் தொங்கிற்று.

(தொடரும்)



நாகலோக

அஸ்வத்தாமா

மகத ராஜகுமாரன் மகிபாலன் மகா புத்தசாலி. இளம் வயதிலேயே இணையிலாத கல்வியறிவு பெற்று எல்லோருடைய மதிப்புக்கும் பாத்திரமாகியிருந்தான் அவன். மக்களிடத்திலும் மகிபாலனுக்கு மட்டற்ற அன்பு உண்டு. இத்தகைய அருமையான மகனைப்பெற்ற மகத அரசர், தானும் முதுமை அடைந்துவிட்டதால், அரசாட்சியை மகிபாலனிடமே ஒப்படைத்துவிட்டு, தலைநகரை அடுத்த ஒரு காட்டில் தவம் செய்யச் சென்ருர்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்ற மகிபாலனுக்கு அதற்கேற்ருற்போல கடமைகள் அதிகமாகத்தானே செய்யும்? என்ருலும், அத்தனைக் கடமைகளுக்கும் இடையில் இன்னும் ஒரு கடமையையும் சேர்த்துக்கொண்டான் அரசன். தினமும் காலையிலும், மாலையிலும் தனது தந்தையை அவர் இருக்கும் ஆசிரமத்திற்குச் சென்று பார்த்து, அவரிடம் ஆசிபெற்று வருவது என்பதுதான் அந்த அதிகப்படியான கடமை. அவ்வளவு பாசம் தந்தை மீது மகிபாலனுக்கு!

தனது அருமை மகன் தன்னைப் பார்க்க வருவது குறித்து தவத்தில் ஈடுபட்டிருந்த மகத அரசருக்கு மகிழ்ச்சிதான். என்ருலும், அதனுல் தந்தை–மகன் என்ற பாசம் அதிகமாகி, தவத்திற்கு இடையூறு நேருமே என்று கவலைப்பட்டார் அவர். ஆகவே, சிறந்த தவ முனிவரான அந்த ராஜ ரிஷி எந்த வித தடங்கலும் இல்லாமல் தவம் செய்யும் நோக்கத்தில் தலைநகருக்கு வெகு தூரத்திலுள்ள ஒரு காட்டுக்குச் சென்றுவிட்டார்.

அவர் ஆசிரமம் அமைத்துக்கொண்ட இடம் ஒரு பெரிய மலையடிவாரத்தில் இருந்தது. அந்த மலையைச்சுற்றி 'ஓம்..ஓம்' என்று ஒலித்துக்கொண்டு ஒரு தெள்ளிய ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றின் ஒரு கரையில் மிகப் பெரிய பாம்புப் புற்று ஒன்று இருந்தது. அந்தப் புற்றுதான் நாகலோகத்தினர் பூலோகத்திற்கு வருவதற்காக அமைத்துக்கொண்ட சுரங்கப் பாதை!

ராஜரிஷி தவம் செய்யத் தொடங்கிய சில நாட்களுக்கெல்லாம், ஒரு நாள் நாகராஜன் சுரங்கப் பாதை வழியாக அந்தப் பக்கம் வர நேர்ந்தது. தவமும், தியானமும் மேற்கொண்டு முகமும், உடலும் பொன்போல் பிரகாசிக்கும் முனிவரைக்கண்ட நாகராஜன் அப்படியே மெய்

ம்

மறந்து போனான். தனது பூலோக வாசலை (புற்றை) அடுத்து அத்தகைய தவப் பெரியார் இருப்பது தனக்கு வாய்த்த பாக்கியம் என்றே கருதினான் அவன்.

பிறகு ராஜ ரிஷியின் தியானம் கலையும் மட்டும் அடக்க ஒடுக்கமாக அருகில் அமர்ந்திருந்து, அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி, "அடியேனுக்கு தர்மோபதேசம் செய்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். ராஜ ரிஷியும் அதற்கு இணங்கி, தினமும் அன்போது உபதேசம் செய்து வரலானார்.

தினமும் தான் ஆசி பெறச் செல்லும் இடத்தில் தந்தையைக் காணாத மகிபாலன், 'எங்குதான் சென்றிருப்பார் தந்தை?' என்று ஒரு நிமிஷம் கலங்கினான். பிறகு, அன்று முதல் காடு காடாகத் தன் பரிவாரங்களுடன் அவரைத் தேடுவதில் முனைந்தான்.

அவ்வாறு தேடிவருகையில் ஒரு நாள் தந்தை தவமிருக்கும் காட்டையே அடைந்து விட்டான் மகிபாலன். யாருடனோ தன் தந்தை பேசிக் கொண்டிருக்கும் ஒலியைக் கேட்ட அரசன், தன் பரிவாரங்களையெல்லாம் ஒருபுறமாக இருக்கச் செய்து விட்டுத் தான் மட்டும் ஒலி வந்த திசையே சென்றான்.

அங்கே அவன் கண்ட காட்சி மெய்சிலிர்க்க வைப்பதாக இருந்தது. பாம்புகளுக்கெல்லாம் அரசனான நாகராஜனே தன் தந்தையின் முன்பு அடக்க ஒடுக்கமாக உட்கார்ந்து உபதேசம் கேட்கும் காட்சியைக் கண்டபோது மெய்சிலிர்க்காமல் என்ன செய்யும்? 'இப்படியும் ஒரு அதிசயமா!' என்று ஆச்சரியப்பட்டுப் போனான் மகிபாலன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ராஜ ரிஷியை வணங்கிவிட்டு நாகலோகம் சென்றுவிட்டான் நாகராஜன். அதன் பிறகு தன் தந்தையை அணுகி, அவருடைய பாதங்களில் விழுந்து பணிந்தெழுந்தான் மகிபாலன். அவன் கண்களில் 'மளமள'வென்று கண்ணீர் பெருக்கெடுத்தது. கண்ணீர்ப் பெருக்கால் 'பளபள'வென்று பிரகாசித்த அவனுடைய விழி மணிகள், அவனுக்குத் தன் தந்தை மீதிருந்த அன்பின் அளவை வெளியிட்டது.

தனது அருமை மகன் அவ்வளவு சிரமப்பட்டுத் தன்னைக் காண வந்ததைக்கண்ட ராஜ ரிஷியும் ஒருகணம் அந்த அன்புப் பிணைப்புக்கு ஆட்பட்டார்; அவரும் நெகிழ்ச்சி வசப்படவே செய்தார். பிறகு மகனை அருகில் அழைத்து அணைத்து உச்சி

சிறுவர் கதை

மோந்து குசலம் விசாரித்தார்.

மகிபாலன் தந்தையிடம் அன்புடன் அளவளாவிவிட்டு, நாகராஜனைப்பற்றி விசாரித்தான். தனக்கும் நாகராஜனைப்போல் ஆக வேண்டுமென்று விருப்பம் இருப்பதாகவும் கூறினான் மகிபாலன்.

இதைக்கேட்ட ராஜரிஷி, "அன்பு மகனே, மானிடப் பிறப்பைவிடச் சிறந்த பிறப்பு வேறில்லை. நாகலோகத்தில் அரசனாகப் பிறப்பதால் எத்தனையோ இன்பங்களையெல்லாம் அனுபவிக்கலாமென்றாலும், அது மனத்திற்குத் திருப்தியளிக்காது; மனத்தை அலைக்கவே செய்யும். இது சொல்லிப்புரியாது; அனுபவித்தாலே புரியும். அடுத்த ஜன்மத்தில் நாகராஜனாகப் பிறக்கப் போகிறாய். அப்போது நான் சொல்வதன் உண்மை உனக்குப் புலப்படும்" என்று புன்முறுவல் பூத்தவாறே கூறினார்.



அடுத்த ஜன்மத்தில் நாகராஜனாகப் பிறந்தான் மகிபாலன். எல்லையில்லாத இன்பங்களெல்லாம் நிறைந்திருந்தன நாகலோகத்தில். கள் குடித்துக் களித்திருப்பதில் மிதமிஞ்சிய ஆசை காட்டினர் நாகலோக வாசிகள். பல அழகிய நாககன்னிகைகள் நடனமாடுவதில் தேவலோகத்து ஊர்வசியையும் தோற்கடிக்கக் கூடியவர்களாக இருந்தனர்.

மாணிக்க சிம்மாசனத்தில் அமர்ந்து, மகோன்னதமாக ஆட்சி புரிந்த நாகராஜன் மகிபாலனுக்கு நாகலோகத்தில் இருந்த இன்பங்களெல்லாம் பணிவிடை செய்யக் காத்துக்கிடந்தன. நாக கன்னிகைகள் சுழன்று சுழன்று நர்த்தனமாடி மன்னனை மகிழ்விக்க முன் வந்தனர். திராட்சை மது வகைகளைக் கிண்ணம் கிண்ணமாகப் பொழிந்து நாகராஜனை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்த முனைந்தனர் சர்ப்ப மகளிர்கள்.

இத்தனை இன்பங்களும் நாகராஜனை மகிபாலனுக்குக் கசந்தன! நாகலோக வாசிகள் அளவற்ற இன்ப சுகங்களில் திளைத்து நெறி கெட்டுப் போவதைக்கண்டு அவன் உள்ளம் வருந்தியது. 'இந்த நாகலோக ஆட்சிப் பொறுப்பை உதறியெறிந்துவிட்டு, மனிதப் பிறப்பெடுக்கத் தவம் செய்தாலென்ன?' என்று மனமார நினைத்தான் மகிபாலன். அத்துடன் தன் தந்தை பூர்வ ஜன்மத்தில் 'அரிது, அரிது மானிடப் பிறவி அரிது' என்று கூறிய சொல்லும் அவன் நினைவுக்கு வந்தது.

ஆகவே, யாரும் அறியாமல் ஒரு நாள் இரவு நாகலோகத்தினின்றும் கிளம்பி பூலோக சுரங்கப் பாதையான புற்றின் வழியாக வெளி வந்து, வேறொரு பாம்புப் புற்றில் இருந்து வெளியில் தலையை நீட்டிக்கொண்டு தவம் செய்ய முற்பட்டான், சர்ப்பமாகப் பிறந்திருந்த மகிபாலன். நாகராஜன் தினமும் உணவே உட்கொள்வதில்லை. பட்டினி கிடந்தாவது உயிரைவிட்டுப் பின்னர் மனிதப் பிறவியை அடையவேண்டும் என்ற எண்ணம் அப்படி வலுவாக உள்ளத்தில் ஏற்பட்டிருந்தது!

இப்படி இருக்கையில் ஒரு நாள் அந்தப் புற்றிருந்த காட்டில் சில வேடர்கள் வேட்டைக்கு வந்திருந்தனர். அந்த வேட்டையில் அவர்களுக்குச் சிறு பறவைகூடக் கிடைக்கவில்லை. அந்தப் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிக்கொண்டிருந்த அந்த வேடர்களின் கண்ணில் தலையை நீட்டிக்கொண்டு தவம் செய்து கொண்டிருந்த நாகராஜன் தென்படவே, 'அதையாவது பிடித்துக்கொன்று தோலை விற்றுப் பணம் சம்பாதிக்கலாமே' என்ற ஆத்திரத்துடன் புற்றை நெருங்கினர்.

வேடர்கள் தன்னை நெருங்கி வருவதைக்கண்ட நாகராஜன் பயப்படவில்லை; தனக்கு நல்ல காலம் பிறந்துவிட்டதாகவே எண்ணியது! ஏனெனில், அவர்கள் கொன்றுவிட்டால் விரைவிலேயே அடுத்த பிறப்பில் மனிதப் பிறவி பெறலாமே!!

வேடர்கள் கொஞ்சமும் கஷ்டமில்லாமல் நாகராஜனின் கழுத்தில் கையைக் கொடுத்துப் பிடித்துவிட்டனர்.

பாம்புடன் செல்லும் வேடர்களைக்கண்ட ஒரு பெரும் வணிகன், நாகராஜனுக்காக மனதிரங்கி, வேடர்களிடம் பாம்பை விட்டுவிடுமாறு கோரினான்; ஒவ்வொருவருக்கும் பொன்னும் பொருளும் கொடுத்து வேண்டினான்.

பொன்னையும் பொருளையும் கண்ட வேடர்கள் நாகராஜனை விட்டு விட்டுப் பொன் மூட்டைகளைச் சுமந்துகொண்டு போய்விட்டனர்.

நாகராஜனுக்குத் தான் உயிருடன் விடுபட்டதில் மனவருத்தம் தான். என்றாலும், அவ்வளவு கருணையுள்ள மனிதனும்—கொடு விஷமுள்ள பாம்பிடமும் இரக்கம் காட்டும் ஒரு மனிதனும்—இருப்பதைக்கண்ட நாகராஜன், அந்த வணிகனைக் கௌரவிக்கக் கருதி, நாகலோகத்துக்கு அவனை அழைத்துச் சென்றான். அங்கே நாககன்னிகைகளின் நாட்டிய நிகழ்ச்சிகளெல்லாம் அந்த வணிகனுக்காக விசேஷமாக நடைபெற்றன. பல நாக மகளிர்கள் வணிகனுக்குத் தொண்டு செய்தனர். திராட்சை ரசங்கள் பொற்கிண்ணங்களில் வழங்கப்பட்டன. இன்னும் எத்தனை எத்தனையோ கோலாகலங்கள்!

இத்தனையிருந்தும் எள்ளத்தனையும் மகிழ்ச்சியளிக்கவில்லை அந்த வணிகனுக்கு. உடலைக்கெடுத்து உள்ளத்தையும் கெடுக்கும் இந்த சுகபோகங்களில் மனமே செல்லவில்லை அவனுக்கு. மாறாக, அவற்றிலெல்லாம் வெறுப்புதான் ஏற்பட்டது.

ஆகவே, தன்னை பூலோகத்திற்கே அனுப்பிவிடுமாறு நாகராஜனைக் கேட்டுக்கொண்டான் வணிகன். "மனிதப் பிறவி ஒன்றுக்குத்தான் பகுத்தறிவு உண்டு. இன்னது இன்பம், இன்னது துன்பம் என்றறியும் பண்பு மனிதன் ஒருவனுக்கே உண்டு. 'இன்பம், இன்பம்' என்று இந்த உலகில் நீங்கள் அனுபவிக்கும் இந்த கோலாகலங்களெல்லாம் முடிவில் துன்பமளிப்பவை என்ற உண்மை, மனிதப் பிறவி எடுத்து மனிதனாக வாழ்பவனுக்குத்தான் தெரியும். அந்த அறிவு பெறல்தான்—ஆறறிவு வாய்ந்த மானிடப்பிறவி பெறல் தான்—புல்லாகிப் பூண்டாகிப் பல மிருகங்களாகிப் பிறந்து பிறந்து பரிதவிக்கும் வாழ்க்கையின் உயரிய குறிக்கோள். ஆகையால், இன்பமே உருவாகிய நாகலோகத்தில் என்றும் சுகபோக சௌக்கியம் அனுபவிக்கும் வாழ்க்கையைவிட 'மானிடராகப் பிறத்தல் அரிது'.." என்று நாகராஜனிடம் மனம் விட்டுக் கூறி விடை கேட்டான் வணிகன்.

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற பேருண்மையை ஏற்கெனவே தன் தந்தையின் வாய் மூலமாகச் சென்ற ஜன்மத்தில் கேட்டறிந்திருந்த நாகராஜன், வணிகனும் அந்த உண்மையைத் தெளிவாகச் சொல்லக் கேட்டு அப்படியே ஏக்கம் பிடித்தவன்போல் ஆகிவிட்டான் நாகராஜன். 'கிடைத்தற்கு அரிய மானிடப்பிறவி கிடைத்திருந்தபோது நாகலோகத்தில் பிறக்க ஆசை கொண்டதனால்தானே இப்படி மன உளைச்சல் பட நேர்ந்தது' என்று மனம் வருந்தினான்.

பிறகு ஒருவாறு சமாளித்துக் கொண்டு வணிகனைத் தன் பரிவாரங்கள் புடைசூழ பூலோகத்திற்குக் கொண்டுவிட்டுத் திரும்பினான் நாகராஜன்.

நாகலோகம் திரும்பிய நாகராஜன் வெகு நாட்கள் அங்கேயே இருக்கப் பிடிக்காமல், பழைய படியே நாகலோக வாசிகள் யாரும் அறியாமல் பூலோகம் திரும்பி, ஒரு புற்றில் உண்ணாவிரதமிருந்து உடலை வருத்தி, 'அடுத்த பிறப்பிலாவது கிடைத்தற்கு அரிய மனிதப் பிறவியை அளிக்கவேண்டும்' என்று இறைவனை தியானித்துக்கொண்டு தவமிருந்தான்.

(பல பிறவிகளெடுத்தார் போதிசத்துவர். மிருகங்களாக அவர் எடுத்த ஜன்மங்கள் பல. மனிதப் பிறவியிலும் கல்லாதவர்கள் இடையிலும், தூயோர்களிடையேயும் பிறந்திருக்கிறார். அந்தணர் குலத்திலும், அரச குடும்பங்களிலும் கூட அவர் பிறந்திருக்கிறார். கடைசியாக, உலகையே நன்னெறிப்படுத்த வந்த புத்தராக அவதாரம் செய்து நமக்கு நல்வாழ்வுப் பாதையைக் காட்டினார். அவர் எந்தப் பிறவி எடுத்த போதிலும் அன்பும் அறிவும், நேர்மையும் நியாயமும், தொண்டும் சீலமும் படைத்தவராகவே இருந்திருக்கிறார். இத்தகைய மகானின் பல அவதாரங்களைப் பற்றிய கதைகளைத் தொடர்ந்து இதுவரை வெளியிட்டு வந்தோம். 'எத்தனைப் பிறவி எடுத்தாலும் மானிடப் பிறவிக்கு ஈடாகாது' என்ற உன்னதக் கொள்கையை விளக்கும் இந்தக் கதையுடன் இந்தத் தொடரை முடித்துக்கொள்கிறோம்.)

இது செய்தி ★ நாகு

உபவாச ரெகார்டுகள்! பர்மா பக்கிரி என்றழைக்கப்படும் பிரெஞ்சுக்காரர், ரோஜர் பிரன், தமது உபவாசத்திறனை நான்கு முறை நிரூபித்திருக்கிறார். கடைசியாக, ஏப்ரல்மாதத்தில் ஒரு சவப்பெட்டியில்புகுந்து, 63 நாட்களை, உப்பும் நீரும் மட்டுமே அருந்திக் கழித்தார். கொடிய நச்சுப் பாம்புகளும் கண்ணாடித் துண்டுகளும்தான் அவருக்குத் துணை. (பிலிம் இந்தியா)

தலையில் சவாரி செய்த குண்டு

சென்ற உலக யுத்தத்தின் போது ஸெஸில் போல்ஸ் என்பவர் ஜெர்மன் குண்டுக்கு இலக்கானார். மூக்குக்குப் பின்னால் தங்கியிருந்த குண்டு ரவையை எடுக்க ஆபரேஷனுக்கு அவர் சம்மதிக்கவில்லை. குண்டு மேல் பக்கம் நகர்ந்து, மூளையை அடைந்து அவரை எந்நேரமும் கொன்றுவிடக் கூடும்.

லாரி டிரைவராயிருக்கும் போல்ஸ், சமீபத்தில் காடு முரடான ரஸ்தாவில் வாகனத்தை ஓட்டிச் செல்கையில் பெரிய நெடியொன்று தூக்கிப்போட, பலமாக இருமினார், எச்சிலை உமிழ்ந்தபோது, 12 வருடங்களைக் தலையினுள் சுமந்து வந்த குண்டு திடீரென வெளியே வந்து விழுந்தது.

—டிட்பிட்ஸ் ஜூன், 1956.

கோல் காலில் 2500 மைல்

கோல் காலில் நடந்து, 16 வாரங்களில் 2500 மைல் தூரம் பிரயாணம் செய்த பிரெஞ்சுக்காரர், ஹென்ரி ரோசாடின் தமது சொந்த கிராமத்துக்குத்திரும்பினார். அவருக்குக் கோலாகல வரவேற்பு காத்திருந்தது. இந்த விசித்திர யாத்திரையின் போது மூன்று தடவைதான் அவர் கீழே விழுந்தாராம். —மெயில்-ஆக. 1950.

மாண்டவள் மீண்டாள்

வீரா பால்ச் என்னும் 44 வயதான மாது, மெல்போர்ன் நகர ரஸ்தாவில் விழுந்து மயக்கமுற்றாள். டாக்டர் வந்து பார்த்து, உயிர் போய்விட்டதென்றவுடன், ஆம்புலன்ஸில் ஏற்றி சவக்கிடங்குக்கு அவளை அனுப்பிவிட்டனர். அங்கு காவல் புரிந்த போலீஸ்காரர் உயிரிருப்பதாகச் சந்தேகித்து ஆஸ்பத்திரிக்குத் திருப்பிவிட்டார் அங்கு அந்த ஸ்திரீ கொஞ்சம் [illegible] பிறகு திரும்பி கண் விழித்தெழுந்தாள்

—(ஹிந்து-ஆக. 1956)

என் தங்கம்

"என்னெஸ்வி"

சினிமா என்ற பெயரில் மூன்று மணி நேர நரகாவஸ்தையை அனுபவித்துவிட்டுத் 'தப்பித்தேன் பிழைத்தேன்' என்ற உணர்வு மிஞ்சத் தியேட்டர் வாசலுக்கு வந்தேன் நான்.

கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி பத்து.

வீட்டை எண்ணி ஒரு அடியெடுத்து வைத்தேன். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

காலையில் நான் ஆபீஸுக்குக் கிளம்பும்பொழுது, குழந்தைக்குப் பாடம் சொல்வதுபோல் திருப்பித் திருப்பிச் சொல்லி ஒரு ரூபாயை என்னிடம் நீட்டினுள் என்னருமைத் தங்கம். "மறந்துவிடாதீர்கள்...இன்று ராத்திரி சமையலுக்குக்கூட மணி அரிசியில்லை. இன்றைக்கு சாயந்திரம் ஆபீஸிலிருந்து கிளம்புகிறபொழுது வேறு எங்கும் போகாமல் ஞாபகமாக வாங்கிக்கொண்டு வந்து விடுங்கள்" என்று கூறி அவள் கொடுத்த ஒரு ரூபாய்...

நல்ல ஞாபகந்தான்!

பக்கத்தில் ஒரு வாய்ச்சவடால்காரர் தியேட்டர் வாசலிலிருந்து விடாமல் 'கட மடா'வென்று சப்தம் போட்டுக்கொண்டே வந்தார், "இந்தத் தமிழ் நாட்டிலேதான் இப்படிப்பட்ட பாடாவதிப் படங்களைத் துணிச்சலாகத் தயாரித்து நம்மிடமிருந்து காசு வாங்குகிறான். வேறொரு நாடாகவிருந்தால் கொட்டகையையே கொளுத்திவிட்டுவிட மாட்டார்களா?" என்று.

வழியில் 'அம்பிகா லாட்ஜ்' திறந்திருந்தது.

உள்ளே நுழைந்தேன்.

"ஊத்தப்பம், தோசை, உப்புமா" என்று சர்வர் அடுக்குமொழியில் அடுக்கிக் கொண்டே போனான்.

பையைத் துழாவினேன். மிஞ்சிக் கிடந்தது ஒரு இரண்டணா...இரண்டு காலணாக்கள்...

"ஸ்டிராங்காக ஒரு காபி."

எதிரே தெருவில் கைலாசம் ஓட்டமும் நடையுமாக அந்த நேரத்தில் எங்கோ சென்றுகொண்டிருந்தது நன்றாகத் தெரிந்தது. அவனைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்புதான் வந்தது.

கைலாசத்திற்கும் கிட்டத்தட்ட என் வயதுதானிருக்கும். அதிகபட்சமாக வைத்துக்கொண்டாலும் முப்பத்தைந்துக்கு மேலிராது.

நான் உதவி ஆசிரியர் வேலை பார்க்கும் அதே 'சூர்யோதயம்' பத்திரிகாலயத்தில்தான் அவனும் கம்பாஸிடராக வேலை பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனுக்கும் திருமணமாகி ஏழெட்டு வருஷங்கள்தானிருக்கும். நான்கு குழந்தைகள். என்னைப் பொறுத்தமட்டில்தானென்ன? அதே விகிதந்தான்!

ஆனால் வாழ்வை அனுபவிக்கும் விதத்தில்தான் அவனுக்கும் எனக்கும் எவ்வளவு வித்தியாசம்!

தினமும் காலையில் ஆபீஸ் வரும்பொழுதே அழாக் குறையாகத்தான் வருவான். அவன் சிரித்துப் பார்ப்பதே துர்லபம்! நாளைக்கு ஒரு பிரச்னையாகக் கூறி அங்கலாய்ப்பான். வீட்டுப்பிரச்னை, விருந்தினர் பிரச்னை, பிள்ளைகள் பிரச்னை, மனைவியின் பிரசவப் பிரச்னை...

உலகத்தில் கிட்டத்தட்ட எல்லா மனிதர்களுமே, நாளுக்கு நாலாயிரம்பிரச்னைகளைத் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு

நடமாடுவதாக...அப்படித்தானே நினைக்கிறீர்கள்!

நான் எழுதுகிற கதைகளிலுங்கூட அப்படிப்பட்ட பாத்திரங்கள் நடமாடுவதுண்டு. ஆனால் என்னைப் பொறுத்த வரையில்...

எனக்கே விந்தையாகத்தானிருந்தது.

கல்லூரிப் படிப்பை அரைகுறையாக நிறுத்திவிட்டு 'சூர்யோதயம்' பத்திரிகையில் உதவி ஆசிரியராக மாதம் நூறு ரூபாய் சம்பளத்தில் வேலைக்கமர்ந்தேன்.

சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த என் மாமா, தான் அருமையாக வளர்த்த தங்கச் சிலையைத் தயங்காமல் தாரை வார்த்துக் கொடுத்தார்.

புது வாழ்வு தொடங்கியது—

நான் மட்டும் வாழவில்லையா? சுந்தர், சுரேஷ், சீதா, மாலா எல்லோரும் நான் தங்கத்துடன் வாழ்ந்த வாழ்வின் சாட்சிகள்தானே!

ஒவ்வொரு மாதமும் இரண்டாந் தேதி ஹோட்டல்களுக்கு, வெற்றிலைப் பாக்குக் கடைகளுக்குக் கொடுப்பதுபோக பாக்கி எழுபது ரூபாயை அவளிடம் கொடுப்பேன்.

அவள் எனக்கு எந்தப் பிரச்னையையுமே விட்டு வைப்பதில்லை.

காலையில் ஒன்பது மணிக்குத்தான் படுக்கையிலிருந்து எழுந்திருப்பேன். கிணற்றடியில் பல் துலக்க பிரஷ், தவலையில் வென்னீர் எல்லாம் தயாராகயிருக்கும். ஸ்நானத்திற்குப்பின் பானம். பத்து மணிக்கு சாப்பாடு. கையில் டிபன்.

திரும்ப, இராத்திரி ஒன்பது மணிக்குத்தான் வீட்டில் அடி வைப்பேன்.

இப்படித்தான் ஓடிக்கொண்டிருந்தது எனது தினசரி வாழ்க்கை.

கதையில் வருகிற மனைவிகூட சினிமா பார்க்க வேண்டுமென்று முரண்டு செய்வாள். மாங்காய் மாலை வாங்கித் தர வேண்டுமென்று சாகஸம் செய்வாள். ஜவுளிக் கடையிலிருக்கும் பீரோவை வீட்டிற்குக் கொண்டுவந்துவிடவேண்டுமென்று பிடிவாதம் பிடிப்பாள்.

ஆனால், அபலைப் பெண் தங்கம் இது வரையில் என்னிடம் எதையும் வாய் திறந்துகூடக் கேட்டதில்லை.

பாவம்! எழுத்தாளனுக்கு வாழ்க்கைப் பட்ட பாபத்திற்காக தன்னை சர்வபரித்தியாகம் செய்துகொண்டுவிட்ட பேதை!

அவளுக்கு ஆதாரம், ஆதர்சம் எல்லாம் நான்தான்! சில சமயங்களில் நான் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது உருக்கமாகக் கூறுவாள், "நான், பணத்திற்காக சொல்கிறேனே என்று நினைத்துவிடாதீர்கள். நீங்கள் கட்டில்லாமல் காபி குடிப்பதுமட்டும் எனக்குப் பிடிக்கவேயில்லை...நீங்கள் எவ்வளவு இளைத்துப் போயிருக்கிறீர்கள் தெரியுமா?" என்று.

நானோ அலட்சியமாகச் சிரித்துவிட்டுப் பதில்கூடப் கூறாமல் எழுந்துவிடுவேன்.

அவள்...அவளைப்பற்றி நினைத்த பொழுது என் மனதில் என்றுமில்லாத ஒரு அனுதாபம் சுரந்தது. அபலைப் பெண் தங்கம், அவளுடன் நான் நடத்தும் விசித்திரமான வாழ்க்கை—அவற்றை நினைத்தபொழுது என்னையறியாமலே சிரித்துவிட்டேன்.

"என்ன சார் சிரிக்கிறீங்க? காபி ஆறிப்போகிறதே!"—சர்வர் கேட்டான்.

அப்பொழுதுதான் எனக்கு உணர்வு வந்தது. "ஒன்றுமில்லை" என்று முனகிய படியே ஆறிப்போய்விட்ட காபியை 'மடமட'வென்று ஒரே மூச்சில் குடித்துத் தீர்த்துவிட்டு எழுந்தேன்.

வீட்டை நெருங்கியபொழுது தூற்றல் பலத்துவிட்டது. வாசலை நெருங்கினேன். இதயம் 'படபட'த்தது. கதவைத் தட்டக் கூட எனக்குத் திராணியில்லை—தங்கத்தின் முகத்தில் எப்படி விழிப்பது?

கதவின்மேல் கையை வைத்தேன். கதவு திறந்துகொண்டது.

நான் வந்துவிடுவேன், வந்து விடுவேன் என்று வழிமேல் விழி வைத்துக்கொண்டு கதவைக்கூடத் தாழிடாமல் அப்படியே உறங்கிவிட்டாள் போலிருக்கிறது. அந்த நினைவு தோன்றியதுமே என்னால் தாள முடியவில்லை.

ஓசைப்படாமல் கதவைத் தாழிட்டேன்.

உள்ளே—

கூடத்தில் 'முணுக் முணுக்'கென்று விளக்கு எரிந்துகொண்டிருந்தது. கால் மாடு தலைமாடாகக் குழந்தைகள் படுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கப்பால் அவள் படுத்துறங்கிக்கொண்டிருந்தாள்.

பூனைபோல் ஓசைப்படாமல் அடியெடுத்து வைத்தேன். பாயைச் சுருட்டி எடுத்துக்கொண்டு வந்து தாழ்வாரத்தில் விரித்துப் போட்டுக்கொண்டு படுத்தேன்.

படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தேன். தூக்கம் துணைவர மறுத்தது.

மத்தியானம் இரண்டு மணிக்கு டிபன் சாப்பிட்ட பிறகு...இரவு பத்து மணிக்குக் காஷாயம்போல் காபியைக் கண்ட வயிறு, 'கடபுடா'வென்று கிளர்ச்சி செய்துகொண்டிருந்தது.

எவ்வளவு நேரம் அந்த அவஸ்தை நிலையில் புரண்டு படுத்தேனென்று எனக்குத் தெரியாது...

கடிகாரம் ஒரு முறை ஒலித்துவிட்டு ஓய்ந்தது. இரவு மணி ஒன்று. வயிற்றுப் பசி லேசாக அவிந்து போய்விட்டது.

படுக்கையிலிருந்து மெல்ல எழுந்தேன். கால்கள் பின்ன, கூடத்தை நோக்கி நடந்தேன்.

அவளுக்கருகில் வந்ததும் சற்று நேரம் நின்றேன்...நிம்மதியற்ற நெஞ்சத்துடன்.

மங்கலான விளக்கொளியில்...மலர்க் கொடிபோலத் துவண்டு கிடந்தாள் அவள்...

அவளது தளிர்க் கரத்தைத் தொட்டேன். அது தகித்தது. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரையில் மின் வேகத்தில் ஒரு பரபரப்புணர்ச்சி பாய்ந்தோட... அவளது பஞ்சுக் கன்னத்தை விரல்களால் வருடினேன்...

"என்ன. கண்ணீர்க்குளமா?"..— நான் திடுக்கிட்டேன்.

கடமையுணர்வு தெரியாத கணவனுக்காக எவ்வளவு நேரம் கண்ணீர் வடித்தாளோ!

—

பிரசித்திபெற்ற

நீபா

- ஹேர் ஆயில்
- டாய்லட் சோப்
- பிரில்லியன்டைன்
- ஸ்நோ
- ஊதுபத்திகள்

நறுமணத்திற்கு மறுபெயர்

கங்கா ஒர்க்ஸ், அடையார், மதராஸ்-20

ஆபீஸ் ஸ்தாபிதம்: 1924

பிரபல ஜோதிஷர்

மஹாராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூபா 2. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்

தபோநிதி

தியாகராய நகர், மதராஸ்-17

தபால் பெட்டி 1417

என்னுடைய ஸ்பரிசம் பட்டு அவள் உறக்கம் கலைந்துவிட்டது.

"எப்பொழுது வந்தீர்கள்?"—அவசரம் அவசரமாக ஆடைகளைச் சரி செய்து கொண்டு எழுந்தாள்...

நான் விளக்கைத் தாண்டினேன்.

"நீங்கள் சாப்பிட்டுவிட்டீர்களா?"

"ஊம்"—குற்றவாளியைப்போல் தலையைக் கவிழ்த்துக்கொண்டே வாயசைத்தேன்.

"இன்று சாயந்திரமே, அரிசி வாங்கிக் கொண்டு வரச் சொன்னேனே...வாங்கி வந்து விட்டீர்களா?"

"அந்தப் பணத்தில்தான் சினிமா பார்த்துவிட்டு வந்தேன்"—இந்த பதிலையா கூறுவது? நான் மௌனம் சாதித்தேன்.

"நீ சாப்பிட்டுவிட்டாயா?"—கேட்க வாயெடுத்தேன். கேட்பதில் என்ன அர்த்தம்?

"தங்கம்...உடம்புக்கென்ன?" —என் நாக்குழறியது.

"ஒன்றுமில்லை..நாலு மாசம்"—வெளிறிப்போயிருந்த அவளது முகத்தில் கீறலிட்டது வறண்ட சிரிப்பு.

அவள் முகத்தைப் பார்த்தேன்...என் உடல் குலுங்கியது... இயந்திரம் என்று நினைத்திருந்த அந்த உடல், எலும்பும் தசையும் சேர்ந்த மனித பிண்டந்தான் என்ற உணர்வு தைத்தவுடன் . . . ஒரு கணம் குலுங்கியது.

திருமணக்கோலத்தில் – பருவத்தின் பூரிப்பும் வாளிப்பும், பொன்சிரிப்பு பொழியத் தங்கச் சிலைபோலிருந்த அவள் மேனி...

வனப்பு மங்கி, கண்கள் ஒளி குன்றி, எலும்புந்தோலுமாய் என் முன்னாலிருந்த நிலையை அப்பொழுதுதான் நான் பார்த்தேன்.

"சாயந்திரத்திலிருந்து இருதயத்தில் ஒரே வலி...ஒரு மாதமாகவே இந்த உபத்திரவந்தான்...இருந்தாலும் இன்று ரொம்ப அதிகம். பிரக்ஞையில்லாமல் அயர்ந்துபோய்விட்டேன்..."

"தங்கம்...நீ ஏன் இதுவரையில் என்னிடம் சொல்லவேயில்லை?"—என் குரல் தழதழத்தது, வாழ்விலேயே முதன் முறையாக.

அதற்குப் பதில் ஒரு வரண்ட சிரிப்புதான்! "நம்முடைய அந்தஸ்துக்கேற்ற மாதிரி..."

கட்டு மீறிக் கண்களிலிருந்து 'பொலபொல'வென்று கண்ணீர் உதிர்ந்தது. உணர்ச்சி வசப்பட்டு 'ஓ'வென்று அலறிவிட்டேன்.

நான் அழுததை அவளால் பொறுக்க முடியவில்லை. "ஏன் இப்படி மனதைத் தளர விடுகிறீர்கள்? நீங்கள் என்ன செய்து விட்டீர்கள்? எதற்காக அழ வேண்டும்?"...என் கண்களைத் துடைத்தாள் அவள். எனக்காக அவள் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தாள்...

"நான்..நான்."

சிறு குழந்தையை அணைத்துக் கொள்வதுபோல் என்னை அணைத்துக்கொண்டாள் அவள். "தெய்வீக புருஷராக நான் உங்களை வரித்தேன். அந்த நாளிலிருந்து உங்கள் நிழலில் வாழ்வதில் எவ்வளவு இன்பம் கண்டிருக்கிறேன், தெரியுமா? என்னைப்போல் பாக்யசாலி யாருமே யிருக்க முடியாது என்கிற நினைப்புதான் எனக்கு..எப்பொழுதும்."

"தங்கம்...நீ பத்தரை மாற்றுத் தங்கம், கண்ணே..."

வெளியே 'சோவென்று' மழை பொழிந்துகொண்டிருந்தது. கரு மேகங்களின் பயங்கர யுத்தம் ஓயவில்லை...

மறு நாள் காலையில் எழுந்ததும், ஜன்னல் வழியாக வானத்தைப் பார்த்தேன். மழை ஓய்ந்து தூவானமும் விட்டிருந்தது. கதிரவன் தன் பவனியைத் தொடங்கிவிட்டான்.

என் உள்ளத்திலுங்கூட...அப்படித்தான் புயலும் மழையும்ஓய்ந்து தூவானம் விட்டிருப்பதாக நினைத்தேன்.

உள்ளே...மாலா அழுதுகொண்டிருந்தாள். "அம்மா காப்பி" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தான் சுரேஷ்.

"அப்பா எழுந்துட்டாளா, பாருடா கண்ணு" என்று ஈனஸ்வரத்தில் குரல் ஒலித்தது.

குழந்தைகள் என்னிடம் வரும் வரையில் காத்திருக்கவில்லை. நேராக அடுக்களைக்குள் விரைந்தேன். தங்கம் நடமாடிக்கொண்டிருந்தாள், கால் பாவாத நிலையில், போதை ஏறியிருப்பவள் போல. எந்த நிமிஷத்தில் கீழே விழுந்து விடுவாளோ?

"நீ பேசாமல் போய் படுத்துக்கோ, தங்கம், நான் பாத்துக்கறேன்" என்றேன் உணர்ச்சி உந்திய உரத்த குரலில்.

அவளுக்கு ஏற்பட்டது அதிர்ச்சியா, ஆச்சரியமா? விளைவு என்னமோ ஒன்றுதானிருந்தது. புன்முறுவல் தவழும் முகத்துடன் சாய்ந்துவிட்டாள் தங்கம். ஒரே தாவலில் விரைந்து, அவளைத் தாங்கினேன். அணைத்தபடி தூக்கி வந்து கூடத்தில் படுக்கையில் கிடத்தினேன். அவள் முகத்திலிருந்து பிரமை அகலவில்லை.

அவசரமாக, காரியாலயத்திற்குக் கடிதம் எழுதினேன் ரஜா கோரி. மூத்த பையனிடம் கொடுத்து, பக்கத்துத் தெருவிலிருக்கும் நண்பரிடம் சேர்க்கச் சொன்னேன்.

தங்கத்தின் மோன நிலை கலைந்தது. "உள்ளே பாருங்கள்; அடுப்பில் கறி தீய்ந்து போகிற நாற்றம்" என்றாள்.

தங்கம் என்னைப் புரிந்துகொண்டு விட்டாள் என்ற நம்பிக்கையில் மிதந்து, மன நிம்மதியுடன் உள்ளே சென்றேன்.

மோகமுள்

தி. ஜானகிராமன்

மறு நாள் ஞாயிற்றுக்கிழமை. விடுமுறையைப் பயன்படுத்திக்கொண்டு எங்கெங்கோ அலைந்தான் பாபு. பள்ளிக்கூடம் பள்ளிக்கூடமாக ஏறி ஏறி இறங்கினான். அனாதைகளுக்கும் அவதிப்பட்டோருக்கும் பள்ளிக்கூடங்களும், விடுதிகளும் நடத்தும் சமூக சேவகிகளின் ஆபீசுக்கும், வீடுகளுக்கும் போய் வந்தான். அவர்களைப் பார்ப்பதே கஷ்டமாயிருந்தது. பார்ப்பதற்காகப் போன ஐந்து பேர்களில் மூவர் வீட்டில் இல்லை. ஆபீசிலும் இல்லை. டில்லிக்கு சமூக சேவகிகளின் காரியக் கமிட்டிக் கூட்டத்துக்குப் போயிருந்தார் ஒரு சேவகி. ஓய்வுக்காகத் திருக்குற்றாலம் போயிருந்தார் இன்னொருவர். மூன்றாவது சேவகி உடம்பைப் பரிசோதித்துக்கொள்ள ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தாராம். உடம்பு ஒன்றுமில்லை. பொதுவாகச் சோர்வும் களைப்புமாக இருந்ததால், ஆஸ்பத்திரியில் போய்க் காண்பித்தபோது, டாக்டர் எல்லாவற்றையும் சோதித்துப் பார்ப்பது நல்லது, ஒரு வாரம் இருக்கலாம் என்று சொன்னதன் பேரில் அங்கேயே தங்கிவிட்டாளாம். ஒரு வாரம் கழித்துப் போனால்தான் அவரைப் பார்க்க முடியும் என்றும் அவருடைய காரியதரிசி சொன்னாள். இரண்டு பேரைத்தான் பார்க்க முடிந்தது.

"அம்மா இருக்காங்களா?"

"தூங்கறாங்களே."

"ஹ்ம்...எப்ப எழுந்திருப்பாங்க?"

"நாலு மணியாகுங்க."

பாபுவுக்கு மணியைக் கேட்டதும் நாலு மைல் நடந்தாற்போலாகிவிட்டது.

"எழுந்துட்டாங்களா, போய்ப் பாரேன்."

"இல்லீங்களே, இப்பதானே போனாங்க."

"இப்பதானா?"

"ஆமாம், அஞ்சு நிமிஷமாச்சுங்க."

"அப்படின்னா அதுக்குள்ளியுமா தூங்கியிருப்பாங்க?"

"தூங்கறதுக்காகப் போயிடுவாங்க. அப்ப போய் யாரும் எதுவும் சொல்லக் கூடாது. 'போன்' வந்தாக்கூட சமாச்சாரத்தைக் கேட்டு வச்சுக்கிட்டு அப்பறம்தான் சொல்லணும். போய்ப் பார்க்கக் கூடாது. சரியா நாலு மணி அடிக்கிறப்போ, கப்புலே டீயை வச்சுட்டுப் போகணும். அப்படியே சாஞ்சாப்பலே குடிச்சுட்டு, அப்பறம் எழுந்து வருவாங்க."

"எங்க தூங்குவாங்க?"

"வீட்டிலே."

"இங்க இல்லியா? வீடு எங்கே இருக்கு"

"இங்க இல்லீங்க."

"வீடு இங்கேதாங்க. அதோ இருக்கு பாருங்க."

"நான் அங்கே போய்ப் பாத்துக்கறேனே."

"போகக் கூடாதுங்க. ஏம்பா உட்டேன்னு என்னை சண்டை புடிப்பாங்க."

"ரொம்ப அவசரம்பா, போய்ச் சொல்லேன். தூங்கறாங்களா, இல்லியோ. இதுவரைக்கும் படுக்காம இருந்தா, ரண்டே நிமிஷம், பாத்திட்டுப் போயிடறேன்."

"பார்க்க மாட்டாங்க சார். டயம்னா டயம்தாங்க அவங்களுக்கு. அதுக்கப்பாலே எப்படியாப்பட்டவங்க வந்தாலும் பாக்க மாட்டாங்க."

ஆபீஸ் சாவியை வைத்துக்கொண்டே பேசிக்கொண்டிருந்தான் அந்த ஆள். அவன் நிற்பதைப் பார்த்தால் அறையைப் பூட்டிக்கொண்டு போகப் போகிற மாதிரி இருந்தது. பார்த்த பார்வையும் 'சொல்லிக்கிட்டேயிருக்கேன், ஏன் சும்மா இங்கேயே நின்னுக்கிட்டிருங்க?' என்று கேட்பதுபோலிருந்தது.

"அப்ப நான் காத்துக்கிட்டிருக்கலாமா இங்கே?" என்றான் பாபு.

"இருங்க. மூணு மணி நேரம் காத்திருக்கணுமே. முடிஞ்சா உட்கார்ந்திருங்க. நான் சாப்பாட்டுக்குப் போறேன்."

மறுபடியும் பாபு யோசிப்பதைப் பார்த்து நின்றான் அவன்.

மத்யான்னம் மூன்று மணி நேரம் தூங்குகிற சமூக சேவகியை நினைத்து என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான் பாபு. குழம்பிப் போய் உட்கார்ந்திருந்தான். பகல் வேளையில் மூன்று மணி நேரம் ஏன் தூங்க வேண்டும்?

"அப்ப நான் வரட்டுங்களா?"

"ம்?"

"இருக்கிறதுன்னு சொல்லுங்க. நான் சாப்பிட்டு வந்திர்றேன், ஒரு மணி நேரத்திலே."

"எனக்கு ஒண்ணும் புரியலே."

"அப்ப ஒண்ணு செய்யுங்களேன். ஏதாவது வேலையிருந்தாக்க பாத்திட்டு நாலு மணி, நாலரை மணிக்கு இப்படி வாங்க. நாலரைமணிக்கப்பறம் வந்தீங்கன்னு பாக்க முடியாது. அம்மா வெளியிலே புறப்பட்டிருவாங்க."

"சரி, அப்படியே செய்யறேன்" என்று முடித்தான் பாபு.

மெதுவாக என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டே வெளியே வந்ததும் ஒரு அம்மாள் வந்தாள். அறையில் நுழைந்தாள்.

"யாரைப் பார்க்கவேண்டும்?" என்று கேட்டாள்.

"இந்த ஸ்தாபனத்தின் தலைவியை."

"நான்தான் அது."

"நமஸ்காரம்."

"நமஸ்காரம். என்ன?"

"நீங்கள் தூங்கப் போய்விட்டீர்கள். இனிமேல் நாலு மணிக்குத்தான் பார்க்க முடியும் என்று தெரிந்துகொண்டேன். மன்னிக்க வேண்டும்."

"ஆமாம், நானும் சாப்பிட்டுவிட்டுத் தூங்கத்தான் போனேன். ஆனால் ஒரு கடிதாசியை மறந்துவிட்டேன். எடுப்பதற்காக வந்தேன்."

"அப்படியானால்..."

"ஏன், உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் நான்?"

"இங்கு ஹாஸ்டல் இருக்கிறதா?"

"இருக்கிறது."

"ஒரு பெண்ணைச் சேர்க்கவேண்டும்."

"உங்களுக்குச் சொந்தமா?"

"இல்லை, தெரிந்தவர்கள்."

"படித்துக்கொண்டிருக்கிறாளா?"

"படிக்கப்போகிறாள்"

"எந்த வகுப்பு?"

"ஆறாவது வகுப்பு."

"வயசு என்ன ஆகிறது?"

"நாற்பது வயசு."

"நாற்பது வயசா? ஆறாவது வகுப்பா?"

"ஆமாம். கலியாணமாகவில்லை. நல்ல செல்வ நிலையில் இருந்து ஏழைகளாகி விட்டார்கள். இப்போது படித்துப் பிழைக்கவேண்டும்."

"கலியாணம் செய்து கொள்ளவில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"ஆகவில்லை. முயன்று பார்த்தார்கள். நடக்கவில்லை. கலப்பு மணத்தின் விளைவு. ஊர், அவள் கலியாணத்தைத் தடை செய்துகொண்டே வந்தது."

"தெரியும்—தெரியும்."

தொடர் நாவல்

"ரொம்ப நல்ல பெண்."

"ம்."

"சொத்தும், சாப்பிட்டுச் சாப்பிட்டு கரைந்துவிட்டது. உறவினர்களுக்குச் செய்து செய்து கரைந்துவிட்டது. உறவினர்கள் இப்போது திரும்பிப் பார்க்க மாட்டேன் என்கிறார்கள்."

"வாஸ்தவம், வாஸ்தவம்."

"மிகவும் அடக்கமான பெண். நல்ல பெண்."

"அதுதான் இப்போது இடையூறாகி விட்டது."

"என்ன?"

"நாங்கள் விதவைகளையும், தவறிப் போனவர்களையும்தான் சேர்த்துக்கொள்கிறோம். நீங்க சொல்வதைப் பார்த்தால் ரொம்ப கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள் அவள் என்று தெரிகிறது."

"ஆமாம்."

"மன்னிக்கவேண்டும். இங்கு சேர்த்துக் கொள்ள முடியாது."

"கௌரவமானவர்களுக்கு இங்கு இடமில்லையா?"

"கௌரவம் இல்லாதவர்களை கௌரவமாகச் செய்யும் இடம் இது. அதனால் தான் சொல்லுகிறேன்."

"நான் காலையில் எட்டு மணிக்குப் புறப்பட்டேன். பஸ்ஸிலும் நடந்தும் அலைகிறேன். லக்ஷ்மம்மா டில்லிக்குப் போயிருக்கிறாராம். ஜகதாம்பா குத்தாலம் போயிருக்கிறாராம். மாலதி ஆஸ்பத்திரியில் இருக்கிறாராம்."

"ஆஸ்பத்திரியிலா?"

"உடம்புக்கு ஒன்றுமில்லையாம். ஜெனரல் 'செக் -அப்'பாம்."

"ஓ."

"நாலாவதாக உங்களைப் பார்க்க வந்தேன். நீங்களும் இப்படிச் சொல்லிவிட்டீர்கள்."

"எனக்கும் வருத்தமாகத்தானிருக்கிறது."

"வேறு வழியே இல்லையா?"

"பத்மாசனியைப் போய்ப் பாருங்களேன்."

"யார் அது?"

"அவர் ஒரு அனாதாசிரமத்துக்கு நிர்வாகியாக இருக்கிறார். அவர் விலாசம் இதுதான்" என்று ஒரு கடுதாசியில் எழுதிக் கொடுத்தாள். "இவரைப் போய் பாருங்கள். உங்களுக்கு ஏதாவது செய்வார். நான் சொன்னேன் என்று சொல்லாதீர்கள்."

"சொல்லவில்லை."

"அங்கேயும் கூட்டமாகத்தானிருக்கிறதாம். நீங்கள் அந்தப் பொம்மனாட்டியை கூட அழைத்துப் போங்கள். பார்த்தால் ஏதாவது செய்வார்."

"எப்போது பார்க்கலாம்?"

"எப்போதும் பார்க்கலாம்."

"அங்கேயும் இடமில்லாவிட்டால்?"

"அவரே ஏதாவது வழி சொல்லுவார்"

"ரொம்ப வந்தனம் உங்களுக்கு. உங்கள் நேரத்தை வீணாக்கிவிட்டேன்."

"அதெல்லாம் ஒன்றுமில்லை.. ஆனால், நல்ல வேளையாக நான் திரும்பி வந்தேன். நீங்கள் காத்திருக்கும் அவசியமில்லாமல் போய்விட்டது."

"ஆமாம். என் அதிருஷ்டம்தான் . . நான் வரட்டுமா?"

"வாருங்கள், நமஸ்காரம்."

"நமஸ்காரம்."

"பத்மாசனியிடம் மட்டும் நான் சொன்னதாகச் சொல்ல வேண்டாம்."

"ஞாபகமிருக்கிறது. நான் சொல்லுவேனா?"

"எதற்காகச் சொல்கிறேன் என்றால் காரியம் கெட்டுவிடும்."

"அப்படியா? அப்படியானால் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கிறேன். நான் வரட்டுமா?"

"வாருங்கள்."

சாலைக்கு வந்ததும் வெய்யில் தோலை உரித்தது. தார் ரோட்டில் கானல் அலை அலையாக நெளிந்தது. ஒதுப்புறமான இடம். பெரிய மனிதர்கள் வாழ்கிற இடம். பஸ்ஸுக்கு இரண்டு பர்லாங் நடந்தாக வேண்டும். அங்கும் அரை மணிக்கு ஒரு வண்டிதான் வருமாம். பசி வேற கிண்டுகிறது. ஒன்றரை மணிக்கு மேல் எந்த ஹோட்டலில் சாப்பாடு இருக்கப் போகிறது? இரண்டு பர்லாங் நடந்து பஸ் ஸ்டாப்புக்கு வந்ததும், பஸ்ஸுக்குக் காத்துக்கொண்டிருந்த ஒருவர் ஹோட்டல் ஒரு பர்லாங்கில் இருப்பதாக எங்கோ கையைக் காண்பித்தார். அந்த திசைப் பக்கம் நடந்து ஈ ஓட்டிக்கொண்டிருந்த ஒரு ஹோட்டலில் புகுந்தான்.

"யாரு?"

"நான்தான், பாபு."

"வா பாபு.. அவங்க வந்திருக்காங்க பாட்டி."

"நான்தான் பாட்டி."

"காலமேயே வரேன்னீங்களே."

"காலமே போனேன். அவர் வேற ரண்டு பேரைப் பார்க்கச் சொன்னார். அப்புறம் அவங்களைப் போய்ப் பார்த்தேன். அவங்க வேற யாரையோ பாருன்னாங்க. பத்மாசனி அம்மாளாம். அவங்களைப் போய்ப் பார்க்கணும். காலமே எட்டு மணிக்கு கிளம்பினது."

"சாப்பிட்டீங்களா?"

"ஆச்சு."

"மறுபடியும் போகணுமா?"

"ஆமாம். யமுனாவை அழச்சிட்டுப் போகணும்."

"எங்கேயிருக்காங்க?"

"திருவல்லிக்கேணியிலே."

"உங்க பேட்டையில்தானா?"

"ஆமாம்."

"காபிக்கெல்லாம் காத்திருக்க வாண்டாம். நாலு மணிக்குள்ள போய்ப் பார்த்தாத்தான் உண்டு. இன்னிக்கு ஞாயிற்றுக்கிழமை. எங்கியாவது போயிட்டாங்கன்னா?"

"இப்ப மணி என்ன?"

"ரண்டு நாற்பது."

"நல்ல வெய்யிலா இருக்கே."

"வெய்யிலைப் பார்த்து முடியுமா?"

"அப்ப யமுனா, புடவையை மாத்திக்கிட்டு கிளம்பு."

யமுனா கால் மணிக்குள் கிளம்பிவிட்டாள். வெளியில் வரும்போது மெதுவாகக் கேட்டான் அவன்.

"ஏன் யமுனா, அதே புடவையைக் கட்டிக்கிண்டு வறியே."

"ஏன், இது நன்னாயில்லியா?"

"நன்னாயில்லேன்னு சொல்லலே."

"அப்பறம் என்ன?"

விடுதலை வேடிக்கை!

வித்யாபதி தாகூர் என்ற பிரபல ஹிந்தி கவிஞர், சண்டிதாஸ் ஜெய்தேவ் காலத்தியவர். ராஜா ஸிப்சிங்கின் ஆதரவில் இருந்தவர்.

ஒரு சமயம் வித்யாபதி தாகூர் தம்முடைய ஆதரவாளரான ஸிப்ஸிங்கை, முகலாய மன்னனிடமிருந்து விடுதலை பெற்ற சந்தர்ப்பத்தில் நிகழ்ந்த சம்பவம் வேடிக்கையானது.

முகலாய மன்னன் வித்யாபதியை ஒரு பெரிய மரப் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டான். பிறகு, பல அரண்மனை ஸ்திரீகளை ஆற்றில் நீராடி வரும்படி ஏற்பாடு செய்தான். எல்லாம் முடிந்ததும், வித்யாபதியை இடையில் நிகழ்ந்ததைக் கூறும்படிக் கேட்டான் மன்னன்.

உடனே அவர் ஒரு அழகிய மங்கை நீராடும் காட்சியை, பதினைந்து வரிகளில் ஒரு கவிதையாகப் பாடி முடித்தார்! ஸிப்சிங்கும் விடுதலை பெற்றார்!

—கே.

பாராயண புத்தகங்கள்

கந்தர் கலிவெண்பா (2 அணா) சரஸ்வதி அந்தாதி (2 அணா) அபிராமி அந்தாதி) (2 அணா) கந்தரனுபூதி 2 அணா) திருமுருகாற்றுப்படை (3 அணா) நால்வர் நான்மணி மாலை (2 அணா) விநாயகர் அகவல் (2 அணா) லக்ஷ்மி ஸ்தோத்ரம் (2 அணா) ஆனந்தலஹரி (2 அணா) சௌந்தர்ய லஹரி (2 அணா) விஷ்ணு சஹஸ்ர நாமம் (6 அணா) லக்ஷ்மி சஹஸ்ரநாமம் (6 அணா) லலிதா சஹஸ்ரநாமம் (8 அணா) வெங்கடேச சஹஸ்ர நாமம் (6 அணா) ராம சஹஸ்ரநாமம் (6 அணா சுப்ரமணிய சஹஸ்ரநாமம் (6 அணா) கிருஷ்ண ஸஹஸ்ரமநாமம் (6 அணா) லக்ஷ்மி நிருஸிம்ம சஹஸ்ரநாமம் (6 அணா) குமரேச சதகம் 5 அணா) கோவிந்த சதகம் (3 அணா) அறப்பளீசுர சதகம் (5 அணா) திருவேங்கடசதகம் (5 அணா) தண்டலையார் சதகம் (3 அணா) திருவருட்பா (8 அணா) திருப்புகழ் 2 அணா) தாயுமானவர் பாடல் (4 அணா பட்டினத்தார் பாடல் (4 அணா தேவாரத் திருமுறைகள் (12 அணா)

நீதி நூல்கள்

நாலடியார் (6 அணா) நீதிநெறி விளக்கம் (2 அணா) ஆசாரக் கோவை (4 அணா வாக்குண்டாம் (2 அணா) கொன்றைவேந்தன் (2 அணா) வெற்றிவேற்கை (2 அணா) நலவழி (2 அணா) நன்னெறி (2 அணா) திருக்குறள் பாக்கெட சைஸ்) 8 அணா; திருக்குறள் சுருக்கம் (மூலமும் உரையும் 8 அணா; திருக்குறள் பரிமேலழகர் உரை-பாக்கெட சைஸ்) ரு 4.

வாவில்ள

ராமஸ்வாமி சாஸ்த்ருலு & ஸன்ஸ்,

(P.B. 1372) 292, எஸ்பிளனேட் சென்னை-1.

புரசைவாக்கத்தில் ஒரு செருப்புக் கடையில் ஒரு ஜோடி செருப்பு வாங்கிக் கொடுத்து பஸ் ஸ்டாண்டுக்கு வந்தான் அவன்.

பஸ்ஸும் வந்தவுடன் கிடைத்து விட்டது.

பத்மாசனி அம்மாள் நல்ல வேளையாகத் தூங்கவில்லையாம். ஹாலில் உட்காரச் சொல்லிவிட்டு ஒரு பெண் உள்ளே போயிற்று. சற்றுக் கழித்து அறுபது வயதிருக்கும், ஒரு அம்மாள் வந்தாள்.

“நமஸ்காரம்.”

“நமஸ்காரம். யாரு?”

“நீங்கள் தானே ஜான்ஸி ஆச்ரமத்தின்...”

“நிர்வாகி. ஆமாம். உங்களுக்கு என்ன வேண்டும்?”

“இந்த அம்மாளைச் சேர்க்கவேண்டும்.”

“இந்த அம்மாளையா!”

“ஆமாம்.”

“ரொம்ப வயசாயிருக்கும் போலிருக்கே...என்னம்மா வயது?”

“நாற்பது.”

பாபு பழைய பல்லவியை மீண்டும் பாடினான். நல்ல வசதியாக இருந்து, உறவினர்களுக்குச் செய்து க்ஷீணித்துப் போய், சமயத்தில் அவர்கள் கை கொடுக்காமல், பசிக்கு ஆளாகி...

“உங்களுக்கு எப்படித் தெரியும்?”

“எங்களுக்கு ஐம்பது வருஷமாக குடும்ப நண்பர்கள்.”

“நீங்கள் என்ன செய்கிறீர்கள்?”

“ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனியில் பொது உறவு இலாகா அதிகாரிக்கு அடுத்தவனாக இருக்கிறேன்.”

“உங்கள் கம்பெனியிலேயே பார்க்கப்படாதோ?”

“பார்க்கலாம். படிப்பு இல்லை.”

“இத்தனை வயசுக்கு மேல் நாங்கள் படிப்புக்குச் சேர்ப்பதில்லையே. முப்பது வயசுக்குள் என்று வைத்துக்கொண்டிருக்கிறோம்.”

பாபு காலையிலிருந்து அலைந்ததையெல்லாம் சொன்னான்—மூன்று மணி தூங்குகிற அம்மாளை மாத்திரம் விட்டுவிட்டு.

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்டாள் பத்மாசனி அம்மாள்.

“உடம்பு இப்படியிருக்கே.”

“ஆமாம். என்ன செய்கிறது. மூன்று மாசமாக சாப்பாடே பிரச்னையாகி விட்டது அவளுக்கு.”

“ரொம்ப பரிதாபப்படவேண்டிய கேஸ் தான். உட்காரம்மா. ஏன் நிற்கிறாய்? உட்கார், பாதகமில்லை.”

“உட்கார் யமுனா.”

யமுனாவையே ஏற இறங்கப் பார்த்துக் கொண்டிருந்தாள் பத்மாசனி அம்மாள். பிறகு ஆங்கிலத்தில் ஆரம்பித்தாள்.

“கலியாணமாகவில்லையா?”

“இல்லை” என்று மீண்டும் யமுனாவுக்கு கலியாணமாகாத காரணத்தை எல்லாம் சொன்னான் பாபு.

“நம் சமூகம் சீரழிந்துதான் கிடக்கிறது. அதற்கு நான் எத்தனை பேரைத் தான் எடுத்துக் காப்பாற்றமுடியும்? இந்த மாதிரி விஷயத்திற்குப் பணம் கேட்டால் பத்து கொடுக்கிறவர்களுக்கு ரண்டு ரூபாய் தான் கைக்கு வருகிறது. அதைக் கொடுக்கும் போதும் நம் தலையில் யாரையாவது கட்டிவிடுகிறார்கள். நீங்கள் வித்யாசமாக நினைத்துக் கொள்ளவேண்டாம். இது மிகவும் பரிதாபத்திற்குரிய கேஸ்தான். நான் என்னால் ஆனதைச் செய்கிறேன். ஆட்சேபணையில்லை. இவருடைய தோற்றம் என்னை நடுங்கச் செய்கிறது. நல்ல அழகியாக ஒரு காலத்தில் இருந்திருப்பாள் இவள்.”

“ஆமாம்.”

“இவ்வளவு அழகாக இருந்தவருக்கு ஏன் கலியாணம் ஆகவில்லை.”

“அதுதான் எனக்கும் புரியவில்லை. ஜாதி ஜாதியென்று இவள் கலியாணத்திற்கு குறுக்கே நின்றது இவள் ஜாதி.”

“இந்த அழகை எதிர்த்துக்கூடவா?”

“அதுதான் எனக்குப் புரியவில்லை என்றேன். ஒரு அளவுக்கு இவளையும் காரணமாகத்தான் சொல்லவேண்டும்.”

“ஆ! அப்படிச் சொல்லுங்கள்.” என்றாள் பத்மாசனி.

“ஆமாம் அம்மா. வந்த பிள்ளைகளைத் தனக்குப் பிடிக்கவில்லை என்று தட்டிக் கொண்டு வந்தாள். கடைசியில் கலியாணம் பண்ணிக்கொள்ளாத மனைவியாக இருக்கமுடியுமா என்று யாரோ ஒரு தனவந்தர் கேட்டாராம்.”

“அதற்கு என்ன சொன்னாள் இவள்?”

“மறுத்துவிட்டாள்.”

“இப்போது அனுபவிக்க வேண்டியிருக்கிறது. நல்ல வழியில் போகத்தான் முடியாது, இந்த உலகத்தில். எனக்குப் புரிகிறது. ஆனால் எனக்கு ஒரே ஒரு திருப்தி. ஆச்சரியம்கூட. இங்கு வருவதெல்லாம் அநேகமாக நாகரிக மனிதர்கள் கேட்கக் கூச்சப்படவேண்டிய சேர்க்கைகளின் விளைவுகளாகத்தான் இருக்

கிற வழக்கம். இந்த மாதிரி அநேகமாக வருவதில்லை. என்னுடைய ஆயுஸிலேயே இது ஆறாவது அல்லது ஏழாவது கேஸாக இருக்கலாம். ஞாபகப்படுத்திப் பார்த்தால்" என்று பழைய நினைவுகளை சூன்யத்தில் அவள் விழிகள் துருவிப் பார்த்தன. "ஆமாம், இது ஏழாவது கேஸ் தான். இவ்வளவு நாள் ஒழுங்காக இருக்கிறதே கஷ்டம்தான். ஒழுங்காக இருந்தாள் என்றால் ஆச்சரியப்படத்தான் வேண்டியிருக்கிறது."

யமுனாவைப் பார்த்ததுமே அவளுக்குப் பிடித்துவிட்டது போலிருக்கிறது. அவளையே கனிவும் கேள்விக்குறியுமாக மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

"நீங்களும் நல்ல பதவியிலிருக்கிறீர்கள். நீங்கள் சொல்வதை நான் நம்பத்தான் வேண்டும்."

"எதை?"

"இவள் கண்ணியமானவள் என்பதை."

"நீங்கள் புதிது. நான் புதிது. நான் எப்படிச் சொல்வதென்று எனக்குப் புரியவில்லை."

"நான் சொல்லவேண்டியதை நீங்கள் சொல்கிறீர்கள். ஆமாம். எனக்கு உங்களைத் தெரியாது. திடீர் என்று வந்திருக்கிறீர்கள். நான் மனசைத் திறந்து என் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வது நல்லது தானே."

"தாராளமாகக் கேளுங்கள். நான் சொல்லுகிறேன்."

"மனிதர்களைப் பார்த்தாலும் எனக்கும் புரியும். அதிலும் சில வருஷ அனுபவம் உண்டு எனக்கு. ஆனால் நாம் மனிதர்கள் தானே. நினைத்ததற்கு மாறாக சில சமயம் நடந்து விடுவதும் உண்டு. அதனால் நான் முன்னாலேயே ஜாக்ரதை பண்ணிக்கொள்ள வேண்டியிருக்கிறது."

"நீங்கள் தாராளமாகக் கேட்கலாம். எதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களோ அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஆனால் என் வார்த்தைகளைத்தான் நீங்கள் நம்பவேண்டும். நான் புதிது. எனக்கு வேறு தெரிந்தவர்கள் இல்லை. உங்களுக்கும் எனக்கும் தெரிந்த ஒரு மனிதரை அறிமுகப்படுத்திக்கொண்டு சிபார்சு கொண்டு வர எனக்கு நேரமில்லை. இவள் இரண்டு நாள் முன் வந்தாள். தங்கள் உறவினரோடு தங்கியிருக்கிறாள். எத்தனை நாள் அங்கு தங்கமுடியும்? சிபார்சு தேட எனக்கு நேரமில்லை. நேராகவே கேட்கலாமே என்று அழைத்து வந்து விட்டேன்."

"தகுதியுள்ளவர்கள், கஷ்டப்படுகிறவர்களுக்கு சிபார்சு இல்லாமல் ஒன்றும் நடக்கவில்லை என்று தெரியும் எனக்கு. ஆனால் நீங்கள் நேராக வந்ததும் எனக்கு சந்தோஷம்தான்."

பாபுவுக்கு நம்பிக்கை வந்தது. பத்மாசனிக்கு யமுனாவைப் பிடித்துவிட்டது. அவள் மேலும் சொன்னாள்:

"ஆனால் ஒரு விஷயம். எனக்குச் சொல்லத் தயக்கமாயிருக்கிறது. நீங்கள் அதை விரும்பமாட்டீர்கள்."

"என்ன?"

"நான் இவளைப் படிப்புக்குச் சேர்த்துக்கொள்ள முடியாது. வயதாகி விட்டது."

"அப்படியானால்?"

"இங்கு ஏதாவது வேலை பார்க்கட்டும்."

"என்ன வேலை?"

"அவளுக்கும் படிப்பு இல்லை என்கிறீர்கள். நல்ல வேலையாக ஒன்றும் கொடுக்கமுடியாது. ஏதாவது அட்டெண்டர் மாதிரி வேலையிருக்கும். ஆபீஸ் வேலையிருக்கும். குழந்தைகளைக் கவனிக்க வேண்டியிருக்கும். இன்னதென்று சொல்லமுடியாது. உண்மையில் இந்த மாதிரி எனக்கு உதவி செய்ய ஒருவர் வேண்டும். இங்கு பெரிய பெண்களும் படிக்கிறார்கள். ஒன்றிரண்டு தட்டித் தவறாக நடக்கிறது உண்டு. அதையெல்லாம் கண்காணிக்க வேண்டும். இந்த மாதிரி ஒரு பொம்மனாட்டி எனக்கு வேண்டும். சாப்பாடு போடுகிறோம். வாரத்தில் ஒரு நாள் லீவு கொடுக்கிறோம் இவளுக்கு. கட்டாயம் அந்த லீவு கொடுக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் இவள் இருந்த நிலையை நினைத்துச் சொல்கிறேன். ஒரு நாள் வாரத்தில் விடுமுறை மாதிரி கொடுக்கிறேன். உங்கள் வீட்டுக்கோ, உறவினர் வீட்டுக்கோ போய் வரலாம்."

"நான் தனியாகத் தானிருக்கிறேன்."

"அப்படியானால் உறவினர் வீட்டுக்குப் போகலாம் அவள். அவள் இஷ்டப்பட்டால்தான். போக வேண்டும் என்று இல்லை. வேலைசெய்து கொண்டே ஓழிந்த வேளைகளில் படிப்பு ஏதாவது சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன். சம்மதமானால் கேட்டுச் சொல்லுங்கள்."

பேச்சு ஆங்கிலத்தில் நடந்து கொண்டிருந்தது. யமுனா இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"என்ன யமுனா? இங்கு படிக்க குறிப்பிட்ட வயசுக்குள்ளிருந்தால் தான் சேர்ப்பார்களாம். ஏதாவது அட்டெண்டர் மாதிரி வேலை செய்வதானால் செய்

ஹிந்தி சிறுகதை மன்னன்

ஸ்ரீ பிரேம்சந்தை ஹிந்தி சிறுகதை மன்னன் எனக் கூறலாம். இவர் எழுதிய நாவல்களில் சில தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. சுமார் 250 சிறுகதைகள் இவர் எழுதியுள்ளார். இவருடைய உண்மைப் பெயர் தன்பத்ராய் என்பது. இவர் பி. ஏ. பட்டம் பெற்றவர். உத்தியோகத்திலிருந்தவாறே சிறுகதைகள் எழுதி வந்தார். 'ரங்பூமி' என்ற கதையே என் கதைகள் எல்லாவற்றைக் காட்டிலும் எனக்குப் பிடித்திருக்கிறது எனக் கூறியிருக்கிறார்.

—கே.

யட்டும் என்கிறார்கள். சாப்பாடு போடுவார்களாம். சம்பளம் கிடையாது."

"வேலை நன்றாகச் செய்தால் சம்பளத்தைப்பற்றி அப்புறம் யோசிப்போம்" என்று குறுக்கிட்டாள் பத்மாசனி.

"வாரத்திற்கு ஒரு நாள் லீவு உண்டு. நீ புரசைவாக்கத்திற்கோ வேறு உறவினர் வீட்டுக்கோ போய் வரலாம். கட்டாயம் போக வேண்டும் என்று இல்லை. இஷ்டமிருந்தால் போகலாம்."

"இல்லையானால் இங்கேயே தங்கலாம். அந்த ஒரு நாள் லீவில் படிப்பு கிடிப்பு சொல்லிக்கொள்ள நேரம் இருக்கும்" என்று மீண்டும் குறுக்கிட்டாள் பத்மாசனி.

"உனக்கு இஷ்டமா என்று கேட்கிறார்கள் அம்மாள். எனக்கு நல்லது என்றே தோன்றுகிறது."

"அப்புறம் என்னை ஏன் கேட்கவேண்டும்?"

"இல்லேம்மா. நீயும் அப்புறம் வேலை செய்யச் சொல்ற இடமாக் கொண்டு தள்ளிப்பிட்டாரேன்னு வருத்தப்படக் கூடாது பாரு. நல்லா வசதியாயிருந்தவ நீ. ஏதோ காலக் கோளாறு இப்படி ஆயிடுத்து. இல்லாத போயிட்டோம். நீ நாலு ஆளை வச்சு அதைச் செய் இதைச் செய்யின்னு எஜமானியாயிருந்து வேலை வாங்கினவளாயிருக்கலாம். அப்படியெல்லாம் இருந்துப்பிட்டு இன்னொருத்தர் அங்கபோ இங்கபோன்னு சொல்லும்படியா ஆயிட்டுதேன்னு நினைக்கலாமோல்லியோ?... அதுக்காகத்தான் உன் சம்மதத்தைக் கேட்கச் சொல்லச் சொன்னேன்."

"எனக்கு அதெல்லாம் கிடையாதும்மா. வசதியாயிருந்தது உண்டு. அதுக்காக அதை நினைச்சுக்கிட்டே உக்காந்திருக்க முடியுமா?"

"அப்படின்னா உனக்கு இஷ்டம் தானே?"

"இஷ்டம்தான்."

"இஞ்ச சாப்பாட்டுக்குக் குறைவிராது. காசு கையிலே புழங்காது. வேணும்னா இவர் கொடுத்தா நீ வாங்கி வச்சுக்கலாம். நாங்க கொடுக்கறதுக்கு இல்லே."

"சாப்பாடு ஆயிடுத்துன்னா காசு என்னத்துக்கு?"

உத்தரவாதத்துடன்
சுத்தமான
மரவெட்டி எண்ணெய்
CHAULMOOGRA OIL
வேண்டுவோர் கீழ்க்காணும்
விலாசத்திற்கு எழுதவும்.
★
M. C. கனகரெத்தினம் பிள்ளை,
போஸ்ட் பாக்ஸ் No. 21,
கான்வென்ட் ரோட்,
கொல்லம். (Quilon)
T. C. State.

"உலகம் தெரியாதவளா இருக்கியேம்மா. புடவை, எண்ணெய், காபி, சலவை இதுக்கெல்லாம் என்ன செய்யறது? இஞ்ச காபிக்கு தனியா வாங்கிப்பிடுவோம். காபி குடிக்காம சில பேருக்கு தலைவலி வரும், வாந்தி எடுக்கும். அதுக்காக போட்டுக் கொடுக்கறது தான். ஆனால் அதுக்குத் தனியா பணம் கொடுத்துடணும்பாங்க மானேஜ்மெண்டிலே."

"அதெல்லாம் நான் பாத்துக்கலாமா?" என்று கேட்டான் பாபு.

"பேஷாக. நான் தடை சொல்லவில்லை. உண்மையில் காசு புழங்குவதைக்கூட நான் விரும்பவில்லை. ஆனால் இது ஒரு தனிக் கேஸாகக் கருதத் தயார் நான். திடீர்னு வம்ச வம்சமா வந்த பழக்கங்களை நிறுத்த முடியாதுன்னு எனக்குத்தெரியும். அதனால்தான் நீங்கள் கொடுத்து உதவி செய்வதை நான் வாண்டாம்னு சொல்லவில்லை."

"ரொம்ப நன்றி."

"உனக்கு இஷ்டம்தானேம்மா?"

"என்னை வெறுமே கேட்கறீங்களே. நான் என்னதைச் சொல்லப் போறேன்? முன்னே பின்னே தெரியாம வந்து நின்னவளை நீங்க ஏத்துக்கிட்டதே பெரிசு."

"பெரிசு என்னம்மா? என் கடமையைச் செய்யறேன்."

"எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது" என்றான் பாபு.

"என்ன?"

"நான் காலையிலிருந்து அலைகிறேன். வீடு வீடாக ஏறி இறங்குகிறேன். இப்படி சட்டென்று என் எண்ணம் கைகூடும் என்று நான் எதிர் பார்க்கவில்லை. நீங்கள் சாதாரண மனுஷியில்லை. இந்த உலகத்தில் இந்த மாதிரி கருணையைப் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு வந்தவர்களுக்கெல்லாம் பரிமாறுகிறவர்களை நான் கண்டதில்லை. காணவும் போவதில்லை."

"நீங்கள் அதிகமாகச் சொல்ல வேண்டாம். இது கடமை. செய்கிறேன். அப்படி மிகைப் படுத்தவும் இங்கு தகுதியில்லை. கருணையிருக்கிறது. ஆனால் நீங்கள் சொன்னாற்போல வந்தவர்களுக்கெல்லாம் பரிமாறும்படியாக பாத்திரத்தில் இல்லை. ரொம்ப கொஞ்சம். கருணையிருந்தால் போதுமா? பொதுமக்கள் ஆதரவு வேண்டாமா? இங்கு என்னமோ உதவாக்கரைகளுக்காக ஊர்ப் பணத்தை வாரி யிறைத்துக்கொண்டிருக்கிறோம் என்று பொறுப்புள்ளவர்கள்கூட நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இருக்கலாம். தவறிப்போனவர்கள் இருக்கலாம். திருத்த முடியாதவர்களும் இருக்கலாம். பெண்களெல்லாம் அருந்ததிகள் இல்லை. புருஷர்கள் எல்லோரும் ஜனகர்கள் இல்லை. புத்தர்கள் இல்லை. தவறிக் கொண்டுதான் இருக்கிறார்கள் பல பேர். திருத்த முடியாதவர்களை விட்டு விடுவோம். என்னிடம் உள்ள பலரில் கூட திரும்பியும் தெருவுக்குப் போக விரும்புகிறவர்கள்கூட இருக்கலாம். அதை விட்டுவிடுங்கள். இப்போது இவள் வந்திருக்கிறாள். என்னத்தைச் சொல்கிறது? பார்க்கிறவர்கள் இவளுடைய பழைய நிலை இப்படி இப்படி என்று இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்க்கப் போகிறார்களா என்ன? பொதுவாக இப்படி ஒரு அனுதாபமின்மை சிந்தித்துப் பார்க்க மறுக்கும் பிடிவாதம், அறியாமை எல்லாம் இருக்கும்போது, நான் அகப்பையால் அள்ளி அள்ளிக் கொடுக்கும்படியாக பாத்திரத்தில் எங்கு இருக்கப் போகிறது?...தினம் தினம் போராட்டம் தான்."

"நான் வேண்டுமானால் ஒன்று செய்கிறேனே."

"என்ன?"

"யமுனாவுக்கு நீங்கள் இலவசமாகச் சாப்பாடு போட வேண்டாம். பணம் கொடுத்துவிடுகிறேன்."

"ரொம்ப நன்றாயிருக்கிறதே. அதற்கு இங்கு வருவானேன்?"

"இல்லை. வேலை செய்கிற திருப்தி அவளுக்கு இருக்கட்டும்."

"வேண்டாம். சம்பளம்தான் கொடுக்க முடியவில்லை. சாப்பாடுகூட போட முடியாது என்று தோன்றவில்லை எனக்கு. நீங்கள்தான் எத்தனை காலம் கொடுக்க முடியும். உங்களுக்கும் குடும்பச் செலவெல்லாம் இல்லையா?"

"தற்போதைக்கு இல்லை. ஊரில் அப்பா அம்மா இருக்கிறார்கள். அவர்களுக்கு பணம் அனுப்பி வருகிறேன். எனக்கும் கண்டு கொஞ்சம் மீறும்."

"அதை அவள் சாப்பாட்டிற்குக் கொடுக்க வேண்டாம். கைச்செலவுக்கு வேண்டுமானால் கொடுங்கள். மன்னிக்க வேண்டும். நீங்கள் நல்ல ஹிருதயமுள்ளவர் என்ற தைரியத்தில் கேட்கிறேன். உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா?"

"இல்லை."

"அப்படியானால் உங்கள் மனைவி வரும்போது கொஞ்சம் வேண்டியிருக்கும். எவ்வளவோ எதிர்பாராத செலவுகள் வரும். ஆதலால் மிச்சம் வைத்துக் கொள்ளுங்கள்."

பாபு சிரித்தான்.

"இவள் கைச் செலவுக்கு ஏதாவது கொடுத்து வந்தால் போதும்... மேலும் வேலையும் செய்துகொண்டு சாப்பாட்டுக்கும் கொடுக்கிறாள் இந்த மாதிரி ஒரு ஏழை என்றால், நாலு பேர் சிரிப்பார்கள்... இன்னொன்று, சாப்பாட்டுக்கும் பணம் கொடுத்து, சும்மாவாவது வேலையும் செய்துகொண்டிருப்பவர்கள் மீது எனக்கு எப்படிப் பிடிப்பு வரும்?..." என்று சிரித்தாள் பத்மாசனி. "நான் எஜமானி இல்லையா? அப்படிச் சொல்லிக் கொள்ள எனக்கு ஏதாவது இடம் வையுங்களேன்... உங்கள் முகத்தைப் பார்த்தால் பிடிவாதம் செய்வீர்கள் போலிருக்கிறது. என் அதிகாரத்துக்கும் கொஞ்சம் இடம் கொடுங்கள்."

பாபுவுக்கு உள்ளம் நெகிழ்ந்தது. இந்த உலகத்தில் எவ்வளவு நல்ல மனிதர்கள் இருக்கிறார்கள்! எங்கோ மூலை முடுக்குகளில் எல்லாம் நல்லது ஒளி வீசிக் கொண்டுதானிருக்கிறது.

பேச முடியாமல் சற்று மௌனமாக இருந்துவிட்டு, "சரி, உங்களிஷ்டம்" என்றான் கடைசியில்.

"இந்தாருங்கள், இந்தக் கடுதாசியில் ஒரு மனு மாதிரி எழுதிக் கொடுங்கள். இவள் பெயர், பழைய நிலை, புதிய நிலை எல்லாவற்றையும் விவரமாக எழுதிக் கொடுங்கள். இவளுடைய நல்ல நடத்தைக்கு உத்தரவாதி என்று எழுதிக் கொடுங்கள்... இதெல்லாம் எதற்காக என்றால், நாளைக்கு ஒரு சமயம் இவளைப் பிடிக்கவில்லை என்றால் தெருவில் நிற்க விட முடியாது. மறுபடியும் உங்களிடம் தான் அனுப்புவோம்."

"அது ஒருக்காலும் நேராது."

"நேராது என்றுதான் நான் நினைக்கிறேன்."

"எதற்காக நேரவேண்டும்? நம்முடைய வேலையை நேர்மையாக, கண்டிப்பாக, மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல் செய்யும்போது நமக்கு ஒரு நாளும் குறைவு வராது."

பாபு எழுதிக் கொடுத்தான். பத்மாசனி மூக்குக் கண்ணாடியை எடுத்துப் போட்டுக்கொண்டு அதை வாசித்தாள்.

"ரொம்ப சரி. அப்ப.. நீ என்னைக்கிம்மா வரே?"

"எப்ப வரச் சொன்னாலும் வரேன்."

"நாளைக்கே வந்தாலும் வரலாம். பிரசிடெண்டிடம் ஒரு வார்த்தை சொல்லி விடுகிறேன். தினமும் காலையில் வருவாங்க அவங்க. எப்ப இஷ்டமோ அப்ப வரலாம் நீ.. நாளைக்குத்தான் வாயேன்"

"வரேன்."

"உறவுக்காரா இன்னும் இரண்டு நாள் இருக்கச் சொல்லுவாளோ" என்றான் பாபு.

"சொன்னாலும் சொல்லிவிட்டு வந்துடலாம்."

"சரி. அப்ப நாளைக்கு காலமே வந்துவிடு."

நம் நாட்டின் நகரங்களிலும் கிராமங்களிலும் எல்லோராலும் விரும்பப்பட்டு அதிக விற்பனையாவது T. A. S. ரத்தினம் பட்டணம் பொடி. அதிக விற்பனையே உயர் குணத்துக்கு அத்தாட்சியான பொது மக்களின் தீர்ப்பு அல்லவா?

T.A.S ரத்தினம் பட்டணம் பொடி

தபால் பெட்டி 1151, சென்னை - 21

"பதினோரு மணிக்கு முன்னால் வந்துடும்மா. அப்பதான் ப்ரெஸிடெண்ட் அம்மா வர சமயம்."

"வரேன்."

"எனக்கு என்ன சொல்கிறதென்று தெரியவில்லை.. நினைத்து நினைத்துப் பார்க்கிறேன். என்னால் நம்ப முடியவில்லை. நீங்கள் எவ்வளவு பெரிய மனசுள்ளவர்கள்."

"தேவையே இல்லை. முடிந்ததைச் செய்கிறோம். நன்றி கூற நீங்கள் எதற்காக இப்படித் தவிக்க வேண்டும்?..."

"வரட்டுமா?"

"வரேம்மா."

"வரம்மா. இங்கே வந்தா நிம்மதிக்குக் குறைச்சலிராது. கண்டிப்பும், தைரியமும், உண்மையும் இருக்கணும்... இது மாத்திரம் இருந்தாப் போதும்... போய்ட்டு வாம்மா."

"நான் அப்புறம் வந்து பார்க்கிறேன்" என்றான் பாபு.

"எதற்கு? நன்றி கூறவா?... வேண்டாம். நீங்கள் வருவதை வேண்டாம் என்று சொல்லவில்லை. நன்றி கூறுவதற்காக வரத் தேவையில்லை.. உங்கள் பெயரென்ன?"

"பாபு."

"ஓ, ஆமாம். அதான் கையெழுத்துப் போட்டிருக்கேனே? ரொம்ப சின்னப் பேரா இருக்கே. ஆள் என்னமோ பெரியவாரத்தான் இருக்கேள்."

பாபு சிரித்துக்கொண்டே யமுனாவுடன் வெளியே வந்தான்.

அவனுக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை. நம்பவும் முடியவில்லை. எவ்வளவு சுருக்கில் காரியம் முடிந்துவிட்டது. நமக்கு இந்த மாதிரி நேர்கிற வழக்கமே இல்லையே. எதை எடுத்தாலும் இடைஞ்சல், தாமதம் எல்லாம் முன்னாலே வந்து நிற்குமே. யமுனா இதற்குக் காரணமாக இருக்கவேண்டும். அவளைக் கண்டதும்தான் பத்மாசனியின் மனம் கருணை வழிய நிரம்பியிருக்க வேண்டும். நாமும் தான் காலையிலிருந்து அலைகிறோம். இவளை அழைத்துக்கொண்டு போன பிறகுதான், இந்த அருள் முகத்தை பத்மாசனி கண்டவுடன்தான் எண்ணம் கனியாகக் கனிந்தது.

பைக்ராப்ட்ஸ் ரோடில் ஒரு கடையில் கடிகாரம் ஐந்து இருபத்தைந்து காட்டிற்று. எதிர்த்த ஹோட்டலில் பாதாம் ஹல்வா போட்டிருப்பார்கள்.

"யமுனா, வெற்றியைக் கொண்டாடித் தீர்த்து விடுவோம் வா" என்று உள்ளே நுழைந்தான் பாபு.

ஃ ஃ ஃ

பரீட்சை ஹாலுக்கு எதிரேயுள்ள பீச்சு மணலை அடையும்போது ஆறே காலாகிவிட்டது.

ஞாயிற்றுக்கிழமை. கூட்டம் அதிகமாக இராத இந்தப் பகுதியில்கூட கும்பல்கள் அதிகமாகவே அமர்ந்திருந்தன. பெரிய சுறுமீன் ஒன்றைப் பிடித்து வந்திருந்தார்கள் பரதவர்கள். அங்கு ஏகக் கூட்டம்.

அலை துள்ளித் துள்ளி விழுந்தது.

பாபுவுக்கு உற்சாகம் கரை புரண்டு விழுந்தது. மாங்காய் தேங்காய் பட்டாணி சுண்டல், வேர்க்கடலை, பட்டாணி, நெய் முறுக்கு முந்திரிப்பருப்பு வறுவல்—எது வந்தாலும் மறுக்காமல் வாங்கி வாங்கிப் போட்டுக்கொண்டான்.

"என்ன இன்னிக்கு? மத்யானம் சாப்பிடலையா?"

"இல்லை யமுனா. மத்யானம் சாப்பிடத்தான் இல்லை."

"சாப்பிடலையா? அப்படின்னா சொல்லக் கூடாது?"

"சொல்றது என்ன? எதோ நாழியாயிடுத்து. சாப்பாடு இல்லை. காரணம் அது இல்லை. வேலைக்கு அலை அலைன்னு அலைஞ்சுப்பிட்டு, கடைசியில் ஒண்ணும் பலிக்காம, நீ திரும்பிப் போயிடுவியோன்னு பயந்திண்டிருந்தேன். அது இல்லைன்னு ஆயிடுத்து."

"ரொம்ப நல்லவங்க அந்த அம்மா."

"நல்லவங்கன்னு சொன்னாப் போதுமா? கோயில் கட்டணும்."

"எனக்கு தழதழத்துப் போச்சு அவங்க பேசறதைக் கேட்கறப்போ. ரொம்ப இளகின மனசு. அதோட கண்டிப்பு, திறந்த மனசு..எல்லாம்."

"இவங்களையும் மயக்கிப்பிட்டே நீ"

"நான் மயக்கினேன். நான் சாமர்த்தியசாலியாக இருந்தா ஏன் மூணு மாசம் பட்டினி கிடக்கணும்?"

"சாமர்த்தியசாலி இல்லைதான். ஒத்துக்கறேன். உன்னுடைய நேர்மைதான் அவளைப் பயமுறுத்தி விட்டதோ என்னமோ."

"ஏதோ, எதாயிருந்தா என்ன? பாபு ஏத்தி வச்ச விளக்கு இது. நாளையிலேர்ந்து ஜான்ஸி ஆச்ரமத்து ஆளாப் போயிடப் போறேன்."

"வாரம் ஒரு நாள் லீவு இருக்கு."

"அதை நான் மறக்கலையே."

"நான் வந்துதான் பார்க்கணுமா? நீ வருவியா?"

"உன் இஷ்டம்."

"நீதான் வாயேன். இது நம்ம ஊர் மாதிரி வம்பளக்கிற ஊர் இல்லை."

"வரேன், அப்பமன்னா."

"ஞாயித்துக்கிழமை காலமே வந்தால் நல்லது."

"வரேன்."

விளக்குகள் எரிந்தன. இருட்டிவிட்டது.

"அறையைப் பார்த்துவிட்டுப் போறயா?" என்றான் பாபு.

"சரி."

வெங்கட்டரங்கம் பிள்ளைத் தெருவை நோக்கி இருவரும் நடந்தார்கள். வீட்டுக்காரர்களிடம் அவளை அறிமுகப்படுத்திவிட்டு அறைக்கு அழைத்துச் சென்று பார்த்துவிட்டு, இறங்கினான் பாபு.

ஜவுளிக் கடையில் இரண்டு புடவைகள், ஒரு ஜமக்காளம், தலையணை, போர்வை, ஒரு டம்ளர், கண்ணாடி, சீப்பு – எல்லாவற்றையும் வாங்கிக் கொடுத்தான்.

புரசைவாக்கத்தில் இதையெல்லாம் பார்த்ததும் பாட்டிக்கு எப்படியிருந்ததோ. "இதையெல்லாம்கூட நீங்க வாங்கிக் கொடுக்கணுமா? நாங்க பாத்துக்க மாட்டோமா?" என்று பட்டதும் படாததுமாகச் சொல்லி வைத்தாள் "நாளைக்கு பதினோரு மணிக்குள்ளாக போகணுமா?"

"ஆமாம்."

"எங்கேயிருக்கு இடம்."

"டவுன்லே" என்று விலாசத்தைக் கொடுத்து பாபு மேலும் சொன்னான். "பாட்டி, நாளைக்கு ஆபீசு உண்டு. உங்க பிள்ளையை பத்து மணி சுமாருக்கு அழைச்சிக்கிட்டுப் போகச் சொல்லுங்க. நான் மத்யானம் அங்கே போய்ப் பாத்துக்கிறேன்."

"உங்களுக்கு என்னமாப் போக முடியும்.. பையனை அழைச்சிக்கிட்டுப் போகச் சொல்றேன். நீங்க கவலைப்படாதீங்க."

கிழவி விசித்திரமாகப் பிடிவாதம் செய்யவே, அங்கேயே சாப்பிட்டுவிட்டு விடை பெற்றுக்கொண்டான் பாபு.

பஸ்ஸில் வரும்போது பெரிய காரியத்தைச் சாதித்துவிட்ட பெருமை நெஞ்சை லேசாக்கியிருந்தது. அலைக்கழிக்காமல் உதவிசெய்த பத்மாசனியை நினைத்தும் நன்றி நிறைந்த உள்ளத்தில், எதிர்பாராத சுருக்கில் காரியம் கைகூடிய வியப்பும் பளிச்சிட்டது.

ராஜம், சாம்பன் அப்பா, எல்லோருக்கும் பதில் போட்டு விடுவது என்ற தீர்மானத்துடன் மேஜை முன் உட்கார்ந்து கொண்டான்.

(தொடரும்.)

அசோகா ப்ளவர் ஆப் ஹெவன் டால்கம் பௌடர் & ஸ்னோ

அழகு வசீகரம், நறுமணத்திற்கு இதமானது: உங்கள் மேனி புதுமைப் பொலிவுடன் எழிலுடன் திகழ முதல்தரமான, புதிய மூலப்பொருள்கள் சேர்த்து சாஸ்திரீயமாகத் தயாரிக்கப்படுகிறது. ப்ளவர் ஆப் ஹெவன் டால்க் மற்றும் ஸ்னோ உபயோகித்து உங்கள் சருமத்தை பாதுகாருங்கள்.

விஜயா கெமிகல்ஸ் - மதராஸ்-7.

மதுரைக்கு வினியோகஸ்தர்கள்:
M/s. நாகா நாவெல்டீஸ்,
நெ 3, தானப்ப முதலி தெரு, மதுரை

ஹாஸ்யமே உலகம்!
அவள்:—அழகான ஆண் பிள்ளைகளுக்கே கர்வம் ஜாஸ்தி.
அவன்:—எனக்கு ஒன்றும் இல்லை.
கிழவர்:—நீ யோக்யன்தான். ஆனல், நான் பத்து ருபாய் நோட்டுன்னு தொலைச்சேன்; பத்து ஒரு ருபாய் நோட்டு இல்லையே.
பையன்:—தெரியும் ஸார்; போன தடவை நான் கொண்டுபோய் கொடுத்த மனுஷரிடம் சில்லரையே இல்லை.
மூதாட்டி:—ஸ்கூலில் இருக்க வேண்டிய நேரத்திலே, சினிமாவில் என்ன பண்ணறே.
பையன்:—இன்னிக்கி எனக்கு ஜுரம்.
"எதிரான இயல்புடையவர்களின் மண வாழ்க்கைதான் இன்ப மயமாயிருக்குமாம்"
"அதற்காகத்தான் பணக்காரப்பெண்ணாக பார்த்துக் கொண்டிருக்கிறேன்"
மனைவி:—என்ன சப்தம்... திருடன்போலிருக்கே... முழிச்சிண்டிருக்கேளா?
கணவன்:—இல்லையே.
யாத்ரீகர்:—இங்கே பெரிய மனுஷா யாராவது பிறந்திருக்கிறாகளா?
கிராம வாசி:—கிடையாது! குழந்தைகள்தான் இந்த ஊரில் பிறக்கிறது வழக்கம்.

சாரணர் உலகம்

சென்ற கட்டுரையில் கொடியேற்றும் கம்பை இரண்டு விதமாகத் தயாரிக்கலாமென அறிந்தீர்கள். கொடியின் முக்யத்தைப்பற்றியும் படித்திருப்பீர்கள். கொடியின் முக்யத்தைப்பற்றி சாரணர்களுக்கு நன்கு தெரியும். ஆதலால் அவர்கள் கொடிக்கு ஏதும் ஏற்படாமல் பாதுகாப்பார்கள். ராணுவத்தினர் கொடிக்கு எவ்வளவு மரியாதை செலுத்துவரோ அவ்வளவு மரியாதை சாரணர்களும் செலுத்துவார்கள்.

இந்த இரண்டாவது முறையில் எப்படி கொடியேற்றும் கம்பை தயாரிப்பது. இது முன் கூறிய முறையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் கொஞ்சம் கஷ்டமாகயிருக்கும். மேலும் பயிற்சியும் அதிகம் வேண்டும். ஆனால் சாரணர்கள் இம்முறையைத்தான் அதிகமாக உபயோகிப்பார்கள். ஏன்! சாரணர்களுக்கு எதிலும் நல்ல பயிற்சி பெற்று அதில் திறனைப் பெற வேண்டுமென்ற ஆசையுண்டு. ஆதலால்தான் இந்த முறையை அடிக்கடி பின்பற்றி பயிற்சி பெறுவார்கள். மேலும் தாங்கள் கற்றதை மறக்காமலிருக்க பயிற்சி உதவும். இந்த முறையிலும் பல முடிச்சுகள் வரும். அவைகளைத் திரும்பச் செய்வதால் அதில் தேர்ச்சியுண்டாகுமே தவிர வேறு எதுவும் ஏற்படாது.

இந்த முறையிலும் ஒரே கம்பு நல்ல உயரமானதாக அகப்பட்டால் உபயோகிக்கலாம். ஆனால் இவ்வாறு எங்கும் எந்த சமயத்திலும் அகப்படும் என்று சொல்லமுடியாது. சாரணர்கள் வெளியில் செல்லும் பொழுது தங்கள் கையில் கம்பையும் எடுத்துச் செல்வார்களல்லவா? இதை அவர்கள் எந்த சமயத்திலும் உபயோகிக்கலாம். எப்பொழுதும் வேண்டியதற்கு மேலாகவே கம்புகளைச் சாரணர்கள் எடுத்துச் செல்வர். இவ்வாறு செய்வது சில சமயங்களில் எதிர்பாராத சில சந்தர்ப்பங்களிலும் இது உபயோகப்படும். ஆகவே இங்கு நாம் சாரணர்கள் தங்கள் கம்பு கொண்டு இம்முறையில் தயாரிப்பதாக வைத்துக்கொள்வோம். எப்படித் தயாரிப்பது? இதுதான் நமக்குத் தெரிய வேண்டியதல்லவா?

முதலில் எங்கு கொடியேற்றுவது என்பதை நிச்சயிக்கவேண்டும். இடத்தைப் பொறுக்கும் பொழுது தரையில் 'பெக்' செல்லுமா என்பதை கவனிக்க வேண்டும். பாறையிருந்தால் 'பெக்' உள் செல்லாது. நமக்கும் இம்முறையை அனுஷ்டிக்க முடியாமல் போய்விடும். தளர்ந்த மண்ணுயிருந்தால் 'பெக்' உறுதியாக நிற்காது. ஆதலால் சரியான தரையாகப் பார்த்து பொறுக்கவேண்டும்.

இதன் பின்னர் ஒரு வட்டம் வரைந்து கொள்ள வேண்டும். வட்டத்தில் 'ரேடியஸ்' இருப்பது எல்லோருக்கும் தெரியும். அதாவது வட்டத்தின் ஒரு மத்தியிலிருந்து வட்டத்தின் ஏதாவது ஒரு பாகத்திற்கு கோடு இழுத்தால், அதுதான் ரேடியஸ்.

இதன் பிறகு வட்டத்தில் ஏதாவது ஒரு இடத்தை பொறுக்கிக் கொள்ளுங்கள். இங்கு ஒரு இரும்பு அல்லது கூராக்கிய கம்பை பூமிக்குள் செலுத்துங்கள். இதிலிருந்து 'ரேடியஸ்' திட்டத்திற்கு மற்றொரு இடத்தை குறித்துக் கொள்ளுங்கள். அந்தக் குறித்த இடத்திலிருந்து மறுபடியும் 'ரேடியஸ்' திட்டத்திற்கு குறித்துக்கொள்ளுங்கள். இங்கு ஒரு 'பெக்'கை பூமிக்குள் செலுத்துங்கள்.

சித்தார்த்தன்

இதேபோல் மறுபடியும் ஒரு குறிப்பை விட்டு மற்றொரு குறிப்பில் இன்றுமொரு 'பெக்'கை பூமிக்குள் செலுத்துங்கள். இதை நன்கு புரிந்துக்கொள்ள படம் 1ஐப் பாருங்கள்.

ஏ—பி. ரேடியஸ். X குறியிட்ட இடங்களில் 'பெக்' வரும்.

இதன் பிறகு ஒரே கம்பாகயிருந்தால் வெகு சுலபமாக முடித்துவிடலாம். சாரணர்களாகிய நாம் நம்முடைய கம்புகளைக்கொண்டு தயாரிப்பதாக வைத்துக் கொள்வோம். நமக்கு ஆறு அல்லது ஏழு சாரணக் கம்புகள் அவசியம். நல்ல வலுவாக இருக்க வேண்டுமானால் ஏழு அவசியம். ஏழு இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். எப்படித் தயாரிப்பது?

முதலில் நல்ல தடியானதும், உறுதியானதுமான மூன்று கம்புகளைப் பொறுக்கி எடுத்துக்கொள்ளுங்கள். அவைகளைச் சேர்த்து இரு முனைகளிலும் கட்ட வேண்டும். இங்கு 'ஷியர் லாஷிங்கு' உபயோகப்படுத்தவேண்டும். இவைகளைத் தவிர நடு மத்தியிலும் ஒரு 'லாஷிங்' போடுவது நல்லது. இது இன்னும் உறுதியைக் கொடுக்கும்.

இதன் பிறகு இன்னும் இரு கம்புகளைப் பொறுக்கிக்கொள்ளுங்கள். இவைகள் இரண்டையும் 'ஷியர் லாஷிங்' போட்டு சேர்த்துக் கட்டுங்கள். இவ்வாறு கட்டின கம்புகளை முதல் மூன்றுடன் சேர்த்துக் கட்டவேண்டும். இதைக் கட்டும் பொழுது இரு 'லாஷிங்குகள்' வர வேண்டும். இதைப் புரிந்துகொள்ள படம் 2ஐப் பாருங்கள்.

இதன் பிறகு இன்னுமொரு கம்பை எடுத்து அதை மேற் கூறிய இரு கம்புகளுடன் சேர்த்துக் கட்டவேண்டும். இங்கு கவனிக்க வேண்டிய விஷயமொன்றிருக்கிறது. இந்தக் கம்பு மூன்று கம்புகளுக்கு நேர் மேலாக வரவேண்டும். இவ்வாறு செய்தால்தான் கம்புகள் ஒரு பக்கமாக சாயாமல் நேராக நிற்கும். இங்கும் இரு 'லாஷிங்'குகள் வரவேண்டும். இதே போல் இன்னுமொரு கம்பை இரு கம்புகளுக்கு நேர் மேலாக வைத்துக்கட்ட வேண்டும். படம் 3ஐப் பார்த்தால் இது நன்கு புரியும்.

இதன் பிறகு இது நிற்க நாம் 'கை' கயிறுகள் கட்டவேண்டும். இதை எப்படிக் கட்டுவது? நாம் முதலில் வட்டம் வரைந்து அதில் 3 'பெக்'குகள் பூமியில் செலுத்தியிருப்பது ஞாபகமிருக்கிறதல்லவா? இந்தக் கம்புகளை அத்துடன் சேர்த்துக் கட்டவேண்டும். இவ்வாறு கட்ட உதவும் கயிறுகளுக்குத்தான் 'கை' கயிறுகள் எனப் பெயர். இந்தக் கயிறுகளை இந்தக் கொடியேற்றும் கம்பில் எங்கு கட்டுவது? இரண்டு கம்புகளுடன் இனி வரலாமென்றே சேர்த்துக் கட்டியிருக்கிறோமோ அவர்கள் இந்த மூன்று 'கை' கயிறுகளையும் கொஞ்சம் இடம் விட்டு கட்டுங்கள். இதன் பிறகு இந்தக் கயிறுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பெக்கிலும் கட்டுங்கள். பெக்கில் கட்டும்பொழுது 'கைலேன் ஹிட்ச்' போடலாம். இது தளர்த்தவும் இறுக்கவும் உதவும். படம் 4ஐப் பார்த்தால் இந்தக் கொடியேற்றும் கம்பு எப்படி அமையுமென்பது நன்கு புரியும்.

எல்லா சமயங்களிலும் நமக்கு ஏழு கம்புகள் அகப்படுமென சொல்ல முடியாது. ஆகையால் கம்புகள் நம் வசமிருப்பதற்கு தகுந்தவாறு உபயோகிக்க வேண்டும். ஆறு மட்டுமிருந்தால் மூன்றிற்குப் பதிலாக இரு கம்புகள் உபயோகிக்கலாம்.

மேலும் ஒரே கம்பாக இருந்தால் அதை கொஞ்சம் பூமியில் புதைப்பது நலம். நமக்கு ஸ்திரமான கொடியேற்றும் கம்பு வேண்டியிருந்தால் அதை பூமியில் நன்கு புதைக்க வேண்டும்.





விவசாயி பெற்ற அற்புத நக்ஷத்திரம்

நடிகை முத்துலக்ஷ்மியுடன் பேட்டி

★

"வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் மகத்தான லட்சியம் ஏதாவது ஒன்று இருக்கும். பிறருக்கு அது சாதாரணமாகத் தோன்றலாம். ஆயினும் அவரவர் லட்சியம் அவரவர்களுக்கு உயர்ந்தது என்று தானே சொல்லவேண்டும். என்னைப் பொறுத்த வரையில் நான் கதிர்காமம் சென்று அந்த முருகப்பெருமான் சந்நிதியில் சில காலம் வசிக்க வேண்டும். முடியுமானால் வாழ்வின் இறுதி நாட்களை அங்கேயே கழித்து என் தெய்வம் முருகன் பணிக்கு என்னை ஆளாக்கி அந்த சேவையிலே பக்தியில் பாதையோடு வாழ்வின் எல்லையை எட்டிவிட வேண்டும் என்பதே எனது வாழ்க்கையின் லட்சியம்!" என்று சிரித்துக் கொண்டே ஆனால் பரிபூரண உள்ளத்துடன் உங்கள் அபிமான ஹாஸ்ய நட்சித்திரமான டி. பி. முத்துலட்சுமி கூறினார்.

அவர் கூறியதைக் கேட்டு நான் மலைத்தேன். உடனே அவர் "என்ன யோசிக்கிறீர்கள். நான் போகமாட்டேன் என்றா?" இல்லை. நிச்சயம் போகப் போகிறேன். பயப்படாதீர்கள். ஆனால், இப்பொழுதல்ல. எதற்கும் ஒரு காலம் உண்டல்லவா! அதுவரை பொறுத்திருப்பேன்!" என்றார் ஹாஸ்ய நடிகை முத்துலட்சுமி.

முத்துலட்சுமியை சாதாரணமாக வீட்டில் நீங்கள் பார்த்தால் திரையில் குறும்புத்தனமும், அட்டகாசமும் செய்யும் அந்த முத்துலட்சுமி இந்த சாதுப் பெண் என்று நினைப்பீர்கள். சமீபத்தில் கட்டி குடிபுகுந்த தனது சொந்த வீட்டில் சாதாரணமான முறையில் மிக அடக்கமாக வாழ்க்கை நடத்துகிறார் முத்துலட்சுமி. அவர் வீட்டுக்குச் சென்றால் மற்ற சினிமா நட்சத்திரங்களின் வீடுபோல் இராது. ஏதோ மதுரை, திருநெல்வேலி பிரதேசத்தில் உள்ள ஒரு பணக்கார விவசாயியின் வீட்டில் இருப்பதைப்போலவே தோன்றும். புது நாகரீகத்தின் சின்னமான சாமான்கள் ஒன்றும் அங்கே இருக்காது. வருகிறவர்களை முத்துலட்சுமியோ அல்லது வீட்டிலுள்ள மற்றவர்களோ வரவேற்று உபசரிப்பார்கள். முத்துலட்சுமி, திருநெல்வேலி பாணியில் தட்டுசுத்து புடவை கட்டிக்கொண்டு தலைமயிரை அள்ளிச் சொருகி கொண்டை போட்டுக்கொண்டு நெற்றியில் திருநீறுடன் விருந்தினரை வரவேற்பது வழக்கம்.

முத்துலட்சுமியின் வீட்டை ஒரு விவசாயியின் வீட்டுடன் ஒப்பிட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஏனென்றால் அவரது தந்தை ஒரு விவசாயி. தாய் தந்தையருக்கு முத்துலட்சுமி ஒரே பெண். தங்களுடைய ஒரே பெண் இம்மாதிரி ஒரு பெரிய ஹாஸ்ய நட்சத்திரமாவாள் என்று அந்த தாய், தந்தையர்கள் எதிர்பார்த்திருக்கவேமாட்டார்கள். அதனால் தான் குழந்தையை பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி படிக்க வைத்து காலா காலத்தில் திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்றே எண்ணினார்கள். அவ்வாறே பள்ளிக்கூடத்திற்கும் அனுப்பினார்கள். முத்துலட்சுமி ஐந்தாவது வகுப்புவரைதான் படித்தார். அவருக்குப் படிப்பைவிட வீட்டு வேலைகளிலேயே கவனம் சென்றது. முத்துலட்சுமியின் தாய் மாமன் டைரக்டர் கே. சுப்ரமண்யத்தின் கோஷ்டியில் நடிகராக இருந்தார்.

முத்துலட்சுமி பள்ளிக்கூடம் போகவில்லை என்பதைக் கேள்விப்பட்டதும், உடனே அந்த சிறுமிக்கு நடனம் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார்.

இந்தப் பெண் திரை உலகில் பிரமாதமாக சோபிப்பார் என்பதை அவர் தான் முதல் முதல் தீர்மானித்தார். ஆகவே முத்துலட்சுமியை எப்படியாவது திரைப் படத்தில் நடிக்க வைக்க வேண்டுமென்று முயற்சி செய்தார். அவரது முதல் முயற்சியே பலனைத் தந்தது. முத்துலட்சுமிக்கு ஜெமினி ஸ்டுடியோவில் வேலை கிடைத்து விட்டது. சந்திரலேகாவில் அவர் நடித்துள்ளார். ராஜகுமாரிக்கு மாற்று வேஷத்தில் நடிப்பவர் முத்துலட்சுமி தான். ஜெமினியில் முத்துலட்சுமி ஒரு வருஷம் இருந்தார். இந்த ஒரு வருஷத்தில் நடிப்பு கலையில் அவருக்குப் போதுமான அனுபவம் ஏற்

பட்டது. அடுத்தபடியாக அவர் நடித்த படம் மகாபலி.

தன்னுடைய ஆரம்பகால நடிப்பைப் பற்றி முத்துலட்சுமி கூறுகையில் "பொன்முடியில் ஏழுமலையுடன் தான் நடித்ததையும், பிறகு மந்திரிகுமாரி, வளையாபதி, கல்யாணி ஆகிய படங்களில் நடித்ததைப்பற்றியும் சிறப்பாகக் கூறினார். முத்துலட்சுமி இதுவரை சுமார் நாற்பது படங்களில் நடித்துள்ளார். இவைகளில் ஏழெட்டு தெலுங்குப் படங்கள். அவைகளில் அவரே தெலுங்கில் பேசி நடித்துள்ளார்.

"நீங்கள் நடித்த படங்களில் சிறந்த படம் எது?" என்று கேட்டதற்கு "மகேஸ்வரி!" என்று பதில் சொன்னார் முத்துலட்சுமி.

'பொன்முடி'யில் நான் நடிக்கும் போது எனக்கு வயது 14. எனக்கு ஒன்றுமே தெரியாது. நடிக்கவேண்டும். புகழ் பெறவேண்டும் என்ற ஆர்வம் மட்டும் இருந்தது. ஆனால் பயப்படவில்லை தைரியமாக நடித்தேன். ஏனென்றால் நான் ஒரு முக்கிய பாத்திரமேற்று நடிக்கும் முதல் படம் அது. இப்படத்தில் நடிக்கும்போது எனக்கு தைரியமும், உற்சாகமும் அளித்தவர் மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி. ஆர். சுந்தரம் அவர்கள் தான். அவர் அன்று எனக்கு ஊக்கம் அளித்திராவிட்டால் இன்று உள்ள நிலைமையை நான் அடைந்திருப்பேனோ என்னவோ? அவரை நான் என் தெய்வம் போல் போற்றுகிறேன்' என்றார்.

"சினிமாவில் நடிக்க வேண்டுமென்று நீங்களே விரும்பினீர்களா அல்லது யார் தூண்டுதலின் மேலாவது வந்தீர்களா?"

"எனக்கே படங்களில் நடிக்க வேண்டும் என்ற ஆசை. அந்தக் காலத்தில் வந்த படங்களைப் பார்ப்பேன். அதிலுள்ள நடிகையரைப்போல் நாமும் நடிக்கவேண்டும் என்று ஆவல் என் மனத்தில் எழும்!"

"உங்களுக்கு சங்கீதம் தெரியுமா?"

"சுமாராகத் தெரியும். முன்பு நானே பாடிக் கொண்டிருந்தேன்!"

"நடனக் கலையில் உங்களுக்கு ஆர்வம் உண்டு என்றீர்களே. மேடை மீது நடனமாடுவதுண்டா!"

"கிடையாது. ஆனால் குமாரி கமலா, லலிதா பத்மினி நடனங்களைப் பார்ப்பதில் எனக்கு ஆசை உண்டு!"

"சங்கீதக் கச்சேரிகளுக்குப் போவதுண்டா?"

"மதுரை மணி அய்யர், கே. பி. சுந்தராம்பாள் கச்சேரிகளை தவறாமல் போய் கேட்பேன். இப்பொழுது எங்கே நான் போனாலும் கூட்டம் கூடி விடுகிறது. அதனால் இங்கேயே ரேடியோவில் அவர்கள் பாடல்களைக் கேட்பேன்!"

"உங்களுக்குப் பிடித்தமானது எது?"

"என்னைப்பற்றி பாரபட்சமற்ற முறையில் விமர்சிப்பது எனக்குப் பிடிக்கும்!"

"உங்களுக்குப் பிடிக்காதது?"

"புகழ்வது? அழுவது, வேஷம் போடுவது, பொய் சொல்வது இவை எனக்குப் பிடிக்காது!"

"உங்களுக்கு எதில் நம்பிக்கை?"

"என் கடவுள் முருகனிடம்?"

"உங்களுக்குத் தெரிந்தது எது?"

"ஒன்றுமில்லை. தெரியாதது தான் அதிகம். என்னைப்பற்றியே நான் சிரத்தை எடுத்துக்கொள்வதில்லை. சகலமும் மாமாவின் பொறுப்பு. நான் எதிலுமே தலையிடுவதில்லை!"

"நீங்கள் படம் பார்ப்பதுண்டா?"

என்னுடைய படங்கள் ஒவ்வொன்றையும் தவறாமல் பார்ப்பேன். என்னிடம் உள்ள குறைகளை நான் திருத்திக் கொள்ள இது உதவியாக இருக்கிறது!"

"உங்களுக்கு மணமாகிவிட்டதா?"

"இல்லை. ஆனால் ஐந்து குடும்பங்களை நான் நிர்வகித்து வருகிறேன்!"

"உங்களுக்குப் பிடித்தமான நடிக நடிகையர் யார்?"

"என். எஸ். கே. மதுரம்! இவர்கள் நடிக்கும் படங்களைப் பார்க்கத்தவறவே மாட்டேன்!"

"பாடத் தெரியும் என்றீர்களே, ரேடியோவில் பாடுவது தானே?"

"பாடுவதில்லை. ரேடியோ நாடகங்களில் பங்கெடுத்துக்கொள்கிறேன். ஆனால் இதைப்பற்றி ஒன்று கூறவேண்டும் என்பது எனது விருப்பம். ரேடியோ நாடகங்களுக்கு பிரபல நடிக நடிகையரை கூப்பிடாமல் ஆரம்ப கால நடிக நடிகையருக்கு சந்தர்ப்பம் அளித்தால் அதனால் பயன் உண்டு என்பது என் கருத்து!"

"நீங்கள் சொந்தத்தில் படம் எடுக்க உத்தேசம் உண்டா?"

"நிச்சயமாக கிடையாது?"

"தற்போதைய தமிழ்ப் படங்கள் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?"

"பெருமைப்படக் கூடியதாக ஒன்றும் இல்லை. தமிழ்க் கதைகளை படம் எடுக்க யாரும் முன் வருவதில்லை. தெலுங்கை டப் செய்வார்கள். மராட்டி படத்தை வாங்கி தமிழாக்குவார்கள். தமிழில் நல்ல கதைகளைக் கொண்டு படம் எடுக்கவே தயங்குகிறார்களே! அதுதான் பரிதாபம்!

கையைப் பிடித்துப்பார்க்கும் இவர் வைத்தியரல்ல. டீலக்ஸ் பிலிம்ஸ் 'நியூ டில்லி' என்ற படத்தில் வைஜயந்தி மாலாவின் கை பிடித்து காதல்புரியும் கிஷோர் குமார்.

“நல்ல கதை இல்லாததால் தான் தமிழ்ப் படங்கள் தோல்வி அடைகின்றன என்பது உங்கள் அபிப்பிராயமா?”

“நிச்சயமாக! சுவரை வைத்துக் கொண்டு தானே சித்திரம் எழுத வேண்டும். கதையில்லாமல் சும்மாவாவது நட்சத்திரங்களைப் போட்டு என்ன பிரயோசனம்?”

“இதர பாஷைப் படத்தை தமிழில் ‘டப்’ செய்வது பற்றி உங்கள் கருத்தென்ன?”

“நல்ல படமெடுக்க கையாலாகாதவர்கள் செய்யும் காரியம் இது! ஏன் தமிழில் கதை எழுதும் எழுத்தாளன் இல்லையா? பாட்டு எழுத ஆள் இல்லையா, நடிக நடிகையர் தான் இல்லையா? தமிழ் நாட்டுத் திறமையை படத் தயாரிப்பாளர்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ளவில்லை. அன்னிய மோகம் நம்மிடையே அதிகம் நிலவுகிறது!”

“உங்களிடம் தமிழ் உணர்ச்சி நிறைய இருக்கிறது” என்றேன்.

“ஞாபகம் இருக்கட்டும். நான் திருநெல்வேலி சீமையைச் சேர்ந்தவள். ஆத்துக்குடி என் சொந்த ஊர். தமிழச்சி என்று கூறிக் கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன் என்றார். அப்பொழுது இருந்த அவரது முகபாவமும், பேச்சும், தோற்றமும் பண்டைய பாண்டிய நாட்டு வீரப் பெண்மணிகளை நினைப்பூட்டியது.”

முத்துலட்சுமி இப்பொழுது பத்து படங்களில் நடித்து வருகிறார். படப்பிடிப்பென்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு போய் விடுவார். பொது விஷயங்களில் கலந்துகொள்வதில் அவருக்கு ஆர்வமுண்டு. பொதுமக்களுடன் பழகும் சந்தர்ப்பத்தை நான் வரவேற்கிறேன். நான் மக்களுக்காக வாழ்கிறேன். அவர்களை விட்டு விலகி நிற்க விரும்பவில்லை” என்றார் முத்துலட்சுமி. வாஸ்தவம்தான். தமிழ்ப் படங்கள் பெரும்பாலானவற்றில் நடிக்கும் முத்துலட்சுமி எப்படி பொது மக்களிடமிருந்து தனித்து நிற்க முடியும்?

“நம் கடமையை நாம் ஒழுங்காகச் செய்ய வேண்டும். நம்மிடம் உள்ள குறைகளை நாமே திருத்திக்கொள்ள வேண்டும். என் பணி நடிப்புக் கலை” என்று முத்துலட்சுமி இந்த பேட்டிக்கு முத்தாய்ப்பு வைத்தார்.

ஃ ஃ ஃ

மார்க்கண்டேயா

டைரக்டர் பி. எஸ். ரங்கா தன்னுடைய மூன்று பாஷைப் படமான ‘மார்க்கண்டேயா’வை மளமளவென்று பாதிக்கு மேல் எடுத்துவிட்டார். இன்னும் இரண்டு மாதங்களில் இப்படம் திரைக்கு வந்துவிடும். புஷ்பவல்லி, நாகையா, பாபுஜி மற்றும் பல நட்சத்திரங்கள் இதில் நடிக்கின்றனர். இப்படத்தின் டைரக்ஷனில் ஸ்ரீ முருகதாஸா பெரும் பொறுப்பு வகித்து வருகிறார்.

சாரங்கதரா

ரேவதியிலேயே தயாராகும் மற்றொரு படமான ‘சாரங்கதாரா’ பாதிக்கு மேல் ஆகிவிட்டது. எடுத்துள்ள வரை படம் மிக நன்றாக இருப்பதாக சம்பந்தப்பட்ட ஒருவர் கூறினார்.

மாமா வீரனான ஸ்ரீராம் இப்படி விசிறி வீரனாக மாறியிருக்கிறார் ஆனந்தா புரொடக்ஷன்ஸ் ‘மறு மலர்ச்சி’யில். பக்கத்தில் அமர்ந்திருப்பவர் கதாநாயகி வரலக்ஷ்மி.

கலைஞர்களுக்கு கௌரவம்

ஆந்திர சர்க்கார் தங்கள் ராஜ்ய ஸ்தாபன தினத்தன்று பிரதி வருஷமும் சிறந்த கலைஞர்களை கௌரவிப்பதென்று முடிவு செய்துள்ளது. இவ்வருஷம் ஸ்தானம் நரசிம்ம ராவும், ஸ்ரீமதி பானுமதியும் கௌரவிக்கப்படுவார்கள். ஸ்ரீமதி பானுமதியின் தந்தை சென்ற வாரம் தெனாலியில் காலமானார். அவரது பெயர் பி. வெங்கட சுப்பையா.

பூலோக ரம்பை

ரேவதியின் மற்றொரு அரங்கத்திலே அசோகா பிக்சர்ஸாரின் ‘பூலோகரம்பை’க்காக அஞ்சலி, வீரப்பா, ஸி. கே. ஸரஸ்வதி, சாயிராம் ஆகியோர் நடிக்கும் காட்சியொன்று படமாக்கப்பட்டது. வீரப்பா வீர கேசரியாகவும், சாயிராம் அவரது மந்திரியாகவும், சரஸ்வதி மந்திரக்காரியாகவும் நடித்தனர்.

பூலோகரம்பை பாதிக்கு மேல் வளர்ந்து விட்டது. இரண்டு மூன்று ஸ்டுடியோக்களில் இப்படம் எடுக்கப்பட்டு வருகிறது.

சசிரேகா பரிணயம்

விஜயா ப்ரொடக்ஷன்ஸாரின் மகத்தான இரு பாஷை தயாரிப்பான “சசிரேகா பரிணயம்” திட்டமான முறையில் தயாராகி வருகிறது. சென்ற வாரம் ஏழுமலை, கருணாநிதி ஆகியோர் நடிக்கும் ஹாஸ்யக் காட்சிகள் படமாக்கப்பட்டன. என். டி. ராமராவ், ஜெமினி கணேசன், ரங்க ராவ், சாவித்திரி ஆகியோர் கிருஷ்ணன், அபிமன்யு, கடோத்கஜன், சசிரேகா ஆகியோராக நடிக்கின்றனர்.

சக்கிரவர்த்தி திருமகள்

“சக்கரவர்த்தி திருமகள்” என்ற படத்தை தீபாவளியன்று வெளியிட்டு விடுவதென்று தயாரிப்பாளர்கள் தீர்மானித்துள்ளனர். எம். ஜி. ராமச்சந்திரன், அஞ்சலி இருவரும் முக்கிய பாகத்தில் நடிக்கும் இப்படத்தை ப. நீலகண்டன் டைரக்ட் செய்துள்ளார்.

நகர அரங்கம்

சென்னை இறக்குமதி உதவி கண்ட்ரோலர் ஸ்ரீ ஒய். ஜி. பார்த்தசாரதி தலைமையில் அருணா நாடகச் சங்க அங்கத்தினர்கள் கடந்த 23–ந் தேதி "சாந்தி" என்கிற தமிழ் சமூக நாடகத்தை செயிண்ட் மேரீஸ் ஹாலில் நடித்தனர்.

"கடமையானாலும், கட்டளையானாலும் அதற்குமோர் எல்லையுண்டு. அந்த எல்லையை மீறும்போது நல்ல செயலும் தீமையை விளைத்து நாசத்துக்கு வழி செய்யும்" என்ற படிப்பினையை புகட்டும் இந்நாடகக் கதையை எழுதியவர் "வேத–கலைமணி" (ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி பி. ஏ. ஹானர்ஸ்). முன்பு அவர் எழுதியதும், இதே சங்கத்தினரால் நடிக்கப்பட்டதுமான "மனித உள்ளம்" என்கிற நாடகத்துடன் ஒப்பிடுமிடத்து, இதன் வசனங்கள் மிகவும் லகுவான நடையில் ஓடுகின்றன. ஜோஸியத் தொழிலையும், வைதீகப் பிராம்மண சமூகத்தையும் ஒரே தராசில் எடை போட்டு கதாசிரியர் மட்டம் தட்டியிராமலிருந்தால் நாடகத்தின் பண்பு எவ்வளவோ மேம்பட்டதாக இருக்கும்.

ஜோஸிய சாஸ்திரியாகத் தோன்றியவருக்கு வேஷம் வெகு நன்றாக பொருந்தியிருந்தது. அவருடைய பேச்சும், நடிப்பும் கனகச்சிதம்.

சேகராக வந்தவர் நல்ல நிதானத்துடன் நடித்தார். வில்லன் 'கோதண்டம்' மிடுக்காக நடைபோட்டு அனாயசமாக வார்த்தைகளை அள்ளி வீசினார். ராகவன் பாகமேற்றவர் நடிப்பில் நயம் போதாது. ஆனால் கூடிய மட்டில் உழைத்து நடித்தார்.

'சாந்தி'யாக நடித்தவர் கதாநாயகி பாகத்துக்கு ஏற்கவில்லை. 'காந்தா'வாக தோன்றியவர் பரவாயில்லை. சாந்தியின் தந்தைக்கு 'மேக்கப்' சரியாக இருந்தது. ஹாஸ்ய பாகமேற்றவர் அனாவசியமாக உடலை வளைத்து ஒடித்து மிகைப்பட நடித்தார். அவருடைய பேச்சு தேவலை.

காட்சி ஜோடனைகள் நேர்த்தியாக விளங்கின. இசை அமைப்பும் நாடகத்துக்கு களையூட்டியது. தலைமைவகித்த ஸ்ரீ பார்த்தசாரதி நடிகர்களின் திறமையைப் பாராட்டினார்.

ஃ ஃ ஃ

ஸ்ரீ எஸ். டி. எஸ். யோகி தயாரித்த "பவானி" என்கிற நடன நாடகம் சென்னை சர்க்கார் செய்தி, விளம்பர இலாகா ஆதரவில் எழும்பூர் மியூஸியம் தியேட்டரில் செப்டம்பர் 24ந்தேதி நடைபெற்றது.

ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டத்தில் பவானி அணைத் திட்டத்தைப் பற்றிய பிரசார நாடகமாகும் இது. அத்திட்டத்தினால் தங்கள் கிராமம் சுபிட்சநிலை அடையும்வரை காதல் ஜோடி ஒன்று காத்திருந்து கடைசியில் கல்யாணம் செய்து கொள்வதை நூலிழைக் கதையாக பிடித்துக்கொண்டு நாடகம் வெகு வேகமாக ஓடி நின்றது. ஸ்ரீ டி. எம். ராமஸ்வாமி பிள்ளையின் சிஷ்யை டி. டி. குசலகுமாரியின் குழுவினர் அழகாக இந்நடன நாடகத்தை ஆடிக் காட்டினர்.



ஸ்ரீ கோமதி சுவாமிநாதன் எழுதிய "புயலும் தென்றலும்" என்னும் நாடகம் "பெரம்பூர் அமெச்சூர்ஸ்" குழுவினரால் செப்டம்பர் 12-ந் தேதி சென்னை மேயர் ஸ்ரீ ராமநாதய்யர் தலைமையில் அண்ணாமலைமன்றத்தில் நடிக்கப்பட்டது.

ஐந்தாண்டு திட்டத்தை நூதன முறையில் பிரசாரம் செய்ய சர்க்கார் விளம்பர இலாகா மேற்கொண்ட முதல் முயற்சியாகும் இந்நடன நாடகம். எதிர் பிரசாரம் வலுத்துவரும் இந்நாட்களில் சர்க்கார் இத்தகைய பிரசார ஏற்பாடுகளை இன்னும் சிறப்பாக நடத்த வேண்டியதன் அவசியத்தை மந்திரிகள் ஸ்ரீ பக்தவத்ஸலமும், ஸ்ரீ சுப்பிரமணியமும் இடைவேளையின்போது பேசுகையில் வற்புறுத்தினார்கள். விளம்பர இலாகா டைரக்டர் ஸ்ரீ திரவியம் கூடியிருந்தோரை வரவேற்றார். குசலகுமாரிக்கு இலாகா சார்பாக வெள்ளிக் குத்து விளக்கு ஒன்றை மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் பரிசளித்தார்.

ஃ ஃ ஃ

சென்னை அமெச்சூர் போட்டோகிராபிக் சங்கத்தினரால் ஒரு வாரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரண்டாவது சர்வதேச புகைப்பட கண்காட்சியை காண பார்க் டவுன் மெமோரியல் ஹாலில் தினம் ஏகக் கூட்டம். பதினோராவது சென்னைப் புகைப்பட கண்காட்சியுமான இதில் சுமார் 200 படங்கள் இடம் பெற்றுள்ளன. 22ந் தேதி ஸ்ரீ எஸ். கே. செட்டூர் ஐ. ஸி. எஸ். கண்காட்சியை திறந்து வைத்துப் பேசுகையில் புகைப்படம் எடுப்பது உண்மையில் ஒர் நுண் கலையே என்று வருணித்தார். மேல் சட்டசபைத் தலைவர் டாக்டர் பி. வி. செரியன் தலைமை வகித்து பரிசுகளை வழங்கினார். "வனப்புள்ள வானம்" என்கிற புகைப் படத்தை எடுத்து "மித்திரன்" புகைப்பட நிபுணராயிருந்த ஸ்ரீ பி. ரங்கநாதன் முதல் பரிசைப் பெற்றார். இதர பரிசுகள் ஜெர்மனி, சீனா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றுள்ளன.

ஃ ஃ ஃ

திருவையாறு ஸ்ரீ தியாகராஜ ஆராதன உத்ஸவம் உதவி நிதக்காக ஸ்ரீ த்யாக பிரும்ம கான சபை ஆதரவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சங்கீத விழா தியாகராயநகர் வாணி மஹாலில் கடந்த 16ந் தேதி ஆரம்பமாகியது. ஸ்ரீ தியாகராஜரின் உருவப்படத்துக்கு பூஜையானதும் அரியக்குடி ஸ்ரீ ராமானுஜ அய்யங்கார் சங்கீதக் கச்சேரி புரிந்து முதல் நாள் விழாவை சிறப்பித்தார். பாபா வெங்கடராமையாவும், பாலக்காடு ஸ்ரீ மணி அய்யரும் பக்க வாத்தியங்கள் வாசித்தனர். அடுத்த மாதம் 21ந் தேதி வரை விழா நடைபெறுவதாக உள்ளது.

ஃ ஃ ஃ

ஸ்பஷ்ட கான கலாமணி ஸ்ரீமதி சுலோசனா மஹாதேவனின் முதல் சிஷ்யை குமாரி சாந்தாவின் சங்கீதக் கச்சேரி அரங்கேற்றம் திருவல்லிக்கேணி மஹாத்மாஜி சேவா சங்கத்தின் பாலிகா கழகத்தின் ஆதரவில் சமீபத்தில் நடைபெற்றது. நாட்டிய நடிக திலகம் ஸ்ரீமதி நீலா பாலசுப்பிரமண்யத்தின் புதல்வி அவர்.

—ஸஞ்சாரி.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் கீர்த்தனைகள்

சங்கீத கலாநிதி டி.எல். வேங்கடராமய்யர் உதவியது

ஸ்வரப்படுத்தியவர் ஸ்ரீ அரியக்குடியின் சிஷ்யரான ஸ்ரீ பி. ராஜம் அய்யர் அவர்கள்

பல்லவி

ஸூர்ய மூர்த்தே நமோஸ்துதே
ஸுந்தரச்சாயாதிபதே (ஸூர்ய)
3 3 4

அநுபல்லவி

கார்ய காரணாத்மக ஜகத் ப்ரகாச
3
ஸிம்ம ராச்யாதிபதே
4

மத்யம காலம்

ஆர்யவிநுத தேஜஸ்பூர்த்தே
2
ஆரோக்யாதி பலதகீர்த்தே (ஸூர்ய)
3 3 2 3

சரணம்

ஸாரஸ மித்ர மித்ரபாநோ
4
ஸஹஸ்ர கிரண கர்ணஸூநோ
க்ரூர பாப ஹரக்ருசாநோ
குருகுஹ மோதித ஸ்வபாநோ
3 3 3 4
ஸூரிஜனேடித ஸுதினமணே
3 3
ஸோமாதி க்ரஹ சிகாமணே
3 3 2
தீராரர்ச்சித கர்மஸாக்ஷிணே
4
திவ்யதர ஸப்தாச்வ ரதினே
3 2

மத்யம காலம்

ஸௌராஷ்டார்ண மந்த்ராத்மகே
ஸௌவர்ண ஸ்வரூபாத்மனே
பாரதீச ஹரிஹராத்மனே
4
4
புக்தி முக்தி விதரணாத்மனே. (ஸூர்ய) (32)

அழகு வாய்ந்தவரும், சாயாதேவியின் அதிபரும், கார்யகாரண வடிவான உலகைப் பிரகாசம் செய்பவரும், ஸிம்ம ராசியின் அதிபரும், பூஜிக்கத் தகுந்தவர்களால் துதிக்கப் படும் தேஜஸை உடையவரும், ஆரோக்கியம் முதலிய பலனைக் கொடுக்கும் கீர்த்தி வாய்ந்தவரும், தாமரையின் தோழரும், ஆயிரம் கிரணங்களை உடையவரும், கர்ணனைத் தநயனாகக் கொண்டவரும், கொடிய பாபங்களைப் போக்குபவரும், குருகுஹன் ஸந்தோஷிக்கும் ஸ்வபானு எனவும், புத்திமான்களால் பூஜிக்கப்பட்ட சிறந்த "தினமணி" எனவும் கூறப் படுபவரும், சந்திரன் முதலிய கிரகங்களுள் சிறந்து விளங்குபவரும், தீரர்களால் பூஜிக் கப்படுபவரும், செய்யும் வினைகளுக்கு ஸாட்சியாக இருப்பவரும், சாலச்சிறந்த ஏழு குதிரைகள் பூட்டிய ரதத்தை உடையவரும், மந்திர விசேஷத்தை ஸ்வரூபமாகக் கொண்ட வரும், தங்கவடிவுடையவரும், பிரம்மா, விஷ்ணு, ருத்ரஸ்வரூபமானவரும், யோகம், மோக்ஷம் இரண்டையும் கொடுக்கவல்லவரும் ஆகிய ஸூர்யமூர்த்தியே உனக்கு நமஸ்காரம்.

ராகம் : ஸௌராஷ்ட்ரம். (17-வது மேளத்தில் ஜன்யம்) — த்ருவ தாளம்.

இதில் வரும் 2 நிஷாதங்களையும் லக்ஷ்யத்தில் அறியவேண்டியது.

I	O	I	I

பல்லவி

1. பம தப பம கம	மக\ஸரீ	ரிக ரீஸ ஸநி ஸாரிஸ	நிஸ ஸநிதா தநிதப
ஸூ . . . ர்ய. மூ.	. . . .	ர்த்தே. . க . மோ. .	. . ஸ்து. . தே. . .
தா நீ ஸரிஸா நிஸரிஸ	ரீ ;	கா ; மா. த பா, ம	மக\ஸரீ ஸா கம
ஸூர் த . . . ர	. .	ச்சா யா.	தி. . ப தே. . .
2. பா, த தநீத பா, ம		‖	
ஸூ.. . . . ய. . மூ.	ர்த்தே	‖	

அநுபல்லவி

மா, க மா, ப கம	மக\ஸரீ	/மா, க மா/பா பம	/நித பா : பா, த
கா. . ர்ய கா.		ஞ. . . த்மக.	ஐ கத் ப்ர. .
பபம ; க, மா /பா	ம	தா ; தநீத பா, ம	கம மகஸா ரீ ;
கா. . . . ச் ஸி	ம .	ரா . ச்யா.	தி ப. . தே.

மத்யம காலம்

ஸா நி தநி ஸரி கம	பம/தா	த ப/ஸ்ா ஸ்\ப பா	பம தபம கரிகம
ஆ . ர்யவி நுத தே.	ஐஸ் பூ	ர்த்தே. ஆ ரோ. க்யா	தி. பலத கீ ர்த்தே.

(ஸூர்யமூர்த்தே)

சரணம்

ஸ்ா ; ஸ்நி ஸ்ா	ஸ்நிதா தநீத	பா பமதபபம	கம மக\ஸரீ ;
ஸா . ர ஸ	மி.	த்ர மி. . . த்ர .	பா. . . . நோ.
நிஸ ஸநிதா ; தா	தஸாநி ஸரிஸா	/ரீ கா மப மா, ப மக\ஸரி	/மா, க மா பா ;
ஸ . ஹ . ஸ்ர	கி . . ர . .	ண க . . . . . ர்ண. . .	ஸூ. . . நோ.
கா ; மா பம	பா பம	கம மப க கா கம	மக\ஸ ரீ, க ரிஸஸா ;
க்ரு ர பா.	. ப .	ஹ. ர . . . க்ரு.	சா. . . . ஞே. . .
\ஸா ஸ ரி கா மா	பா பம	தா தநீதபா பம	கம கரிகமபா
கு ரு . கு ஹ	மோ. .	தி த . . . ஸ்வ.	பா. . . ஞே .
பம தப பம கம	ம க\ஸரீ	மகமா பா தா	நிஸ் ஸ்நிதா தநீத பா
ஸூ . . ரி ஜ.	னே. . .	டி . த ஸூ தி	ன . ம . . ணே. . .
கா ; மா, ப	மகஸா ஸரி	கா மா பா பம தா	; ஸ்நிக்ரி ரிஸ்ஸ்ா ;
ஸோ மா. . .	தி. . . .	க்ர ஹ ஸி கா. .	. ம . . மே. . .
ரி ஸ்/ரி ஸ்ா நி	ரி ரி ஸ்ா	தரிஸ்நி தா /ரி ஸ்ாரிஸ்	நிஸ் ஸ்நிதா தநீத பா
தி . . ரா. .	ர்ச்சி த	க . . . . ர்ம ஸா . .	. . க்ஷி . ணே .
பமதப பம கம	கஸரீ	நிஸா ஸநிதா ரிஸ	ரீ ரீ. பமா, ப மகஸா ரி
தி. . . வ்ய. த.	ர . .	ஸ . ப்தா. . ச்வ.	ர தி. . . . . னே. .

மத்யம காலம்

ஸா ஸநிதா ரிஸரி ஸ	ரிகம க	மா, ப மகஸா ரீரீ	கா, மா. பா ; த பா ;
ஸௌரா . . ஷ்டா . ர்ணமங்	. த்ரா . த்ம	னே . ஸௌ. . வர்ண	ஸ்வ ரூ பா , த்ம னே.
தா ரி ஸ்ா ரி ஸ் ரி	க்ம்\ரீ, ஸ்	ஸ்நிதா தாதரிஸ்ா ஸ்நிதா ப	மதப பபமக ரிகம
பா ர தி ச ஹ ரி	ஹ. ரா. த்ம	னே.. பு . . க்தி மு. . க்தி	வி த ர ண . . த்மனே.

(ஸூர்யமூர்த்தே)

'நன்னம்பிக்கை' யில் சோகசிகரமாக விளங்கும் பண்டரிபாய்

Regd. No. 2514.
Registered as a Newspaper in CEYLON.
The Swadesamitran Weekly.

அஞ்சலி தேவி
எப்பொழுதும்
லக்ஸ்
டாய்லெட்
சோப்
உபயோகிக்கிறார்

"—நானறிந்த சோப்புகளில் மிகவும் தூய்மையான வெண்ணிற சோப்!"

அவர் வாக்கை நீங்கள் தயங்காமல் ஏற்றுக் கொள்ளலாம். லக்ஸ் டாய்லெட் சோப்பின் பூரணமான வெண்மை அதன் தூய்மையைப் பிரதிபலிக்கிறது—உங்கள் மேனியின் பூப்போன்ற பராமரிப்புக்கு அதுவே அடையாளம்! லக்ஸின் நுரையை என்னென்பது! நறுமணம் கமழும் மென்மையான லக்ஸ் நுரை உங்கள் சருமத்தைப் பரிபூரணமாக சுத்தம் செய்து, உன்னதமான புதுமையுடன் மிளிரச் செய்கிறது. சிக்கனத்தை உத்தேசித்து பெரிய சைஸ் வில்லையை வாங்க மறவாதீர்கள்!

சினிமா நட்சத்திரங்களின்
அழகு
தரும் சோப்

இந்தியாவில் தயாரித்தது

LTS. 485-X52 TM

Printed and Published by N. Rajagopalan, at the 'Swadesamitran' Press, 'Victory House' Mount Road, Madras. Editor: C. R. Srinivasan, B. A.